Follow us:

வாரவெளியீடு

# தமிழன்


THAMILAN WEEKLY

தமிලන් සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 54- பிலவ வருடம், ஆனி மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (04.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 22 0115886187 பக்கங்கள் 20 விலை ரூ.40

## 'வெடி'மணியம்



"ஈழத்தமிழர்களுக்கான வெளியுறவுக் கொள்கை" ஏதும் இருக்கோ எண்டு விசாரிச்சால்;

ஆருக்கும் அதைப்பற்றி தெரியுதில்லை!

கூட்டமைப்புக்குள்ள இருக்கிற கட்சிகளுக்குள்ளையே ஒரு "தெளிவு" இல்லை. ஆளாளுக்கு ஒரு திசையில இழுபட்டுக்கொண்டு திரியினம்!

கஜேந்திரகுமாருக்கும் அவற்ற கட்சிக்கும் தனிப்பட்ட ஒரு கொள்கை. விக்கினேஸ்வரனுக்கு இன்னொண்டு!

டக்ளசுக்கு தான் இருக்கிற பேரினவாத கட்சி என்ன கொள்கையோ அதுதான் அவற்ற வெளியுறவுக்கொள்கை!

இப்ப என்னத்துக்கு திடீரெண்டு மணியத்தார் "வெளியுறவுக்கொள்கையை" பற்றி புலம்புறார் எண்டு நினைப்பியள்.

தற்கால பூகோள அரசியல் சுனாமியில ஈழத்தமிழர்களுக்கு எண்டு ஒரு வரையறுக்கப்பட்ட தெளிவான 07

## நக்கல் நமசிவாயம்



அரசாங்கம் உலக நாடுகளிட்ட கடன வாங்குறது தான் வாங்குது... உதில எங்களுக்கும் கொஞ்சத்தை தந்தா என்ன குறைஞ்சா போயிடும்... நாங்களெல்லோ உதுகள திருப்பி கட்டப் போறம்....

# எம்.பி.யாக பதவியேற்கும் பெசிலுக்கு நிதியமைச்சு!



## 8 ஆம் திகதி மாலை அமைச்சு பொறுப்பேற்பு; போர்ட்சிட்டியுடன் முக்கிய துறைகள் அதன் கீழ்

• நமது விசேட செய்தியாளர்

எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ நிதியமைச்சராகப் பதவியேற்பாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

எட்டாம் திகதி காலையில் எம்.பி.யாக பதவியேற்கும் அவர் அன்று மாலையே அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார். நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்ற ரீதியில் அவரின் அமைச்சு இயங்குமென தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை நிதியமைச்சராகப் பதவி வகித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியுடன் சேர்த்து வீடமைப்பு நகர அபிவிருத்தி, பௌத்த சாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஆகிய பதவிகளையும் பொறுப்பேற்பார்.

பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்கு வழிவிடும் வகையில் ஆளுங்கட்சியின் தேசியப்பட்டியல்... 02



உள்ளே

## 3 நாடுகளிடமிருந்து 215 கோடி டொலரை கடனாகப் பெறுகிறது இலங்கை அரசு

நாட்டில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு குறைந்துள்ளதால் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு அடுத்த இரண்டு மாதங்களில் மூன்று நாடுகளிடமிருந்து 215 கோடி அமெரிக்க டொலரை கடனாக பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியாவிடமிருந்து அமெரிக்க டொலர் 40 கோடியும், பங்களாதேஷிடமிருந்து அமெரிக்க டொலர் 25 கோடியும், சீனாவிடமிருந்து அமெரிக்க டொலர் 150 கோடியும் கடனாகப் பெறப்படவுள்ளது. இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிடம் பெறும் கடன் குறுகிய காலக் கடன்களாகும். அதேசமயம் சீனாவிடமிருந்து பெறுவதை நீண்டகாலக் கடனாக வரையறுக்க அந்நாட்டிடம் கோரிக்கை... 02

## அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்; விமல், கம்மன்பிலவுக்கு புதிய பதவிகள்



அமைச்சரவையில் உடனடி மாற்றமொன்றை செய்யத் தயாராகி வருகிறது அரசு.

விரைவில் நடக்கவுள்ள இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சர்கள் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட பலரின் அமைச்சுப் பொறுப்புகள் மாற்றப்படவுள்ளன.

அதேசமயம் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.

இம்முறை அமைச்சு மாற்றத்தின்போது, கடந்த 20 ஆவது அரசியலமைப்பு... 02



## மாகாணங்களுக்கிடையிலான பிரயாணத்தடை நாளை நீக்கம்?

• ம.சசிதரன்

மாகாணங்களுக்கிடையில் அமுலிலுள்ள பயணக்கட்டுப்பாட்டை நாளை திங்கட்கிழமை முதல் நீக்க ஆலோசிக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

சில நிபந்தனைகளுடன் இவ்வாறு தடை நீக்கத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கிடையில் பயணக்கட்டுப்பாடு தொடர்வதால் வெளியிடங்களிலுள்ள நோயாளர்கள் மற்றும் இதர அத்தியாவசியத் தேவைகளுக்காக பிற இடங்களுக்கு செல்லவுள்ளோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதை கருத்திற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை கூடிய கொவிட் தடுப்பு செயலணி இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதாக அறியமுடிந்தது.




அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, பாண் ஒன்றைக் கையிலேந்தியபடி குரலெழுப்பும் பெண்மணியொருவர். (படப்பிடிப்பு எஷான் தசநாயக்க)

## தங்கத்திற்கான தட்டுப்பாட்டால் அதன் விலையில் திடீர் உயர்வு!

### நாட்டின் பொருளாதார நிலைமையால் ஏற்பட்ட தாக்கம்

றிப்தி அலி

நாட்டில் தங்கத்திற்கு நிலவுகின்ற பாரிய தட்டுப்பாடு காரணமாக தங்கத்தின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக நகைக் கடைகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். 02



## பாலியல் தொழிலுக்காக 15 வயது சிறுமி விற்பனை

### கப்பல் கெப்டன் ஒருவரும் கைது

கல்கிஸையில் 15 வயது சிறுமியை பாலியல் தொழிலுக்காக இணையத்தளத்தினூடாக விற்பனை செய்த விவகாரம் தொடர்பில் மேலுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 02

**ஜூனியர் தமிழன் சிறுவர் சஞ்சிகை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தனி வார இதழாக வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம். (ஆ-ர் )**

## கொரோனா டெல்ட்டா திரிபுடன் மேலும் 14 பேர் கண்டுபிடிப்பு

• ம.சுசிகலா

கொரோனா வைரஸின் இந்திய திரிபான டெல்ட்டா தொற்றுடன் 14 பேர் கொழும்பு, திருகோணமலை , காலி , மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொலன்னாவ மற்றும் அங்கொட பகுதிகளில் டெல்ட்டா தொற்றுடன் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02




MySLT APP

இப்போது அனைத்து SLTMobitel சேவைகளுக்கும் MySLT APP ஊடாக ஒரே தடவையில் பிரவேசிக்கலாம்.

/ Usage Reports உடன் பில் பரிசோதனை மற்றும் கட்டணம் செலுத்தும் வசதி
/ Data Add-On, Extra GB, OTT உட்பட மேலும் பெறுமதி சேர் சேவைகள்
/ தன்னியக்கமாக தடங்கலை அறிவுறுத்தும் வசதி

இதுதவிர மேலும் பல சிறப்பம்சங்கள் உள்ளன!

Google play App Store

MYSLT

www.sltmobitel.lk

SLTMOBITEL நிகரற்ற இணைப்பு

# விடுதலைப்புலிகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பதிவேற்றிய இளைஞரொருவர் திருமலையில் கைது

(கந்தளாய் நிருபர்)

சமூக ஊடகங்களில் விடுதலைப்புலிகள் தொடர்பில் பதிவேற்றிய திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (02) இரவு கைதுசெய்யப்பட்டதாகவும், இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் சண்முகராசா விதுலஷன் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் புகழ்ந்து சமூக ஊடகங்களில் பதிவுகளை பதிவுசெய்தமையால் 24 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி சாரதியான அவர் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையிலான பதிவுகளை பதிவேற்றியதாகவும் இது பயங்கரவாத தடைச்சட்டம், அரசியல் மற்றும் சிவில் உரிமைக்கான சர்வதேச சட்டம் என்பவற்றின் கீழ் குற்றமாகக் கருதப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், கைதானவரை நேற்று (03) நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐஸ் – கேரள கஞ்சாவுடன் தலவாக்கலையில் ஒருவர் கைது





(எம்.கிருஸ்ணா)

ஐஸ்,கேரள கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த இளைஞன் ஒருவரை தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

தலவாக்கலை கிரேட்வெஸ்டன் லூசா பிரிவை சேர்ந்த 31 வயதுடைய இளைஞனே 120 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 400 மில்லிகிராம கேரள கஞ்சவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமையை தலவாக்கலை விசேட அதிரடிப்படையினரினால் குறித்த இளைஞனின் வீட்டை நேற்று முன்தினம் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே மேற்படி போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக தலவாக்கலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் பொது சுகாதார பரிசோதகர்கள்

பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று முதல் (03) அடையாள பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர்.

பதவி உயர்வு, விபத்துக் கொடுப்பனவை அதிகரித்தல் உள்ளிட்ட 10 காரணிகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

சுகாதாரத்துறை எதிர்நோக்கும் பொதுவான சிக்கல்களை முன்வைத்தும் இந்த பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், அரசாங்கம் இதுவரை தீர்வு வழங்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சில தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் மாத்திரம் தீர்க்கப்படுவதால், தொழிற்சங்கங்களிடையே பிரச்சினைகள் எழுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

கொரோனா ஒழிப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் இன்று விலகியிருப்பதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் தொழிற்சங்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளும் நேற்று அனைத்து சேவைகளிலிருந்தும் விலகியுள்ளனர்.

பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்ற போதிலும், வைத்தியசாலைகளின் அத்தியாவசிய சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

# சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் எழுவருக்கு இடமாற்றம்




சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் எழுவருக்கு உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேவை கருதி இடமாற்றங்கள் வழங்கப்படுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.ஜயலத் வட மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆர்.எஸ்.கொடித்துவக்கு சப்ரகமுவ மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகவும் ஊவா மாகாணத்திற்கு பொறுப்பான மேலதிக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக எம்.டி.ஆர்.எஸ்.தமிந்தவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குற்றத்தடுப்பு மற்றும் போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க பொலிஸ் நிர்வாக பிரிவிற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

குற்றத்தடுப்பு மற்றும் போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க, சமூக பொலிஸ் சேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன வடமேல் மாகாணத்திற்கும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ.ஏ.என்.எல். விஜேசேன மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலிருந்து அநுராதபுரம் பொலிஸ் பிரிவிற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

# ஊழியர்கள் மூவருக்கு கொரோனா தொற்று; பொகவந்தலாவையில் 2 வங்கிகளுக்கு பூட்டு

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

வங்கி ஊழியர்கள் மூவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து பொகவந்தலாவை நகரிலுள்ள அரச வங்கி ஒன்றும் தனியார் வங்கி ஒன்றும் மூடப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

எழுமாறாக மேற்கொண்ட பிசி.ஆர் பரிசோதனையின் போதே மேற்படி வங்கிகளில் கடமையாற்றும் மூவருக்கு தொற்று இருப்பது நேற்று முன்தினம் (02) உறுதிசெய்யப்பட்டது.

தொற்றுக்குள்ளானவர்களின் குடும்பத்தினரும் வங்கிகளில் கடமையாற்றிய ஊழியர்களும் சுயனதனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், வங்கிகள் தற்காலிகமாக மூடப்பட்டு கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பொகவந்தலாவை கொட்டியாகலை கீழ் பிரிவில் 01/07 வெளியான பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையில் 18 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானதையடுத்து, எதிர்வரும் 14 நாட்களுக்கு அப்பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டு வெளியார் உள் நுழைவதும் வெளியில் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக பொதுசுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நுவரெலியாவில் சில பகுதிகளுக்கு எட்டு மணி நேர மின்வெட்டு

(பி.கேதீஸ்)

நுவரெலியாவில் சில பகுதிகளில் மின்வெட்டு இன்று (04) காலை 9 மணி முதல் மாலை 5 வரை அமுல்படுத்தபடவுள்ளதென இலங்கை மின்சார சபையின் நுவரெலியா கிளை அறிவித்துள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணியிலிருந்து மாலை 5 வரை பாமஸ்டன் தோட்டம், கல்கந்தவத்தை தோட்டம், சமர்செட் தோட்டம், லேங்டேல் தோட்டம், ரதெல்ல தோட்டம், உடரதல்ல தோட்டம், வங்கிஓயா தோட்டம், ரதெல்ல கிளப், சமர்செட் பங்களா ஆகிய பகுதிகளுக்கே இந்த மின்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

# சர்வதேச போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இலங்கையர் மூவர் கைது



சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மூவர், கேரளா அங்கமாலி பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்புப் படையணியினால் இச்சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் போலி அடையாள அட்டைகளுடன் கேரளா, அங்கமாலி - கிடங்கூர் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியிருந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் இவர்கள் தொடர்புடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நாட்டில் மூன்று மாவட்டங்களில் 3 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

நாட்டின் 3 மாவட்டங்களின் 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செம்மலை கிழக்கு நாயாறு மீனவர் பகுதியும், கேகாலை மாவட்டத்தின் கேகாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிஹிபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் மெதியாவ கிராமமும் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை 3 கிராம உத்தியோகத்தர் பிரிவும் நேற்று (03) காலை முதல் தனிமைப்படுத்தப்படுள்ளன.

## கொரோனா...

இதேவேளை கொரோனா அல்பா திரிபுடன் மேலும் பலர் நாட்டின் பல்வேறு இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விபரங்கள் மேலதிக ஆய்வுக்காக சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

## 3 நாடுகளிடமிருந்து...

விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை இம்மாதம் மாத்திரம் 100 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டு கடன்களை செலுத்த அரசு தயாராகி வருகிறது.

நாட்டின் வெளிநாட்டுக்கடன் மீள் செலுத்தும்தொகை அதிகமாக இருப்பதால் இன்னும் சில மாதங்களில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கலாமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## அமைச்சரவையில்...

திருத்தத்தின்போது அரசுக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் அமைச்சுக்களை வழங்க அரசு ஆலோசித்து வருகிறது.

அதேபோல் பல்வேறு அமைச்சுக்களின் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் நிதியமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## பாலியல்...

இந்த விவகாரம் தொடர்பில் இதுவரை 26 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிறுமியின் தாய் உள்ளிட்ட இரண்டு பெண்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்களில் 15 பேர் சிறுமியை பணம் கொடுத்து பெற்றுக்கொண்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட நால்வர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரில் மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரும் கப்பல் கெப்டன் ஒருவரும் குறித்த கப்பல் கெப்டனின் உதவியாளரும் அடங்குகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து கடந்த ஜூன் 7 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே சிறுமி விற்பனை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விசாரணைகளின் அடிப்படையில், சம்பவம் தொடர்பில் மேலும் 16 பேர் கைதுசெய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

சிறுமியின் கையடக்க தொலைபேசியிலுள்ள தொலைபேசி செயலிகளை ஆராய்ந்ததில், மேலும் பலர் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## எம்.பி.யாக...

நாடாளுமன்ற உறுப்பினர் பஸீல் மர்ஜான் தமது எம்.பி. பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்.

பசில் ராஜபக்ஷ அமைச்சராக பொறுப்பேற்கும் பட்சத்தில் அவரது அமைச்சின் கீழ் கொழும்பு போர்ட் சிட்டி ஆணைக்குழு, இலங்கை முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியன கொண்டுவரப்படவுள்ளதாக மேலும் அறியமுடிந்தது.

இதற்கிடையில் தற்போது ஜனாதிபதியின் கீழ்வரும் போர்ட்சிட்டி ஆணைக்குழுவை பிறிதொரு அமைச்சின் கீழ் கொண்டுவரவேண்டாமென சீன அரசின் தரப்பிலிருந்து அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நேற்று அறியமுடிந்தது.

## தங்கத்திற்கான...

இதற்மைய, கொழும்பு – 11 செட்டியார் தெருவில் ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் நேற்றைய (03) விலை 127,000 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமை (30) 116,000 ரூபாவாக காணப்பட்ட ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை ஜுலை 1ஆம் திகதி வியாழக்கிழமை 120,000 ரூபாவாக சடுதியாக அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறன நிலையில் மீண்டும் நேற்று (03) சனிக்கிழமை மேலும் 1,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“கடந்த 10 நாட்களுக்குள் தங்கத்தின் விலை சுமார் 10 வீதத்தினால் அதிகரித்துள்ளது” என அகில இலங்கை நகைக்கடை உரிமையாளர் சங்கத்தின் பொருளாளர் ஆர்.பாலசுப்பிரமணியம் ‘தமிழனு’க்கு தெரிவித்தார்.

தங்க இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் நாட்டில் தங்கத்திற்கு பாரியளவில் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இந்த திடீர் விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தங்க இறக்குமதிக்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் தங்கத்தின் விலை ஓரளவு குறைவடையும் என நம்புவதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்த அகில இலங்கை நகைக்கடை உரிமையாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த திடீர் விலையேற்றம் காரணமாக தங்க வியாபாரம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

நாடளாவிய ரீதியில் சுமார் 5,000 தொடக்கம் 7,000 வரையான நகைக் கடைகள் காணப்படுகின்றன. இவற்றில் சுமார் 100,000 பேர் பணியாற்றுகின்றனர்.

| திகதி | ஒரு பவுண் 24 கரட் தங்க விலை |
|---|---|
| 21.06.2021 | 109,000.00 ரூபா |
| 22.06.2021 | 110,000.00 ரூபா |
| 23.06.2021 | 110,500.00 ரூபா |
| 25.06.2021 | 110,500.00 ரூபா |
| 26.06.2021 | 111,000.00 ரூபா |
| 27.06.2021 | 111,000.00 ரூபா |
| 28.06.2021 | 112,000.00 ரூபா |
| 29.06.2021 | 113,500.00 ரூபா |
| 30.06.2021 | 116,000.00 ரூபா |
| 01.07.2021 | 120,000.00 ரூபா |
| 02.07.2021 | 120,000.00 ரூபா |
| 03.07.2021 | 127,000.00 ரூபா |

இதற்கு மேலதிகமாக சுமார் 200,000 பேர் தங்க ஆபரண உற்பத்தித் துறையுடன் தொடர்புபட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடைய பல குடும்பங்கள் தற்போதைய விலையேற்றம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமல்லாம் நகை வியாபாரத்துடன் தொடர்புடைய ஆயிரக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, “நாட்டில் தங்கத்திற்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில், அதற்கான விநியோகம் மிகக் குறைவாக காணப்படுகின்றமையினாலேயே இந்த திடீர் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது” என பிரபல நகை வர்த்தகரான எம்.எம். ராயீஸ் தெரிவித்தார்.

“தற்போது தங்கத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு இலங்கைக்கு மாத்திரமான பிரச்சினையென்றல்ல. இது சர்வதேச ரீதியாக நிலவுகின்ற பிரச்சினை” எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளைப் போன்று இலங்கையிலும் தங்கத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதும் இந்த விலையேற்றத்திற்கான காரணமாகும் என ராயீஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய வங்கியினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 220 பில்லியன் ரூபா நாணய அச்சிடல் காரணமாகவே நாட்டில் தங்கத்திற்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர் சுதாகரன் பேரம்பலம் தெரிவித்தார்.

“புதிதாக நாணய அச்சிடலை மேற்கொள்ளும் போது அதற்கு ஏற்ற அளவினால் தங்க இருப்பினை மத்திய வங்கி பேணுவது வழமையாகும். இதற்கமைய அண்மையில் நாட்டில் மேற்கொண்ட நாணய அச்சிடலின் போது உள்நாட்டில் காணப்பட்ட தங்கத்தினை மத்திய வங்கியின் இருப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையினால் தங்கத்திற்கு பாரிய நெருக்கடி நிலவுகின்றது” என அவர் கூறினார்.

இதன் காரணமாகவே நாட்டில் தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு குறிப்பிட்ட சில நாட்களுக்குள் நிகழ்ந்துள்ளது என பொருளாதார ஆய்வாளர் சுதாகரன் மேலும் தெரிவித்தார்.

# கொரோனா சடலங்களை அடக்கம்செய்ய நிதி வசூலிப்பதாக முகநூலில் போலிப் பிரசாரம்

## சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(வாழைச்சேனை நிருபர்)

கொரோனா ஜனாஸாக்கள் நல்லடக்கம் என்ற பெயரில் நிதி வசூலிப்பதாகத் தெரிவித்து போலி முகநூலில் பதிவிட்டு பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு தவிசாளர் தலைமையில் ஓட்டமாவடி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.ஏ. அன்வர், ஏ.ஜி.அமிர் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

கொவிட் -19 ஜனாஸா நல்லடக்கப் பணியினை மிகச்சிறப்பாக சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தனது சபை ஊழியர்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்று காரணமாக மரணிக்கும் முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் எனப் பலதரப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் ஓட்டமாவடி மஜ்மா நகர் சூடுபத்தினசேனைக் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இனங்களுக்கிடையிலான உறவுகளைச் சீர்குலைக்க வேண்டுமென்ற நோக்கில் பலர் ஜனாஸா நல்லடக்க விவகாரத்தில் பலதரப்பட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

ஜனாஸா நல்லடக்கத்திற்கென நிதி வசூலிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டு வரும் நிலையில், இவ்விவகாரத்தை வைத்து சர்வதேச ரீதியில் ஓட்டமாவடி பிரதேசத்திற்கும், பிரதேச சபைக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் சிலர் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.



ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபரும் பிரதேச சபை நிர்வாகமும், திட்டவட்டமாக ஒரு விடயத்தை மக்களுக்குக் கூறியுள்ளனர்.

கொவிட் -19 ஜனாஸா நல்லடக்கதிற்காக எவ்வித பணத்தையும் எவரிடமும் அறவிடவில்லை. எனவே, எவருக்கும் ஜனாஸா நல்லடக்கத்திற்காக பணம் வழங்கவேண்டாம்.

அவ்வாறு எவரும் பணம் கேட்பார்களானால் உடனடியாக குறித்த நபர்கள் பற்றிய தகவல்களை அறியத்தருவதுடன், அது தொடர்பான ஆதாரங்களை தம்மிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாஸா நல்லடக்கம் தொடர்பில் போலிப்பிரசாரங்களை மேற்கொண்டு தேசிய ரீதியில் ஜனாஸா நல்லடக்கப் பணிக்கு இடையூறு விளைவிக்கும் வேலைத்திட்டத்தை சிலர் முன்னெடுக்கும் நோக்கில் சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பரிமாறி வருவதுடன், பொய்ப்பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பிலும் இவ்வாறு ஜனாஸா அடக்கத்திற்கென நிதி வசூலிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அறிந்திருந்தால், அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறியத்தருவதுடன், பிரதேச சபையின் கவனத்திற்கு ஆதாரபூர்வமான தகவல்களை வழங்குமாறு பிரதேச சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அது மாத்திரமல்லாமல், இது தொடர்பான மோசடிகள் இடம்பெற்றால் அதுகுறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்வதுடன், இவ்வாறு ஆதாரமற்ற பிரசாரங்களை சமூக ஊடகங்களினூடாக மேற்கொள்ளும் நபர்களை அடையாளம் கண்டு உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தவிசாளரினால் வாழைச்சேனை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

## திருகோணமலை மாவட்ட சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்ப விசேட கலந்துரையாடல்





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்ட சுற்றுலா கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (02) மாவட்ட செயலகத்தில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோராளவின் ஏற்பாட்டில், சுற்றுலா மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாரச்சியின் தலைமையில் நடைபெற்றது.

திருகோண்மலை மாவட்டமானது சுற்றுலாத்துறை அபிவிருத்திக்குப் பொருத்தமான பல வளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் மாவட்ட அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் வலுசேர்க்க முடியும். இதனை முன்னிட்டு மாவட்டத்தின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான திட்டங்களடங்கிய முன்மொழிவு இதன்போது அரசாங்க அதிபரால் முன்வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட சுற்றுலாத்துறையோடு தொடர்புடைய தொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கோரிக்கைகளை இதன்போது செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.கொவிட்-19 காரணமாக பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை உயிர்ப்பிக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், சுற்றுலாத்துறைசார் தொழில் முயற்சியாளர்களது பிரச்சினைகளைத் தீர்த்து குறித்த துறையை மீளக் கட்டியெழுப்பத் தேவையான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்





(பாறுக் ஷிஹான்)

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரின் கிழக்கு மாகாண விஜயத்தை முன்னிட்டு, பொத்துவில் பிரதேச மக்களுக்கு உலருணவுகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல், விளையாட்டுக்கழக வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் பாகிஸ்தான் - இலங்கை நட்புறவின் அடையாளமாக நேற்று முன்தினம் (02) பொத்துவில் தனியார் விடுதியில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷாரப் முதுநபினின் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் முஹம்மத் சாட் ஹட்டக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, இப்பொருட்களை வழங்கி வைத்தார். மேலும், இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்தருவன் அனுராத, பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் ரஹீம், சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத் தலைவர் ஏ.எம்.ஜஹ்பர், உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கொரோனா தொற்றிலிருந்து நாடு விடுபடவும், கொரோனா தொற்றுக்குள்ளானோர் விரைவில் குணமாகவும் வேண்டி, பொத்துவில் சிங்கபுர சமுத்ரகிரி விகாராதிபதி இந்திரி உபனந்த, சாளம்படிப்பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.காண்டீபன் சர்மா, மெதடிஸ் தேவாலய போதகர் அருட்தந்தை பிலிப்குமார், மௌலவி சுபைர் அகில் முகம்மட் (சித்திக்கி) ஆகியோர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.




தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# மக்களுக்கான சேவை பாதிக்கப்படக்கூடாது

கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தலையீடு செய்வது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், பாதுகாப்புத் தரப்பினர் திட்டமிடப்படாத விதத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் இதன் காரணமாக குழப்பநிலை ஏற்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்கும் இதனை தெரியப்படுத்தியுள்ளது.

படையினர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளிலும் தலையிடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாண பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவரின் கருத்து சுருக்கமாக பின்வருமாறு அமைகிறது.

அவர்கள் எங்கள் சகாக்களின் செயற்பாடுகளில் பலவழிகளில் தலையிடுகின்றனர். நாங்கள் இரண்டு விடயங்கள் குறித்து கரிசனையடைந்துள்ளோம். ஒன்று, கிழக்கு மாகாணத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் ஏற்றுக்கொள்ள முடியாத தலையீடு. மற்றையது, மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்கள் போன்றவற்றிற்குள் அனுமதியின்றி அவர்கள் நுழைவது.

உயர்மட்டத்தில் உள்ளவர்களின் உத்தரவின்பேரில் தொற்றுநோயியல் பிரிவு இராணுவத்தினருக்கு தடுப்பூசிகளை வழங்குகின்றது. அவர்கள் நாடு முழுவதும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். தெஹியத்தகண்டிய பகுதியில் சுகாதார அதிகாரிகளின் உதவியைப் பெறாமல் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கு இராணுவம் தடுப்பூசியை வழங்கியது. தடுப்பூசியை பெற்றவர்களில் பத்து வீதமானவர்கள் பக்கவிளைவுகளால் பாதிக்கப்பட்டனர். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தடுப்புமருந்துகள் உள்ள நிலையில், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கை குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினர் அளப்பரிய சேவைகளை மருத்துவர்களுடன் இணைந்து ஆற்றிவருகின்றனர். அவற்றை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டாலும் தடுப்பூசி வழங்கலில் மருத்துவத்துறையினரின் செயற்பாடுகளுக்கே முன்னுரிமையளிக்க வேண்டும். ஆனால், மருத்துவர்கள் இவற்றை சரியாக செய்கிறார்களா என்ற கேள்வி எழாமலும் இல்லை. பெரும்பாலான இடங்களில் மருத்துவர்கள் தங்களுக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி தடுப்பூசிகளை தங்களின் உறவினர்களுக்கு வழங்கியதாக விமர்சனங்கள் எழுந்திருந்தன. அதேபோல் பெரும்பாலானோர் தங்களின் இருப்பிடங்களிலிருந்து தூரச் சென்று போலி முகவரிகளை சமர்ப்பித்து தடுப்பூசிகளை பெற்றிருந்த செய்திகளும் வெளியாகியிருந்தன.

வெறுமனே இந்தப் பணிகளில் இராணுவம் தலையீடுகளை செய்கிறது என்று கூறுவதைவிட தடுப்பூசி வழங்கும் விடயத்தில் முறையான கட்டமைப்பு இல்லாததையே இந்த விடயங்கள் சுட்டிநிற்கின்றன. வைரஸ் தீவிரமாக பரவியுள்ள தற்போதைய காலகட்டத்தில் ஒருவருக்கொருவர் முரண்படுவதால் மக்களுக்கான சுகாதாரப் பணிகளே மிகவும் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்று மக்களுக்கான பணியை மருத்துவர்கள் தொடரவேண்டும். அதுவே இப்போதைய தேவை.

# டெங்கு காய்ச்சல் அறிகுறிகள்; பரிசோதனைகள் - சிகிச்சை முறைகள்



**டெங்கு காய்ச்சல் அறிகுறிகள், பரிசோதனைகள், சிகிச்சை முறைகள் பற்றி காரைதீவு சுகாதார அலுவலக வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வஸீர் வழங்கும் விளக்கம்**

**கேள்வி : டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?**

**பதில் :** டெங்கு என்பது ஒருவகையான வைரஸ் காய்ச்சல். டென்-1 (DENV-1), டென்-2 (DENV-2), டென்-3 (DENV-3), டென்-4 (DENV-4) என டெங்குவில் 4 வகைகள் உள்ளன.

**கேள்வி : டெங்கு எப்படிப் பரவுகிறது?**

**பதில் :** நல்ல தண்ணீரில் உருவாகக்கூடிய ஏடிஸ் ஏஜிப்தி (Aedes Aegypti) என்ற ஒருவகை நுளம்புகள் மூலம் இந்த வைரஸ் பரவுகிறது. ஏடிஸ் நுளம்புகள் மூன்று வாரங்களுக்குமேல் உயிர்வாழும். பகல் நேரங்களில் மட்டுமே கடிக்கும். உடல் மற்றும் கால்களில் கறுப்பு மற்றும் வெள்ளைநிறப் புள்ளிகள் கொண்ட உடலமைப்பைக்கொண்டுள்ளதால், இவை புலிநுளம்புகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**கேள்வி : ஏடிஸ் ஏஜிப்தி நுளம்புகள் எப்படி நோயைப் பரப்புகின்றன?**

**பதில் :** வீடுகளில் சரியாக மூடப்படாத ட்ரம்கள், தண்ணீர் பிடிப்பதற்காக பைப்லைன்கள் அருகே தோண்டப்பட்ட குழிகள், மொட்டை மாடிகளில் போட்டுவைத்திருக்கும் உபயோகமற்ற பொருட்கள், காலிமனைகளில் கிடக்கும் பிளாஸ்ரிக் கப்கள், பயனற்ற பொருட்கள், வீடுகளில் சரியாக மூடப்படாத தரைத் தொட்டிகள் (சம்ப்), மேல்நிலைத் தொட்டிகள், ரயர்கள், பயன்படுத்தாத உடைந்த சிமெண்ட் தொட்டிகள், நீண்டகாலமாகக் கழுவப்படாத தொட்டிகள் போன்றவற்றில் தேங்கியிருக்கும் நல்ல தண்ணீரில் ஏடிஸ் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுகின்றன. இது டெங்கு பாதிப்புள்ளவர்களைக் கடித்துவிட்டு மற்றவர்களைக் கடிக்கும்போது ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது.

**கேள்வி : எத்தனை நாட்களில் ஏடிஸ் நுளம்பு வளர்ச்சியடையும்?**

**பதில் :** ஏடிஸ் நுளம்புகள் தண்ணீரில் முட்டையிட்டு கொசுப்புழு, கூட்டுப்புழு பருவம் வரை வளர 7 முதல் 10 நாட்களாகும். இந்தக் கொசுக்களின் முட்டைகள் ஓராண்டுவரையிலும் அழியாமல் இருக்கும். மழைக்காலங்களில் நல்ல நீர் தேங்கியிருக்கும் இடங்களில் இந்த முட்டைகள் உயிர்பெற்று நோயைப் பரப்பும்.

**கேள்வி : ஏடிஸ் நுளம்புகள் வளர்ச்சியை எப்படித் தடுக்கலாம்?**

**பதில் :** நுளம்புகள் உருவாகும் இடங்களை அழித்து சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டால் மட்டுமே இந்த நுளம்புகளின் வளர்ச்சியைத் தடுக்க முடியும்.

**கேள்வி : டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் என்னென்ன?**

**பதில் :** காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல்வலி, வாந்தி, வயிற்று வலி, கண்ணுக்குப் பின்புறம் வலி, எலும்பு வலி ஆகியவை டெங்கு காய்ச்சலின் முக்கியமான அறிகுறிகளாகும்.

**கேள்வி : காய்ச்சல் வந்தபிறகு என்ன செய்யவேண்டும்?**

**பதில் :** காய்ச்சல் அறிகுறி தெரிந்தவுடன் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும். மருத்துவரால் மட்டுமே தேவையான மருத்துவப் பரிசோதனை செய்து, இது டெங்கு காய்ச்சலா அல்லது பிற காய்ச்சலா என்பதைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க முடியும்.

**கேள்வி : டெங்கு காய்ச்சலை கண்டறிய என்னென்ன பரிசோதனைகள் செய்யப்படுகின்றன?**


**பதில் :** ஆரம்ப அறிகுறிகள் அனைத்தும் வைரஸ் காய்ச்சல்களில் காணப்படும் பொதுவான குணங்கள் என்பதால் உடனே நோயை உறுதிசெய்ய இயலாது. காய்ச்சல் 3 நாட்களுக்கு மேல் நீடித்தால், உடனே மருத்துவமனைக்குச் சென்று, என்.எஸ்.ஐ. அன்ரிஜன் (NS1 Ag), டெங்கு ஐ.ஜி.எம். (Dengue IgM ) அல்லது டெங்கு ஐ.ஜி.ஜி. (Dengue IGG) உள்ளிட்ட இரத்தப் பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும்.

பொதுவாக ஒருவருக்கு இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை சுமார் 3 இலட்சம்வரை இருக்கும். டெங்கு காய்ச்சல் வந்தவருக்கு தட்டணுக்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கும் கீழே குறைந்துவிடலாம். எனவே, ப்ளேட்லெட் (Platelet) என்னும் இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை மற்றும் இரத்தத்தின் நீர்ப்பளவு (Heamatocrit) உள்ளிட்ட பரிசோதனைகளையும் மருத்துவரின் ஆலோசனையின்பேரில் 2 அல்லது 3 நாட்கள் தொடர்ந்து செய்துகொள்ளவேண்டும்."

**கேள்வி: டெங்குவுக்கு எந்த மாதிரியான சிகிச்சை அளிக்கப்படுகிறது?**

**பதில்:** டெங்கு காய்ச்சலுக்கென தனி சிகிச்சை எதுவும் இல்லை. காய்ச்சலைக் கட்டுப்படுத்த பரசிட்டமால் (Paracetomol) மாத்திரையும், உடல் வலியைப் போக்க உதவும் மாத்திரைகளும் தரப்படும்.

சிலருக்கு மட்டுமே அதிர்ச்சிநிலை (Dengue Shock Syndrome) ஏற்படும். அதற்கு குளுக்கோஸ் மற்றும் சியலைன் (Dextrose Saline) தேவையான அளவுக்கு ஏற்றப்பட வேண்டும். வைரஸ் பாதிப்பால், இரத்தத்திலுள்ள தட்டணுக்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வரும். தட்டணுக்கள் குறைந்தவர்களுக்கு அதை ஈடுகட்ட நரம்பு மூலமாக தட்டணுக்கள் கொண்ட இரத்தம் செலுத்தப்பட வேண்டும். உடலிலுள்ள நீர்ச்சத்து குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கொசுவலைப் பாதுகாப்புக்குள் வைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும். டெங்கு ஐ.ஜி.எம்., ஹெமெட்டோ கிரீட் மற்றும் தட்டணுக்கள் பரிசோதனைகளின் மூலம் டெங்கு குணமாகிவிட்டதா என்று அறியலாம்.



**கேள்வி : வீட்டிலேயே டெங்குவுக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளலாமா?**

**பதில் :** டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை மருத்துவக் கண்காணிப்பில் இருப்பது மிகவும் நல்லது. டெங்கு பாதிப்புக்கு உள்ளாகிறவர்களில் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவான நபர்களுக்கு இரத்தக்கசிவு நோய் மற்றும் டெங்கு ஷாக் சிண்ட்ரோம் ஏற்படலாம். அதாவது, தட்டணுக்கள் குறைந்து, நுரையீரல் கூடு பகுதியில் நீர் தேங்கும்போது டெங்கு ஷாக் சிண்ட்ரோம் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அந்தத் தருணத்தில் உயிரிழப்பு ஏற்படும் ஆபத்தும் உண்டு. எனவே, மருத்துவக் கண்காணிப்பிலிருந்து, உரியநேரத்தில் உரிய மருந்துகள் எடுத்துக்கொள்வதன்மூலம் இந்த நிலை ஏற்படாமல் காப்பாற்ற முடியும். சுய சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் காய்ச்சல் வந்தவுடனேயே மருத்துவரை அணுகுவதே பாதுகாப்பானது.

**கேள்வி : டெங்கு காய்ச்சல் வந்து குணமாகிவிட்ட ஒருவருக்கு மீண்டும் வருமா?**

பதில் : நிச்சயமாக வரலாம். ஆனால், ஏற்கெனவே வந்த வைரஸ் பாதிப்பு மீண்டும் வராது. டெங்குவில் டென்-1 (DENV-1), டென்-2 (DENV-2), டென்-3 (DENV-3), டென்-4 (DENV-4) என 4 வகை வைரஸ்கள் உள்ளன.

**கேள்வி : மீண்டும் காய்ச்சல் வருவதற்கான வாய்ப்புகள் என்னென்ன?**

**பதில்:** டெங்கு காய்ச்சல் வந்து குணமாகிவிட்டவரை ஏடிஸ் கொசு கடித்தால் மீண்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இரண்டாவது முறை வரும் டெங்கு முன்பு வந்ததைவிடத் தீவிரமாக இருக்கும்.

**கேள்வி : டெங்கு காய்ச்சல் வந்து குணமடைந்தவர் மீண்டும் டெங்கு பாதிப்பிற்கு உள்ளாகாமல் இருக்க என்ன செய்யலாம்?**

**பதில்:** டெங்கு காய்ச்சல் வந்து குணமடைந்தவர் தொடர்ந்து 3 முதல் 5 நாட்கள் வரை ஓய்வில் இருக்கவேண்டும். நீர்ச்சத்து நிறைந்த கஞ்சி, இளநீர், பழச்சாறு போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும் உடற்பயிற்சிகள், யோகாசனங்கள் செய்யலாம். மீண்டும் டெங்கு தொற்றுள்ள கொசு கடிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். நம்மைச் சுற்றியுள்ள இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**கேள்வி : காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை?**

**பதில்:** காய்ச்சல் வந்தால் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனைக்குச் செல்லவேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி இரத்தப் பரிசோதனைகள் செய்துகொள்ள வேண்டும். மருத்துவரின் பரிந்துரைச்சீட்டு இல்லாமல் மருந்துக் கடைகளுக்குச் சென்று தாமாகவே மாத்திரைகளை வாங்கி உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**கேள்வி : டெங்கு தடுப்பில் பொதுமக்களின் பங்களிப்பு என்ன?**

**பதில்:** வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் கிடக்கும் பயன்படுத்தாத பிளாஸ்ரிக் தட்டுகள், பிளாஸ்ரிக் கப்கள், தேங்காய் ஓடுகள், உடைந்த வாளி, ரயர்கள் ஆகியவற்றை அகற்ற வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை பிளீச்சிங் பவுடர் போட்டு நன்றாகத் தேய்த்துக் கழுவி, நுளம்பு புகாதவாறு மூடிவைக்க வேண்டும். நுளம்புவலை போன்ற கொசுத்தடுப்பு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி : நிலவேம்புக் குடிநீர் குடித்தால் டெங்கு காய்ச்சல் வராதா?**

**பதில்:** டெங்கு மட்டுமல்லாது எல்லாக் காய்ச்சல்களுக்கும் நிலவேம்புக் குடிநீர் குடிப்பது பலன் தரும். உடலின் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கவும் நிலவேம்புக் குடிநீர் அருமருந்தாகும். காய்ச்சல் வந்தவர்கள் மட்டுமல்லாது, அனைவருமே நிலவேம்புக் குடிநீர் குடிக்கலாம். கர்ப்பிணிகள், ஒரு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகள் தாராளமாகக் குடிக்கலாம். நிலவேம்புக் குடிநீரை சாப்பாட்டுக்கு முன் குடிப்பது சிறந்தது.

**கேள்வி : நிலவேம்புக் குடிநீர், யார் எவ்வளவு குடிக்க வேண்டும்?**

**பதில்:** நிலவேம்புக் குடிநீரை இளஞ்சூடாகக் குடிப்பதுதான் சிறந்தது. அதுவும் தயாரித்த 3 மணிநேரத்துக்குள் குடித்துவிட வேண்டும். சாதாரணமாக, ஒரு நாளைக்கு 10 மி.லீ. முதல் 50 மி.லீ. வரை அருந்தலாம். குழந்தைகள் (3 - 12 வயதுக்குட்பட்டோர்) 15-30 மி.லீ, பெரியவர்கள் 15இலிருந்து 50 மி.லீ. வரை அருந்தலாம். காய்ச்சல் பாதித்தவர் ஒரு நாளைக்கு 3 தடவைகள் குடிக்கலாம். காய்ச்சல் இல்லாதவர்கள் ஒரு நாளைக்கு ஒருமுறை குடித்தால் போதும்.

டெங்கு உறுதிசெய்யப்பட்டால், ஆடாதோடைச்சாறு 15 முதல் 30 மி.லீ, பப்பாளி இலைச்சாறு 10 மி.லீ. முதல் 30 மி.லீ. குடிக்கலாம். இரத்தத்தட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்க இவை உதவும். இதையும் சுயமாகச் செய்யக்கூடாது. மருத்துவரின் ஆலோசனை பெற்றே அருந்த வேண்டும். இரத்த தட்டணுக்கள் 50 ஆயிரத்தை விடக் குறையும்போது இரத்தம்வழியாக தட்டணுக்கள் ஏற்றப்பட வேண்டியது அவசியம்.

**கேள்வி : டெங்கு பாதித்தவர்கள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள்?**

**பதில்:** இனிப்பு சுவையுள்ள உணவுகளைக் குறைத்து, பாகற்காய் உள்ளிட்ட கசப்பு சத்துள்ள உணவுகளை அதிகம் சேர்க்கவேண்டும். காரம் அதிகமாகச் சாப்பிட விரும்புபவர்கள் மிளகாய்க்குப் பதிலாக மிளகைச் சேர்த்துக் கொள்ளலாம். அரிசி அல்லது தானியத்தில் செய்த கஞ்சியை இரண்டு வேளை கொடுக்கவேண்டும். தினசரி 3 லீட்டர் வரை தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியம். மேலும், பழச்சாறுகள், இளநீர், சீரகத் தண்ணீர் போன்றவற்றையும் அவ்வப்போது குடிக்கலாம்.

அன்னாசிப் பூ சேர்த்துத் தயாரித்த தேநீர், லவங்கப்பட்டை சேர்த்த டீ, திரிகடுகம் காபி ஆகியவற்றையும் குடிக்கலாம். கீரையை சூப் செய்து குடிக்க வேண்டும். அசைவ உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.



**உரையாடல்: நூருல் ஹுதா உமர்**
**மாளிகைக்காடு செய்தியாளர்**

# தங்கத்தேர் - குருடான பாகனிடம்!

# குத்தூசி



– நிர்ஷன் இராமானுஜம்

இலங்கை ரூபாவுக்கெதிரான அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 202.87 என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. எனினும் சந்தையில் 225 முதல் 226 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக தமிழன் ஆசிரிய பீடத்துக்கு அறியக்கிடைத்தது.

இது மிகப் பாரதூரமான நிலைமையாகும். டொலரின் பெறுமதியை சாதகமான முறையில் பேணாத நாடுகளுக்கு, அதுவும் குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு இது பொருத்தமானதல்ல.

டொலரின் பெறுமதி அதிகரிக்கும் என ஊகித்த இடைத்தரகர்கள் பலர் அவற்றை பாரியளவில் பெற்றுக்கொண்டு பதுக்கி வைத்துள்ளதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும்பாலான இறக்குமதியாளர்கள் இலங்கையில் உள்ளவர்களுக்கு 'உண்டியல்' முறையில் பணம் செலுத்துகின்றனர். டொலரின் பெறுமதி அதிகரிக்கின்றபோது உண்டியல் முறைமை வருமானமீட்டும் ஒரு முறையாக கையாளப்படுகிறது. இது அங்கீகரிக்கப்படாத முறைமையென்றாலும் பழங்காலந்தொட்டு இவ்வாறான பரிமாற்றங்கள் இரகசியமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டில் பணவீக்கத்தின் காரணமாக பொருட்களின் விலைகளிலும் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஸ்திரமற்ற பொருளாதாரம் நாட்டு மக்களை பெரும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது.

சந்தையிலுள்ள பொருட்களின் விலை உயர்வால் நாட்டின் நாணயத்தைக் கொண்டு பொருட்களை வாங்கும் திறன் குறைவடைவது பணவீக்கமாகும். இது அதிகரிக்கும் பட்சத்தில் பொருளாதாரம் பெரும் பின்னடைவை எதிர்நோக்கும் என்பதே உண்மை.

இவ்வாண்டு மே மாதம் 4.5 வீதமாக இருந்த பணவீக்கம் ஜூன் மாதம் 5.2 வீதமாக அதிகரித்துள்ளது. பொருளாதார வல்லுநர்கள் அல்லது பொருளியல்துறை சார்ந்தோர் மாத்திரம் இதன் பாதிப்புகளை அறிந்துகொள்கின்றனர். சாதாரண பொதுமக்கள் தங்களை அறியாமல் பெரும் சுமையைத் தாங்க வேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

உணவு மற்றும் உணவல்லா பணவீக்கத்தின் அதிகரிப்பையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். உணவுப் பணவீக்கமானது 9.9 வீதத்திலிருந்து 11.3 வீதமாக அதிகரித்திருக்கிறது. அவ்வாறெனின் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு எத்தகையது என்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கும்.

"முன்ன ஐயாயிரம் ரூபாவில எவ்ளோ சாமான் வாங்கினோம்? அதில அரைவாசிய கூட இப்போ அந்தப் பணத்தில வாங்க முடியல்லையே" என நாம் பேச்சுவழக்கில் உரையாடிக்கொள்வதுண்டு. நான் மேற்சொன்ன பணவீக்கத்தின் தீவிரத்தன்மை தான் இது. ஆக, பணம் கையில் அதிகமிருந்தாலும் அதன் பெறுமதி குறைவாகவே காணப்படும். ஆதலால் நாளாந்த செலவுக்கான பணம் அதிகரித்து நம்மையறியாமல் வறுமையை நோக்கி இட்டுச்செல்லப்படுவோம். பணத்தேவைக்காக இன்னுமின்னும் உழைக்க வேண்டும் என்ற மனநிலைதான் பாமரர்களுக்குத் தோன்றுமே தவிர இந்த நிலைமைக்கு அரசாங்கம்தான் காரணம் என்பதை உணர்வதில்லை.

ஒரு நிலையான நாணயக்கொள்கை பின்பற்றப்படாத சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் இது. ஒரு தேசத்தின் ஆட்சியாளர்கள் சுயநலவாதிகளாக இருப்பதன் விளைவுகளை எதிர்நோக்கியிருக்கிறோம் என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல்கள் இல்லை. நாட்டில் அரச சொத்து இருப்பு பெருமளவில் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இது 5,665.10 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், அந்தப் பெறுமதி 2021 ஏப்ரல் மாதத்தில் 4470.70 ஆக குறைவடைந்துள்ளது.

இந்த நிதிநெருக்கடியை சமாளிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து உடனடியாக கடன்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கத்தால் முடியவில்லை. அத்துடன் மாதாந்தம் வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டிய வட்டிக்கடனை செலுத்த முடியாத சூழ்நிலை. இதன் காரணமாக உடனடியாக நிதிநெருக்கடியை சமாளிப்பதற்கு 208.45 பில்லியன் ரூபாவை ஒரேநாளில் அச்சிட வேண்டிய சூழ்நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

நாட்டின் பணவீக்கத்தை சமாளிப்பதற்கு நாணயத்தை வெளியிடுவது தீர்வல்ல. அதனை அரசாங்கம் அறியாமலில்லை. இப்போதைய சிரமமான பொருளாதாரச் சூழ்நிலையிலிருந்து உடனடியாக மீளெழுவது கடினமானதாகும். முறையான திட்டமிடல்கள் இல்லாமையால் நாடும் மக்களும் கடன் எனும் ஆழியில் ஆட்சியாளர்களால் தூக்கிவீசப்பட்டிருக்கிறோம்.

இப்போதைய சூழலைச் சுருக்கமாகச் சொன்னால் தங்கத்தேர் - குருடான பாகனிடம்!

# இலங்கை - இந்தியா கடல்சார் பொருளாதார அபிவிருத்தியில் கைகோர்த்து செயற்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை







கடல்சார் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கையும், இந்தியாவும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின்போது தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கிய இந்தியாவிற்கு நன்றியினையும் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் போது அவசர உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்தியக் கடற்படையினருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது அவசர கோரிக்கையை ஏற்று, தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கிய இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய கடற்படை, இந்திய கடலோர காவற்படை ஆகியவற்றுக்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்துவற்கு மாத்திரமன்றி, ஏற்பட்ட பாதிப்புகளை மதிப்பிடுவதிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்கு பேருதவியாக அமைந்திருந்தது.

எதிர்காலத்திலும், கடலுக்கடியில் உள்ள கொள்கலன்களை கண்டறிந்து அவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம் என்றார். மேலும், கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை இந்திய அரசாங்கத்திடம் தான் கோரியிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இரு நாடுகளும் அவசர தேவைகளில் மாத்திரமன்றி, கடல்சார் பொருளாதார அபிவிருத்தியிலும் கைகோர்த்து செயற்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடைநிறுத்தப்பட்ட சந்தாங்கேணி மைதான அபிவிருத்தியை தொடருமாறு அமைச்சர் நாமலிடம் ஹரீஸ் எம்.பி. கோரிக்கை

(கே எ ஹமிட்)

அரசியல் ஆதாயங்களுக்காகவும், தற்பெருமை விளம்பரங்களுக்காகவும் சதி முயற்சியினால் நிறுத்தப்பட்ட கல்முனை - சந்தாங்கேணி விளையாட்டு மைதான அபிவிருத்தியை மீள ஆரம்பிக்கக் கோரி கல்முனை பிராந்தியத்திலுள்ள 26 முன்னணி விளையாட்டு கழகங்களின் கோரிக்கைக் கடிதம் நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸினால் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், விளையாட்டமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கல்முனை விளையாட்டு கழகங்களின் பிரச்சினைகள், வீரர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் எடுத்துரைத்ததுடன், இம்மைதான அபிவிருத்திப்பணியை அவசரமாக ஆரம்பிக்குமாறு அமைச்சருக்கு முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் கல்முனை - சந்தாங்கேணி விளையாட்டு மைதான அபிவிருத்திப் பணியை உடனடியாக முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிக்க வேண்டிய தேவைக்காக கல்முனை பிராந்திய முன்னணி கழகங்களான விக்டோரியஸ் கழகத் தலைவரும், முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான ஏ.எம்.றியாஸ், விர்லியண்ட் கழகத் தலைவரும் கடந்த மாநகர சபை வேட்பாளருமான எம்.எஸ்.எம்.பழில் உட்பட முன்னணி கழகங்களின் நிர்வாகிகள் முன்னின்று ஏற்பாடு செய்த கோரிக்கைக் கடிதம் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸிடம் கையளிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் நேற்று பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விளையாட்டுத்துறை பிரதியமைச்சராக இருந்தபோது சந்தாங்கேணி மைதானத்தை தேசிய மைதானமாக்கும் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமிடலின் பிரகாரமே இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கை கடல் வளத்தைப் பாதுகாக்க இந்திய அரசு செய்த உதவிக்கு மீனவர் சமூகம் சார்பாக நன்றி

## மனோ கணேசன் தெரிவிப்பு



எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல் மூலமான இரசாயனக் கழிவினால் இலங்கை கடல் வளத்துக்கு ஏற்பட்ட அழிவை ஆய்வுசெய்து பாதுகாக்க, இந்திய கடற்படைக் கப்பலான சர்வேக்ஸக் மூலம் இந்திய அரசு மேற்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பலின் இரசாயன கழிவுகளை ஆய்வுசெய்து இலங்கை கடல் வளத்தை பாதுகாக்க இந்திய அரசு தனது கடற்படை மூலம் செய்து வரும் உதவிகள் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத பேரழிவு, இலங்கை கடல் வளத்துக்கு, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் இரசாயன கழிவுகள் மூலம் ஏற்பட்டது. இதனால் மேற்குக்கரை முழுக்க மீனவ சமூகம் தொழிலிழந்து, வாழ்விழந்து, ஏறக்குறைய நடுத்தெருவுக்கு வந்துள்ளது. அவர்களது ஆவேசக் குரல் இலங்கை அரசுக்கு கேட்கவில்லை. ஆனால், இந்திய அரசுக்குக் கேட்டுள்ளது.

ஒரு நட்பு நாட்டு அரசு என்ற முறையில், எங்கள் மீனவர் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப, இந்திய கடற்படை கப்பல் சர்வேக்ஸக் மூலம் இந்திய அரசு செய்துள்ள உதவிக்கு, இலங்கை மீனவர் சமூகம் சார்பாக நாம் நன்றி கூறுகின்றோம்.

நடுக்கடலில், இரசாயன பொருட்களை சுமந்தபடி எரிந்து கொண்டிருந்த கப்பலை, இலங்கைத் துறைமுகத்துக்கு, இலங்கை கடல் எல்லைக்குள் வரச் சொன்னவர் யாரென எவருக்கும் தெரியாது. அந்த அமைச்சர் அல்லது அதிகாரி யார் என மக்கள் கேட்கிறார்கள். அவரைக் கண்டால் வரச்சொல்லுங்கள். அவருக்கு சுவையான மீன் உணவு தர தாங்கள் தயார் என மீனவ மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

இலங்கைக் கடல் வளமும், மீனவர் வாழ்வும் அழிகின்றன. இலங்கை மக்களுக்கு மீன் இன்று சந்தேகப் பொருள் ஆகிவிட்டது. இவற்றுக்கான நஷ்டஈட்டை எக்ஸ்ப்ரஸ் பேர்ள் எப்போது தரும்? எத்தனை கோடி ரூபா கிடைக்கும்? அதில் எத்தனை இலட்சம் மீனவர்களுக்கு கிடைக்கும்? இந்த கேள்விகளுக்கு விடைகள் இன்னமும் இல்லை.

இலங்கை அரசு இவற்றுக்கு பதில் கூறாமல் ஒளிகிறது. இதுவரை துறைமுகதுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவோ, மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ இதுபற்றிய உண்மைகளை பேச மறுக்கின்றனர். பேரழிவுக்கு பொறுப்பேற்க மறுக்கின்றனர். இந்த பின்னணியில் இந்திய அரசின் இந்த உதவி ஒரு ஆறுதல். "சாகர் ஆரக்ஸா" என்ற கடல் செயற்பாட்டின் மூலம் இந்திய கடற்படை கப்பல் சர்வேக்ஸக் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு, இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற்றும் குறிப்பிட்ட கப்பலின் தலைவர், மாலுமிகளுக்கு, இலங்கை மீனவர் சமூகம் சார்பாக எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன் என்றார்.



# டெல்ட்டா ஆபத்து!



கட்டுரை

**யோ.தர்மராஜ்**

ஒற்றை அரக்கனால் முழு உலகமும் நடுங்கிக்கொண்டிருக்கிறது. கொவிட்-19 என்ற வைரஸில் ஆரம்பித்து இன்று டெல்ட்டா, அல்பா, பீட்டா என்ற புதுப் புது திரிபுகளைக் கண்டு அச்சங்கொள்ளும் நிலைமையில் தத்தளித்துகொண்டிருக்கின்றோம். இலங்கையில் மூன்றாவது கொவிட் அலையின் சீற்றம் குறைவடைந்துள்ளதென நினைத்து பெரு மூச்சுவிட ஆரம்பிக்கையில், இந்தியாவை அச்சுறுத்திய டெல்ட்டா நுழைந்துவிட்டதால் மீண்டும் அச்சம் தொற்றிக்கொண்டது. டெல்ட்டா திரிபு கிட்டத்தட்ட உலகின் நூறு நாடுகளை தன் ஆட்சிக்குள் கொண்டுவந்துவிட்டது. அடுத்துவரும் மாதங்களில் இந்த டெல்ட்டா திரிபே அதிக ஆதிக்கம் செலுத்தும் திரிபாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட அதிக மரணத்தை ஏற்படுத்தும் உருமாறிய டெல்ட்டா (பி.1.617.2) திரிபு, கடந்த மாதத்தில் இலங்கையில் சமூகத்திற்குள்ளிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளது. நாட்டில் திரிபுகள் பரவுவது குறித்து முன்னெடுக்கப்படும் ஆய்வுக்காக தெமட்டகொடை, ஆராமய வீதி, கொழும்பு – 9 பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட 9 மாதிரிகளில் மரபணு பரிசோதனைகளில் 5 பேருக்கு இந்தியாவின் திரிபான டெல்ட்டா (பி.1.617.2) என்ற திரிபு உறுதிசெய்யப்பட்டது.

இந்த அறிவிப்பையடுத்து மக்கள் மத்தியில், ஐயோ, இந்தியாவின் திரிபு இலங்கையிலா என்ற அச்சம் ஏற்பட்டது. அச்சத்துக்குக் காரணம், எங்களுக்கு அண்டைய நாடான இந்தியாவில் உருமாற்றம்பெற்ற டெல்ட்டாவினால் ஏற்பட்ட அழிவை நாளுக்கு நாள் சர்வதேச ஊடகங்களின் ஊடாக கண்டபோது, அன்று மனம் வலித்தது. இன்று இலங்கையிலும் அந்தத் திரிபு அடையாளம் காணப்பட்டதும் அச்சம் தொற்றிக்கொண்டது.

இந்தியாவில் அதிக நோயாளர்கள், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்பதை கண்டறிவதற்கு முன்னரே அங்கு பல்லாயிரம் மக்கள் மாண்டு மடிந்தனர். டெல்ட்டாவின் பரவல் அதிகரிக்க, அதிகரிக்க இயற்கையாக கொட்டிக்கிடக்கும் எங்கள் சுவாசத்தின் மூலக்கூறான ஒட்சிசனின்றி, செயற்கை ஒட்சிசனுக்காக வீதி வீதியாக அலைந்தவர்களை கண்ட கண்கள் கண்ணீர் வடித்தன.

உயிர் காக்க உணவுக்கு அலைந்த காலம் போய், உயிர் காக்க ஒட்சிசனைத் தேடி அலைந்த காலமும் வந்ததே. ஒட்சிசனுக்காக வைத்தியசாலைகளில் வரிசை வரிசையாகவும், ஒட்சிசன் உற்பத்தி நிறுவனங்களுக்கு முன்னால் கதறி அழுததையும் நாம் கணாதிருக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான ஒட்சிசனை பெற்றுக்கொள்ள சிலிண்டர்களை வாங்கி, வீதிகளில் உருட்டிக்கொண்டிருந்த நிகழ்வும் நிகழ்ந்தது.

ஒட்சிசனை பெற்றுக்கொள்ள முடியாது வைத்தியசாலைகளில் கதறியது, மூச்சித்திணறல் ஏற்பட்டவர்களுக்கு ஒட்சிசனை வழங்க முடியாது வைத்தியர்கள் நோயாளர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படாமலிருக்க பட்ட கஷ்டங்களும் இன்றும் நடந்தேறுகின்றன. ஒட்சிசன் தேவை அதிகரிக்க, அதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டதால் இந்தியாவில் நடுவீதிகளில் மரணத்தையும் மரணித்தவர்களின் உடல்களை எரிக்கக் கூட முடியாது வரிசையில் மணித்தியால கணக்கில் காத்துக்கிடந்தமையையும் மறந்துவிட முடியாது.

இறந்தவர்களின் உடல்களை எரிக்க முடியாது, வீதிகளில் எரிக்கும் நிலைக்கு வல்லரசான இந்தியா தள்ளப்பட்டதோடுநின்றுவிடாது, இன்று இறந்தவர்களின் உடல்களை எரிக்க இடமின்றி ஏரிகளிலும் ஆறுகளிலும் வீசும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஏரிகளில் உடல்கள் மிதக்கின்றன, என்ன செய்யப்போகின்றோம் எனத் தெரியாது தவிக்கின்றன இந்திய உறவுகள். இவைக்கு டெல்ட்டா என்ற ஒற்றை அரக்கனே காரணம் என்றால் நாம் மறுத்துவிட்டு பயணிக்க முடியாது.

பெரும் துர்ப்பாக்கிய நிலையிலும் மீள முடியாது தவிக்கும் இந்தியாவிலிருந்து வந்தேறிய டெல்ட்டாவால் அந்தத் துர்ப்பாக்கியம் இங்கும் ஏற்படலாம். அவதானமாக செயற்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

நாட்டில் பல பகுதிகளில் டெல்ட்டா பரவியிருக்காலம் என்ற அச்சம் சுகாதார அதிகாரிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. காரணம், டெல்ட்டா வேகமாக பரவுவது மட்டுமல்ல, உடலில் வேகமாக செல்களில் ஊடுருவும் தன்மை கொண்டது. இது மேலும் 2 வகை பிறழ்வுகளை ஏற்படுத்திக்கொள்கிறது. இவை இரண்டும் உடலை தாக்குவதற்கு உதவிசெய்கின்றன. நோய் எதிர்ப்பாற்றலைக் குறைக்கும் வாய்ப்பும் அதிகம்.

ஒருவேளை, இலங்கையில் டெல்ட்டா பரவுமாக இருந்தால் நாங்களும் இந்தியாவின் நிலைமைக்குச் செல்வோம் என்பதை தடுக்க முடியாது. மக்கள் பக்கத்திலும் எவ்வித பாதுகாப்பும் இல்லை. நோய் எதிர்ப்புச்சக்திகளும் அதிகரிக்கப்படவில்லை. ஏனைய வைரஸ்களை எதிர்ப்பதற்கு போதுமானது. இந்தப் புதிய வைரஸை எதிர்கொள்ள எவ்வித நோய் எதிர்ப்புச்சக்திகளும் கிடையாது. தொடர்ந்து மக்கள் மத்தியில் பரவிச்செல்வதால் இதன் செயற்பாடுகள் எவ்வாறிருக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாதுள்ளது.

அல்பாவைவிட டெல்ட்டா மிக தீவிரமான பாதிப்புகளை உருவாக்கும். இது தாக்கினால் வைத்தியசாலைகளில் சிகிச்சை கட்டாயமாகிவிடும். அல்பா தாக்கிய ஒருவரிடமிருந்து 4 முதல் 5 பேருக்கு பரவும். ஆனால், டெல்ட்டா வகை 5 முதல் 8 பேருக்கு பரவும். தொற்று ஏற்பட்ட 3 முதல் 4 நாட்களில் 12 சதவீதம் நோயாளிகளின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக ஆகிவிடுகிறது. அல்பா வகை தாக்கத்தின்போது இந்தப் பாதிப்பு 2 முதல் 3 சதவீதமாகத்தான் இருந்ததாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தலைச்சுற்றல், வறண்ட தொண்டை, தொடர் சளி போன்ற அறிகுறிகள் இப்போது பிரிட்டனில் டெல்ட்டா வகை திரிபு பாதிப்பை எதிர்கொள்பவர்களிடம் பொதுவாக காணப்படுகின்றது என்று பிரிட்டனிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இளம் வயதினருக்கு மோசமாக சளி இருந்தால் அதை டெல்ட்டா திரிபாக உணரலாம் என சுகாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

டெல்ட்டா தொற்று ஏற்பட்ட ஒருவர் தமது உடல்நிலை மோசமடைவதை உணராமல் போனாலும், அது அவரது நிலையை மோசமாக்கி ஆபத்தான நிலைக்குத் தள்ளிவிடும். எனவே, தங்களுக்கு தொற்று இருக்குமா என எவருக்கேனும் சந்தேகம் எழுந்தால், உடனடியாக அவர் பரிசோதனைக்கு தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டும். இருமல், காய்ச்சல், சுவை அல்லது வாசனையை உணராதிருந்தால் அந்த நபர் கண்டிப்பாக பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

டெல்ட்டா திரிபு சற்று வித்தியாசமாக செயற்படுகிறது. தங்களுக்கு ஏதோ பருவகால சளி வந்து போனதாக மக்கள் கருதி இயல்பாக வெளியே செல்லத் தொடங்குகிறார்கள். இதன்மூலம் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் தங்களிடம் உள்ள டெல்ட்டா திரிபை அவர்கள் பரப்பலாம். நீங்கள் இளமையானவராக இருந்தால் உங்களுக்கு மிதமான அறிகுறிகள் ஏற்படலாம். அது மோசமான சளியாகவோ சற்றே சோர்வாக இருப்பதாகவோ கூட இருக்கலாம். ஆனால், எந்த அறிகுறி தென்பட்டாலும் வீட்டிலேயே இருங்கள். பரிசோதனை செய்துகொண்டு நிலைமையை உறுதிப்படுத்துங்கள்.

## அறிகுறிகள்

- கடும் தலைவலி
- தலைச்சுற்றல்
- வறண்ட தொண்டை
- தொடர் சளி
- இருமல்
- உயர் காய்ச்சல்
- வயிற்றுவலி
- உடல் சோர்வு
- சுவை அல்லது வாசனையை உணராதிருத்தல்
- சுவாசப்பாதை உலர்ந்திருத்தல்
- சுவாசிக்க சிரமமாயிருத்தல்

## பாதிப்புகள்!

- அல்பாவை விட 68 வீதம் வேகமாக பரவுதல்
- மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்தல்
- சுவாசப் பிரச்சினை ஏற்படுதல்
- ஒட்சிசன் தேவை அதிகரித்தல்
- சுவாசப்பாதை செயலிழத்தல்
- சுவாசப்பை செயலிழத்தல்
- கொவிட் நியூமோனியா ஏற்படுதல்

## தடுப்பதற்கான வழிகள்

- சமூக இடைவெளியை பேணுதல்
- இரட்டை முகமூடி அணிதல்
- கைகளை அடிக்கடி கழுவுதல்
- தேவையற்ற நடமாட்டங்களைக் குறைத்தல்
- அறிகுறிகள் தென்பட்டால் உரிய சுகாதார வழிகாட்டலை பெற்றுக்கொள்ளல்
- தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முக்கியத்துவம் கொடுத்தல்

### கொரோனா திரிபுகளின் புதிய பெயர்கள்

| நாடுகள் | திரிபுகள் | WHO |
|---|---|---|
| பிரிட்டன் | B.1.1.7 | அல்பா |
| தென்னாபிரிக்கா | B.1.351 | பீட்டா |
| பிரேஸில் | P.1 | கமா |
| இந்தியா | B.1.617.2 | டெல்ட்டா |

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

World Health Organization

டெல்ட்டா திரிபு 96 நாடுகளுக்கு பரவியுள்ளது. அடுத்துவரும் மாதங்களில் தற்போதுள்ள வைரஸ் வகைகளில் இதுவே அதிக ஆதிக்கம் செலுத்துவதாக இருக்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

டெல்ட்டா திரிபு மிக வேகமாக பரவும் அபாயம் கொண்டிருப்பதால், தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாத மக்களிடையே இது மிக வேகமாகப் பரவி வருகிறது.

டெல்ட்டா திரிபு கிட்டத்தட்ட உலகின் 100 நாடுகளிடையே பரவிவிட்டது. இதுவரை

96 நாடுகளிடையே இந்தத் திரிபு பரவியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. டெல்ட்டா திரிபு பாதிக்கப்பட்ட நாடுகளில் வேகமாக பரவி வருகிறதால், வைத்தியசாலைகளில் கிசிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

டெல்ட்டா திரிபானது பிரிட்டனில் கண்டறிந்த அல்பா திரிபை விட 55 வீதம் வேகமாக பரவும் வீரியம் கொண்டதாகவுள்ளது. பல நாடுகளில் இந்தத் திரிபினால் கண்டறியப்படும் புதிய நோயாளர்கள் உயிரிழக்கும் ஆபத்து அதிகரித்துள்ளது.

டெல்ட்டா எதிர்வரும் மாதங்களில் ஏனைய திரிபுகளை விட வேகமாக பரவும் பிரதான திரிபாக உருமாறி, ஏனைய நாடுகளிலும் பரவும் ஆபத்துள்ளது. தடுப்பூசிகள் வழங்கும் அளவு குறைவாக இருக்கும் நாடுகளில் கொவிட் தடுப்புக்கான நடவடிக்கைகள் நீண்டகாலத்திற்கு முன்னெடுக்க வேண்டிவரும்.

இதுவரை அல்பா திரிபு 172 நாடுகளிடையேயும் பீட்டா திரிபு 120 நாடுகளிடையேயும் டெல்ட்டா திரிபு 96 நாடுகளிடையேயும் பரவியுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

### கலாநிதி சந்திம ஜீவந்தர -பணிப்பாளர் மரபணு விஞ்ஞானப் பிரிவு



டெல்ட்டா வீரியம் கொண்டது. இதனால் ஒட்சிசன் தேவை அதிகரிக்கும்.

ஒட்சிசன் தேவை அதிகரித்தால் தட்டுப்பாடுகளும் ஏற்படலாம். இலங்கையில் கடந்த மாதத்தில் அடையாளம் காணப்பட்ட ஐந்து நோயாளர்களுக்கும் அப்பால் இதுவரை யாரும் கண்டறியப்பட வில்லை.

### வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நாட்டில் சமூகத்திலிருந்து டெல்ட்டா திரிபுடைய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அல்பாவை விட கிட்டத்தட்ட 65 வீதம் வேகமாக பரவக்கூடியது. எனினும், 30 - 100 வீதம் இது வேகமாக பரவுகிறது. ஒரு டெல்ட்டா நோயாளரிடமிருந்து இரு வாரங்களில் ஆயிரம் பேருக்கு பரவுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.



திரிபுகளை அடையாளம் காணப்படும் உபகரணங்களை ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஸ்தாபித்து, திரிபுகள் தொடர்பாக தொடர் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும். இதன்போதே, இதன் குணவியல்புகள், இது எவ்வாறு தடுப்பூசிக்கு பதிலளிக்கின்றன என்பதை கண்டறிய முடியும். அதிக நோயாளர்களும் மரணங்களும் பதிவாகும் மாவட்டங்களில் டெல்ட்டா திரிபு தொடர்பான ஆய்வை முன்னெடுக்க வேண்டும்.

### உபுல் ரோஹண -தலைவர் சுகாதார பரிசோதகர் சங்கம்

கொவிட் நிலைமை நல்லதாக இல்லை. டெல்ட்டா இருக்கும் பகுதிகள் குறித்து எங்களுக்கு உரிய தெளிவில்லை. எழுமாறாக எடுக்கப்பட்ட பகுதிகளிலேயே இருப்பதாகக் கூறப்படுகின்றன. ஏனைய பகுதிகளில் இருப்பதாக கண்டறிவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டில் கொவிட் நோயாளர்கள் குறைந்ததாகக் கூறப்பட்டாலும் நிலைமை நல்லதாக இல்லை. டெல்ட்டா இலங்கையில் பரவும் பிரதான திரிபாக இல்லை. அவ்வாறு, பிரதான திரிபாக மாறினால் நாங்கள் இந்தியாவின் நிலைமையை விட மோசமான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

டெல்ட்டா திரிபு பரவும் வீரியம் அதிகம் என்பதால் அதனால் ஏற்படும் மரணங்களை நாங்கள் நினைத்தும் பார்க்க முடியாது. தொற்றுக்குள்ளானோரில் அதிகமானோர் உயிரிழக்கின்றனர். இது மிக மோசமான நிலைமையாகும். ஆபத்தான நிலைமையை உணர்ந்து முழு நாட்டிலும் எழுமாறு பரிசோதனை முன்னெடுக்க வேண்டும். எனினும், ஏனைய பகுதிகளில் இருக்கின்றதா என்பது குறித்து தொற்று நோயியல் பிரிவினருக்கு தெளிவில்லை. டெல்ட்டா தொடர்பாக இன்னும் பூரண தெளிவில்லாமல் இருப்பது ஆபத்தான நிலையை உருவாக்கும்.



**வெடிமணியம் தொடர்ச்சி...**

உறுதியான "வெளியுறவுக் கொள்கை" இல்லாவிட்டால்;

வல்லாதிக்க நாடுகளின் அலையில் நாங்கள் அடிச்சு இழுத்து செல்லப்பட்டு விடுவோம்.

குறிப்பாக அமெரிக்காவும் இந்தியாவும் தமிழ்மக்களை வைத்து சிறிலங்காவில் ஒரு "கதகளி" ஆட நினைக்கிறது.

தமிழ்க்கட்சிகள் ஒவ்வொண்டும் தனித்தனியே தங்களின் கொள்கைகளை இந்த நாடுகளுடன் பேசும்போது முன்வைக்கின்றன.

அரசியல் வேறுபாடுகளைக் கடந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒண்டு திரட்டி ஓரணியாக பலமாக எங்களின் "நிலைப்பாட்டை" நாங்கள் முன்வைக்கும் போதுதான் அது காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

எங்களுக்குள் ஆயிரம் "வெட்டுக்குத்துகள்" இருக்கலாம்.
நாலு சுவத்துக்குள்ள பிச்சுப்புடுங்குங்கோ!

அதை திருத்தேலாது.

ஆனால், சர்வதேச சமூகம் எங்கள் வாசல் வரை வந்து நிண்டு பேசக்கூப்பிடும் போது;

எங்களுக்குள்ள அடிபட்டு வந்த இரத்தத்தையும், வீக்கத்தையும் மறைச்சுக்கொண்டும் கைகோர்த்து சிரிச்சுக்கொண்டும் பேசவேணும்.

அதுதான் "ராஜதந்திரம்"!
அதுதான் " அரசியல் சாணக்கியம்"!

ஆனால்;

அதுவா நடக்குது இங்க?

வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்

சம்பந்தன் தலைமையிலான குறூப் ஒரு கதை!

கஜேந்திரகுமார் குறூப் வேற கதை!

விக்கினேஸ்வரன் குறூப் இன்னொரு கதை!

டக்ளஸ் குறூப் பிறிம்பா ஒரு கதை!

ஒட்டுமொத்தத்தில் ஈழத்தமிழ் மக்களின் மனநிலையிலிருந்து பேசவோ;

அல்லது...

அவர்களுக்கான ஒரு "வெளியுறவுக் கொள்கையை" திட்டவட்டமாக உருவாக்கவோ எவருக்கும் அக்கறையில்லை.

இதுக்கிடையில் உலகம் பூராகவும் இருக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தங்களுக்கு எண்டு தனித்தனியே ஒரு கொள்கையை தூக்கிப்பிடிச்சுக் கொண்டு திரியினம்.

உதாரணத்துக்கு ஒரு வெளிநாட்டு ராஜதந்திரி மேற்சொன்ன எல்லாத் தரப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினால்;

"தமிழர்களுக்கு என்னதான் பிரச்சினை?" எண்டு விடைதெரியாமல்;

இறுதியில் தலைமயிரைப் பிச்சுக் கொண்டு லூசாக்கி ஆஸ்பத்திரியில்தான் இருப்பார்.

ஆக;

மீண்டும் மீண்டும் கனக்கத்தரம் கத்தியும் ஆரும் கேட்பதாக இல்லை.

தங்கள் தங்களின் அரசியல் சுயலாபங்களுக்காக மீண்டும் மீண்டும் எங்களுக்கு கிடைக்கும் "வாய்ப்புகளை" கை நழுவ விட்டுக்கொண்டிருக்கிறோம்.

தனித்தனி குழுக்களாக தமிழர்களின் அரசியல் கட்சிகளை பிரிச்சு வைச்சு பேரினவாதம் தன் விளையாட்டை திறமாக ஆடுகிறது.

இது தெரியாத எங்கட "மோட்டுக்குறூப்புகள்" மீண்டும் மீண்டும் செய்த பிழைகளை திரும்ப திரும்ப செய்கின்றன.

இறுதிக் காலத்தில் சம்பந்தனும் மாவையும் இந்த இனத்துக்காக ஏதாவது பிரயோசனமாக செய்வம் எண்டு மனசார நினைச்சால்;

ஒண்டு செய்துபோட்டுப் போங்கோ.

ஒட்டுமொத்த தமிழ் அரசியல் கட்சிகளையும் கூப்பிட்டு ஆற அமர இருந்து பேசி;

"ஈழத்தமிழர்களுக்கான ஒரு வெளியுறவு கொள்கையை" உருவாக்குங்கள்.

அதை புலம்பெயர் அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

எம் இனத்துக்கான அரசியல் விடுதலைக்காக எல்லோரும் ஒன்றாகக் குரல் கொடுப்போம்.

குரல்கள் வேறுவேறாக இருந்தாலும் நாங்கள் எழுப்பும் கோரிக்கைகள் "ஒன்றாக" இருக்கட்டும்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலிருந்து ஒருமித்த குரலில் தமிழர்களுக்கான "உரிமைக்குரல்" ஓங்கி ஒலிக்கவேண்டும்.

மிகத்தெளிவாக ஒலிக்கவேண்டும்.

பூனைக்கு ஆர் மணி கட்டுவது???

★★★

அரசியல் கைதிகளை விடுவிச்சதின் பின்னணியில் பல கதைகள் உலாவுது.

நான் கதைச்சுத்தான் வெளியில விட்டவங்கள் எண்டு ஒரு குறூப்பும்;

நாமல் அடுத்த பிரதமராக வேண்டும் எண்டால் தமிழாக்களின் வாக்கு வேணும் எண்டு ஒரு குறூப்பும்;

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வாலைக்காட்டத்தான் கோட்டாபய வெளிய விட்டவர் எண்டு இன்னொரு குறூப்பும்;

சொல்லிக்கொண்டு திரியினம்.

எது என்னவோ;

பல ஆண்டுகளாக இருளுக்குள் இருப்புக்கம்பிகளுக்கு பின்னால் இருந்த அந்த 16 பொடியளின் வாழ்வில் ஒரு விடியல் வந்திருக்கு!

இன்னும் எத்தனையோ பொடியள் அந்த விடியலுக்காக ஏங்கித்தவிச்சு பல ஆண்டுகளாக நரகவேதனையில் வாழுறாங்கள்.

அவங்களுக்கும் ஒரு விடிவுகாலம் வெகுவிரைவில் வரவேணும் எண்டு கடவுளை கும்பிடுவம்.

"கொலைக்குற்ற தண்டனை பெற்ற துமிந்தவை நான் வெளியில விடுவன். என்ர முடிவில ஆரும் மூக்கை நுழைக்க ஏலாது" என சனாதிபதி கோட்டாபய மிகக்காட்டமாக சொல்லியிருக்கிறார்.

இதைக்கேட்ட பல புத்தபிக்குகள் கொதிச்சுப்போய் இருக்கினமாம்.

"உங்கட கொதிப்புகளை உங்களோட வைச்சுக்கொள்ளுங்கோ. மீறி கொதிச்சால் விபரீதம் ஆகும்" எண்ட தொனியில கோட்டாவின் இந்தப்பேச்சு தெற்கில் சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே சீனாவுடனான நெருக்கமான உறவில் இருக்கும் ராஜபக்ஷ ஆளும் தரப்பில் "கடுப்பில்" இருக்கும்;

புத்தபிக்குகளும், அரசியல் கட்சிகளும் "துமிந்த" விடுதலையின் பின்னர் பெரும் ஆத்திரத்தில இருக்கினமாம்.

என்னதான் சலசலப்புகள், எதிர்ப்புகள் வந்தாலும் ராஜபக்ஷ ஆளும் தரப்பு அதை கண்டுகொள்வதாகவே இல்லை.

கோட்டா அரசு ஒரு "மோட்டுத் தைரியத்துடன்" தெற்கில் கிளம்பும் அரசுக்கெதிரான கிளர்ச்சிகளை சிம்பிளாக கையாள்கிறது.

அதுவே தெற்கில் பலரின் கோபத்தை இன்னும் இன்னும் அதிகரித்துச்செல்கிறது.

"என்ன தைரியத்தில் ஆளும் அரசு இந்தளவு எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இப்படியான செயல்களை செய்கிறது?" என்ற மிகச்சிக்கலான கேள்விக்கு யாரிடமும் பதில் இல்லை!

சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதால் தான் பௌத்த மதவாதிகளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் துள்ளுகினம் எண்டு நினைச்சியள் எண்டால் அது உங்கட மடத்தனம்.

ஒரு பேச்சுக்கு நாளைக்கு இந்த ராஜபக்ஷ அரசு கவுண்டு போய் புதிய அரசு வந்தாலும்;

அந்த அரசு ஒரு போதும் சீன எதிர்ப்பை காட்டிவிடாது.

ஏனெண்டால் சிறிலங்காவில் எந்தக்கட்சி ஆட்சிக்கட்டிலில் ஏறி அமர்ந்தாலும்;

பேரினவாத புத்தியில் இருந்து எழுதப்பட்ட "சிறிலங்காவின் வெளியுறவு கொள்கையில்" எந்தவித பெரிய மாற்றமும் நிகழாது.

ஒரு பகிடிக்கு சொல்லுறன்.

நாளைக்கு ரணிலோ, சஜித்தோ பெசிலோ ஆட்சிக்கு வந்தாலும் கொழும்புத் துறைமுக நகரத்தை சீனாவிடமிருந்து புடுங்கி அமெரிக்காவிடம் கொடுத்துவிட மாட்டார்கள்.

இதைப்புரிஞ்சால் சிறிலங்காவின் அரசியலைப் புரிஞ்சு கொள்வதில் சிக்கல் இருக்காது.

இதையெல்லாம் கடந்து இதுக்குள்ளால "சுழிச்சோடி" எமக்கான உரிமைகளை நிலைநிறுத்துவதில்தான் எங்கட "கெட்டித்தனம்" இருக்கு!

2009 இல் மூடிய கதவுகள் பல இப்ப எமக்காக மெதுவாக திறக்க ஆரம்பித்து விட்டன.

மீண்டும் அவை மூடப்பட முதல் எமக்கான "தேவைகளை" நிறைவு செய்து;

விழுந்து கிடக்கும் நாங்கள் "எழும்பி" நிக்கவேணும். அல்லது;

இப்பிடியே விழுந்து கிடந்து சாகவேண்டியதுதான்.

## மஸ்கெலியாவில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி; எரிபொருள் நிரப்பும் நிலையம் – சமுர்த்தி வங்கிக்கு பூட்டு







(எம்.கிருஸ்ணா)

மஸ்கெலியா பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பகுதியில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, நோர்வூட் நகரிலுள்ள மதுபானசாலை, எரிபொருள் நிரப்பும் நிலையம் மற்றும் சமுர்த்தி வங்கி ஆகியன காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று (03) காலை கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையிலேயே குறித்த 16 பேருக்கும் தொற்று இருப்பது உறுதியானது.

இந்நிலையில் நோர்வூட் பகுதியிலுள்ள மதுபானசாலை, பெற்றோல் நிரப்பும் நிலையம், சமுர்த்தி வங்கி ஆகியவை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகவும், இனங் காணப்பட்ட தொற்றுக்குள்ளானோரில் சமுர்த்தி வங்கியில் பணியாற்றும் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதுடன், பெற்றோல் நிரப்பும் நிலையம் மற்றும் மதுபானசாலைக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் உயிரிழந்த ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். தொற்றுநீக்கி தெளிக்கப்பட்ட பின்னர் மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## பலாமரத்தில் தூக்கிட்ட நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

### நோர்வூட் – வெஞ்சர் பகுதியில் சம்பவம்

(எம்.கிருஸ்ணா)

நோர்வூட் - வென்ஞர் பகுதியில் பலாமரத்தில் தூக்கிட்ட நிலையில் ஆணொருவரின் சடலத்தை நோர்வூட் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வென்ஞர் லோவலோரன்ஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய திருக்கேதீஸ்வரன் (சங்கர்) என்பவரே இவ்வாறு நேற்று (03) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டிலிருந்து 150 மீற்றர் தூரத்திலுள்ள பலாமரமொன்றில் சடலமொன்று தொங்குவதைக் கண்ட அயல் வீட்டார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை மூன்று மணியளவில் மாடுபிடிக்க செல்வதாக கூறிவிட்டு, வீட்டிலிருந்து சென்றதாக வீட்டார் தெரிவிப்பதுடன், சடலமாக





மீட்கப்பட்டவரின் சட்டை பையில் 'எனது மரணத்தை நானாகவே தேடிக்கொண்டேன். எனது குடும்பத்தினரை யாரும் துன்புறுத்த வேண்டாம். எனது சுய சிந்தனையிலேயே இக்கடிதத்தை எழுதுகிறேன்' என்று எழுதப்பட்ட கடிதமொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடன் சுமையே தற்கொலைக்கான காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரி திருமதி தனலக்ஷ்மி தலைமையில் மரண விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொகவந்தலாவையில் ரிப்பர் ரக வாகனம் விபத்து – ஒருவர் படுகாயம்





(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

கொங்றீட் பாதை புனரமைப்புப்பணிக்காக கருங்கற்கள் ஏற்றிச்சென்ற ரிப்பர்ரக லொறியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குட்பட பொகவான தோட்டப்பகுதியிலேயே நேற்று முன்தினம் மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமுற்ற லொறியின் சாரதி சிகிச்சைக்காக பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாணத்தில் 24 மணிநேரத்தில் 160 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

### இதுவரை 246 பேர் உயிரிழப்பு

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் 24 மணிநேரத்தில் கொவிட் தொற்றுக்குள்ளான 160 பேர் இணங்காணப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.



மாகாணத்தில் நேற்று முன்தினம் (02) காலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் தொற்றுக்குள்ளான 160 பேரில் திருகோணமலை மாவட்டத்தில் 02, மட்டக்களப்பு 111, அம்பாறை 05, கல்முனை 42 என கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொரோனாவின் மூன்றாம் அலையில் மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 11 ஆயிரத்து 253 நோயாளர்களும், 246 மரணங்களும் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.


கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம்: 2788 சீட்டிழுப்பு திகதி: 02.07.2021

ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 05 59 60 69

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 186 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 421 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 10501 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 6798 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 172267 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 31426 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 221,426

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,885,280.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 75,240,712.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம்: 4493
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
திகதி: 02.07.2021

வெற்றி எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 1 0 8 0 4 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 1 0 8 0 4 3 | ரூபா. 2,000,000/- | 2 |
| 2ஆம் பரிசு | 0 8 0 4 3 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 8 0 4 3 | ரூபா. 10,000/- | 102 |
| 4ஆம் பரிசு | 0 4 3 | ரூபா. 1,000/- | 1096 |
| 5ஆம் பரிசு | 4 3 | ரூபா. 100/- | 10927 |
| 6ஆம் பரிசு | 3 | ரூபா. 20/- | 108630 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 1 0 8 0 4 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 1 0 8 0 | ரூபா. 1,000/- | 113 |
| 9ஆம் பரிசு | 1 0 8 | ரூபா. 100/- | 1084 |
| 10ஆம் பரிசு | 1 0 | ரூபா. 50/- | 10850 |
| 11ஆம் பரிசு | Y | ரூபா. 20/- | 43402 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 12,133,240.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,864,648.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

# நுண்கடனும் பெண்களும்




## "சிக்கலில் சிக்கியோரை மீட்போம்!"

**சபீர் மொஹமட்**

கொழுந்து விட்டெரியும் வெயிலில்! அடை மழை! இரத்தத்தை உறிஞ்சும் கொசு! இத்தனைக்கும் மத்தியில் தமது உரிமைக்காக அம்மக்கள் தொடர்ந்தும் 55 நாட்கள் குரல் கொடுத்தார்கள். சேலையணிந்தும், சல்வார் அணிந்தும், சட்டையணிந்தும், அபாயா அணிந்தும் அனைத்து இன,மதப் பெண்களும் வந்தமர்ந்து கொள்வார்கள். நண்பகலில் தலைக்குமேல் தகரம்! வெப்பத்தால் பெருக்கெடுக்கும் வியர்வை, சோர்வு ஆனாலும் அவர்கள் தமது எதிர்ப்புணர்வைக் கைவிடவில்லை. இப்பெண்கள் மட்டுமல்ல, நாடெங்கும் வடக்கு-கிழக்கு உட்பட 17 மாவட்டங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கடந்த மாதங்களில் இடம்பெற்றன. இவ்வாறு எல்லாப் பெண்களும் கூடியது எதற்காக?

நுண்கடன் சூழ்ச்சி வலையிலிருந்து தம்மையும், தமது சந்ததிகளையும் விடுவிப்பதற்காகவே அவர்கள் ஒன்றாகக் கூடி போராடிக்கொண்டிருந்தனர். நாடளாவிய ரீதியில் நுண்கடன் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சுமார் 28 இலட்சம் பெண்களை அதிலிருந்து மீட்க வேண்டுமென ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

நுண்கடன் என்பது கிராம மட்டத்தில் வங்கியில் கடன் பெறமுடியாதவர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கடன் கொடுக்கப்படுவது அவரவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகும். அதாவது அவர்களின் உற்பத்தி, கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகும். "குறிப்பாக, கிராமப்புற பெண்களை ஆடு-மாடு வளர்ப்பு, சிறுவியாபாரம், மற்றும் கைத்தொழில்களில் ஈடுபடுத்துவதன் மூலம் தங்கள் வறுமையை தாங்களாகவே ஒழித்து கொள்வதற்கு உதவுவதுதான் இதன் நோக்கம்" என்று 'பெண்களுக்கான உலகவங்கி'( WOMENS WORLD BANKING -WWB ) என்ற அமைப்பு கூறுகிறது. ஆனால், நுண்கடன் திட்டத்திற்கு எதிராக இலங்கையில் பெண்கள் கிளர்ந்தெழுந்தது எதனால்?

வறுமையை நீக்கவந்த கடன்வசதி, இன்று பல குடும்பங்களை வறுமைக்குள் தள்ளி வீதியில் நிறுத்தியுள்ளது. பல பெண்களின் தற்கொலைகளுக்கு காரணமாகியுள்ளது. அதற்காக எல்லா இனப் பெண்களும் கூடிநின்று தம் பலத்தைக் காட்டினர். இந்தக் கடன் சுமையை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தினர். அதிலும், இந்த கொரோனா காலத்தில் உலக நாடுகளே பொருளாதாரத்தை இழந்து நிற்கின்ற நிலையில், அன்றாடம் உழைத்து உண்ணும் இவர்களிடம் கடனை வசூலிக்க இந்த நுண்கடன் நிதி நிறுவனங்கள் வரிந்து கட்டிக்கொன்று நிற்கின்றன. அரசின் அனுமதியுடன் கிராமங்கள் எங்கும் பரந்து விரிந்திருக்கும் இந்த நிதி நிறுவனங்களை அவற்றின் வட்டி கொடுப்பனவுகளை உரியமுறையில் கட்டுப்படுத்த அரசு தவறியது ஏன்?

மாறிமாறி ஆட்சி பீடமேறுகின்ற சகல அரசியல்வாதிகளும் வெறுமனே தமது வாக்குப் பெட்டிகளை நிரப்ப மீன் பிடிக்கும்போது வீசுகின்ற தூண்டில் தீனிபோல், நெருக்கடிக்குள்ளாகியுள்ள மக்களை பயன்படுத்தியுள்ளனர். தற்போதைய அரசும் பதவிக்கு வந்து பல பௌர்ணமிகளும், அமாவாசைகளும் கடந்துள்ளன. பதவிக்கு வருகின்ற புதிய ஜனாதிபதி ஒரே நாளில் எமது கடன்களை நீக்குவார் என்ற நம்பிக்கையில், வாக்களித்துவிட்டு இன்னமும் விடியாத பல இரவுகளுக்குள் கடன் வாங்கிய மக்கள் விடியலுக்காகக் காத்திருந்து களைத்துவிட்டனர். கடந்த வருடமும் இதே போல் தூண்டில் வீசிய இந்த அரசு, காலை உணவையே மதியமும் உண்பதைப்போல் ஜனாதிபதி தேர்தலின்போது அளித்த அதே வாக்குறுதிகளைப் பொதுத்தேர்தலிலும் அளித்து விட்டு தற்போது இம்மக்களை கைகழுவி உள்ளது.

மேலும், இந்நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கம் மட்டுமே காரணமாகி விட முடியாது. கடந்த நல்லாட்சி அரசு கூட மக்களுக்கு பல்வேறு நம்பிக்கை தரக்கூடிய தேர்தல் வாக்குறுதிகளை அளித்தே ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. 2019 ஜனாதிபதி தேர்தலின்போது எதிர்க் கட்சியில் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவும் தனது தேர்தல் பிரசாரங்களின்போது தான் ஆட்சிக்கு வந்தால் நுண்கடன் நெருக்கடிக்கான ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்தார். ஆனாலும், 2015ஆம் ஆண்டு ஆட்சி பீடம் ஏறிய நல்லாட்சி அரசாங்கத்தில் தான் ஒரு அமைச்சராக இருந்த போதிலும், பற்றி எரிந்துகொண்டிருந்த நுண்கடன் நெருப்பின் மீது ஒரு வாளி நீர் கூட ஊற்றவில்லை என்பதே யதார்த்தம்.

இலங்கையில் நுண்கடன் நெருக்கடியானது புற்றுநோய் போல் நாடு முழுதும் வியாபிக்கத் தொடங்கியது 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னரேயாகும். இது பற்றி 2019/10/31 ஆம் திகதி வெளிவந்த ராவய பத்திரிகையில், "இலங்கையில் நுண்கடன் திட்டத்தில் ஏற்பட்ட பாரிய திருப்புமுனைகளாக 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தமும், 2009ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த உள்நாட்டு யுத்தத்தையும் குறிப்பிடலாம். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வதேச அளவில் இலங்கைக்கு பாரியளவில் நிதி கிடைத்தது. அந்நிதியினைக் கொண்டு பல்வேறு நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், குறித்த பணம் தவறான முறையில் உபயோகிக்கப்பட்டமை தொடர்பில் பல அறிக்கைகளும் உள்ளன" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தொலைவில் தேர்தல்கள் எதுவும் இல்லாமையால் நுண்கடன் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்ற, அதிலும் இந்தக் கொரோனா காலத்தில் தவிக்கும் மக்களைப்பற்றி பேசுவதற்கோ, அவர்கள் பக்கம் நின்று கொள்ளவோ யாருமில்லை. அவை தனிநபர் பிரச்சினைகளாக மட்டுமே பார்க்கப்படுகின்றன. அதனால்தான் இந்த பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால், நிதி நிறுவனங்கள் இந்த சூழலையும் பயன்படுத்தி அமைதியாக முன்பை விட சூட்சுமமான முறையில் கிராமப்புற மக்களை குறிப்பாக பெண்களை இலக்கு வைத்து வேட்டையில் இறங்குகின்றன. நிதி நிறுவனங்கள் வலை விரிப்பது அரசியல்வாதிகளுக்கோ, பணம் படைத்தவர்களுக்கோ அல்ல. எனவே, இதனுள் சிக்கித்தவித்து வேதனையை உணர்ந்த பெண்களைப் பாதுகாப்பதற்காக ஒரு சத்தியாகிரகத்தை ஆரம்பித்தனர்.

2000ஆம் ஆண்டுகளில் விவசாய கடன் திட்டத்திற்கு எதிராக விவசாயிகள் மேற்கொண்ட போராட்டமானது, ஆட்சியிலிருந்த சந்திரிகாவின் அரசையே உலுக்கியது. அப்போதைய அரசை அதிரவைத்த அப்போராட்டங்கள் நிகழ்ந்த போர்க்களம் ஹிங்குராகொடை அரச சபை மண்டபமாகும். தற்போது இல்லத்தரசிகளின் உயிரினை பலியெடுத்துக்கொண்டுள்ள நுண்கடன் பொறியினை எதிர்த்துப்போராட முன்னின்று நடத்துகின்ற வழிகாட்டியாக செயற்பட்டவர், அன்று விவசாயக் கடனுக்கு எதிராகக் குரல் கொடுத்த 'கௌடுள்ள ஜயதிஸ்ஸ' என்றழைக்கப்படுகின்ற முற்போக்கு விவசாயக் கூட்டமைப்பின் தலைவர் ஜயதிஸ்ஸவே ஆகும். மேலும், இப்பெண்கள் தெரிவுசெய்த இடம் அதே ஹிங்குராகொடை அரச சபை மண்டபமாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அந்த சத்தியாகிரக போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும், அவர்கள் முகம் கொடுத்து வந்த இன்னல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

### சுங்காவில

தனிநபர்களாக நாம் பெண்களின் அனுபவங்களை பெறுவதற்காக பொலன்னறுவ, சுங்காவிலவிற்கு நோன்பு காலத்தில் பயணித்தோம். சுங்காவில பெரிய பள்ளிவாசலருகே செல்லும்போது மாலை நேரமாகிவிட்டதால் நோன்புக் கஞ்சியினைப் பெற ஓரிருவர் வந்துகொண்டிருந்தனர். அதனிடையே பள்ளிவாசலினுள் கதைத்துக் கொண்டிருந்த ஊர்ப் பெரியவர்கள் சிலரை அணுகி நாம் அங்கே சென்றதன் நோக்கம் பற்றித் தெளிவுபடுத்தினோம். அதாவது "நுண்கடன் வாங்கி பின்னர் அதனை செலுத்திக் கொள்ள முடியாமல் நெருக்கடிக்குள்ளாகித் தவிக்கின்ற மக்கள் பற்றிய தகவலறிய வந்துள்ளோம்" என்றோம். எனினும், நாம் நினைத்ததைவிட தகவலறிவது கடினம் என்பதனை அவர்களுடைய முகபாவனையிலிருந்தும், பதில்களிலிருந்தும் அறிய முடிந்தது. அங்கிருந்த ஒருவர் "நாம் ஊருக்குக் கடன் கொடுக்க வருபவர்களை அனுமதிப்பதில்லை. அவர்கள் வந்தால் மறுகணம் வந்த வழியே திருப்பி அனுப்பப்படுவார்கள்" என்றார். இவ்வாறு பதிலளிப்பதற்கு இருமுறை தயங்கியபோதுதான் ஒரு விடயம் பற்றி தெளிவானது. அதுதான் இஸ்லாத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு வட்டி என்பது தடுக்கப்பட்ட ஒன்றாகும். வாங்கவோ, கொடுக்கவோ ஏன் சாட்சியாகக் கூட கையெழுத்திடவே முடியாத அந்த வட்டியுடன் கூடிய கடனையே அவ்வூர் மக்கள் வாங்கி அவதிப்படுகின்றார்கள்.

"நானும் ஒரு நோன்பாளிதான். காலையில் ஒரு யோகட்டை மட்டுமே உண்டு நாள் முழுதும் கடன் வாங்கி கஷ்டப்படுகின்ற மக்களைத்தேடி பொலன்னறுவை பூராக அலைகின்றேன். தெரியாத்தனமாக கடன் வாங்கி வட்டிக்கு மேல் வட்டி கட்டி கொண்டு பல பெண்களும் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களைப் பற்றிய சரியான தகவல்கள் உரிய அதிகாரிகளுக்கும், ஊடகங்களுக்கும் சென்றடைந்தாலன்றி ஒருபோதும் அவர்களுக்குத் தீர்வுகள் கிடைக்காது" என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்திய பின்னரே அவ்வூரைச் சேர்ந்த ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டி அவரை சந்திக்கும்படி கூறினார்கள். அப்பெண்ணின் குடிலோ பள்ளிவாசலிலிருந்து கூப்பிடு தூரத்திலேயே அமைந்துள்ளது. பள்ளிவாசலுக்கு மிக அருகிலுள்ள இப்பெண்ணின் நிலைமையே இவ்வாறென்றால், ஊர்ப்பள்ளிவாசல் நிர்வாகத்தின் கண்களில் மண்ணைத் தூவி எத்தனை நிதிநிறுவனங்கள் இவ்வூர் மக்களை ஏமாற்றிக் கடன் கொடுத்திருக்கும்?

குறித்த பெண் எங்களிடம் வேண்டிக்கொண்ட ஒரேயொரு விடயம் தனது அடையாளத்தினை வெளிப்படுத்த வேண்டாம் என்பது மட்டுமே. பெயர் குறிப்பிட விரும்பாத இந்தப் பெண் எம்முடன் உரையாடுகையில், தமது குடும்பத்தின் பொருளாதார தேவைகளுக்காக ஒரு நிதிநிறுவனத்திடம் மட்டுமல்ல, பல்வேறு நுண்நிதி நிறுவனங்களில் இருந்தும் கடன் வாங்கியுள்ளமை தெரியவந்தது.

அவரது கணவர் ஒரு கட்டடத் தொழிலாளி. அவ்வப்போது கணவருக்கு ஏற்படுகின்ற உடல்நலக்குறைவு காரணமாக அவர்களின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மோசமடைந்து வந்ததுள்ளது. இதற்கிடையில் சுயதொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்காக நிதி தேவைப்பட்டபோது புகழ்பெற்ற முன்னணி நிதி நிறுவனங்களின் உதவியைப் பெறுவது அவர்களுக்கு கடினமானதாக இருந்து வந்துள்து. இந்நிலையிலேயே நுண்கடன் நிறுவனங்கள் இவர்களுக்கு கடன் வழங்குவதற்கு முன் வந்துள்ளன. அதற்காக அவர்கள் கோரியது பெண்கள் குழுக்களை அமைப்பது மட்டுமேயாகும். மதங்களும், நம்பிக்கைகளும் எவ்வளவுதான் தடைகளை செய்திருந்தாலும் இவ்வாறு பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களை இனங்காண்பதென்பது அந்நிறுவனங்களுக்கு இலகுவானதொரு விடயமாகவே இருந்ததுள்ளது. அவ்வாறு பெண்களை ஒன்றிணைத்து ஒரு குழுவாக்கி, ஒவ்வொருவரினதும் நம்பிக்கையை அவர்களுக்குப் பொறுப்பாக்கி, கடன்களை வழங்கியுள்ளனர். பெண்களும் தாம் குழுவாக இணைந்து பணம்பெறுவது இலகுவாக உள்ளது. தமது குடும்ப கஷ்டத்திற்கு இது உதவுமென நினைத்து வட்டிகள் பற்றி எந்த அறிவுமில்லாது வலைக்குள் சிக்கியுள்ளனர். ஒருவரிடம் வாங்கிய கடனை அடைக்க இன்னொரு நிதி நிறுவனத்திடம் கடன்பெற்ற கதைகளும் உண்டு. சுங்காவிலவில் மாத்திரமன்றி முழு இலங்கையிலும் கடன் வாங்கியவர்களின் நிலைமை இதுதான். கொரோனா காரணமாக கடன் வாங்கிய முக்கால்வாசிப் பேர் தொழிலின்றி திண்டாடுகிறார்கள். ஏனெனில், நிரந்தரமான வருமானம் ஈட்டுகின்ற எவருக்கும் நுண்கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை.

**(அடையாளத்தினை வெளிப்படுத்தாத பெண்)**



நிமல்சிறி விசேட தேவையுள்ள ஒருவர். பிறப்பிலேயே அவர் அப்படித்தான் என நீங்கள் தவறாக நினைத்துவிட வேண்டாம். குடும்ப சுமையை தன் தோள் மீது சுமந்து நிமல்சிறி 2000ஆம் ஆண்டு வெளிநாடு சென்றிருக்கிறார். ஆனால், 2007ஆம் ஆண்டு எதிர்பாராத தாக்குதல் ஒன்றுக்குள்ளாகி ஊனமுற்ற நிலையில் இலங்கை வந்திருக்கிறார்.

"இவரை இலங்கைக்கு கொண்டு வரும்போது மயக்கமடைந்த நிலையிலேயே இருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, இந்நிலைமையைக் கண்ட மனைவியும், பிள்ளைகளும் இவரை விட்டுப் பிரிந்துவிட்டனர். நிமல்சிறியின் தாய் சந்திராவதிதான் கொஞ்சம் கொஞ்சமாக சிகிச்சையளித்து ஓரளவிற்கு அவரைக் காப்பாற்றி வருகின்றார்"என்றார் நிமல்சிறியின் மாமி பிரேமாவதி. முஸ்லிம் பெண்ணான பிரேமாவதியின் கணவர் இறந்துவிட்டடார். சரளமாக சிங்கள மொழியை பேச முடிந்த பிரேமாவதி தலையினை மறைக்கும் துணியைப் போடாவிட்டால் ஒரு முஸ்லிம் பெண் என்பதை இனம் காணவே முடியாது. அவருடைய மூத்த மகன் ஒரு மௌலவி. இரண்டாவது மகனும் அண்ணனையே பின்தொடர்கிறார். இந்த நிலையில் தனது உறவினரான நிமல்சிறியின் தாய் பற்றி மேலும் கூறினார்.

"நிமல்சிறியின் மேலதிக மருத்துவ செலவுகளுக்காக மாடொன்றை வளர்க்க கடன் வாங்கினார். ஆனால், வாங்கி ஒரு சில நாட்களில் அந்த மாடு இறந்து விட்டது. கடன் கட்ட வழியில்லை. கடன் கொடுத்தவர்கள் அடிக்கடி பணம் கேட்டு வீடு தேடிவந்து ஏசிவிட்டு போவார்கள்" என்றார்.

இப்பொழுதெல்லாம் சந்திராவதி தனது குழந்தையை கட்டிலில் வைத்துவிட்டு ஆடு மேய்க்க போய்விடுகிறார். மாலையில் வயலுக்குச் செல்கிறார். இரவிலே வீட்டு வேலைகளையும் செய்து சிறுகச் சிறுக பணம் சேமித்து தனது பிள்ளைக்கு வைத்தியம் செய்கிறார். கடனையும் அடைக்கிறார்.

**(நிமல்சிறியும் பிரேமாவதியும்)**



முஸ்லிம் - சிங்களம் என வேறுபாடுகாட்டாத இம்மக்களிடம் மனிதாபிமான பிணைப்பு மட்டுமே காணப்படுகிறது. சுங்காவிலவில் சிங்களவர்கள் தமிழை சரளமாகவும், முஸ்லிம்கள் சிங்களத்தை சரளமாகவும் பேசுகிறார்கள். சில சமயங்களில் பக்கத்திலுள்ள முஸ்லிம் வீடுகளிலிருந்து சந்திராவதிக்கும், மகனுக்கும் உணவு கிடைக்கும். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களே இவர்களை மருந்துக்காக அனுராதபுரம் வரை அழைத்துச் செல்வார்கள். எந்த வேறுபாடுமற்ற இவர்களிடம் நுண்கடனும் எந்த வேறுபாடுமற்று கழுத்தை நெரிக்கிறது.

### தம்பாலா

சுங்காவிலவிலிருந்து பொலன்னறுவை நோக்கி 15 கி.மீ. தூரத்தில் தம்பாலா என்ற ஒரு மீன்பிடி கிராமம் காணப்படுகிறது. சுமார் பத்து - பதினைந்து வருடங்களுக்கு முன் இலங்கையிலிருந்த மிகப்பெரிய முஸ்லிம் விவசாயக் கிராமங்களுள் தம்பாலாவும் ஒன்று. கிட்டத்தட்ட 1500 ஹெக்டேர், அதாவது 15 சதுர கிலோமீற்றர் அளவிற்கு அம்மக்கள் விவசாயம் செய்து நாட்டு மக்களுக்கு உணவளித்துள்ளார்கள். ஆனால், தற்போது அம்மக்களின் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட்ட வனங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதன் பின்னர் இம்மக்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும், வாவி அமைந்திருப்பது சரணாலயத்திற்குள்ளே என்பதால் வனஜீவராசிகள் திணைக்களம் அதனையும் தடுத்தது. தம்பாலா விவசாயிகளால் இப்போது அந்தப்பகுதிக்கு செல்லவே முடியாதுள்ளது. அவ்வாறு சென்றால் வனஜீவராசிகள் திணைக்களம் இவர்களை கைதுசெய்து பிணையின்றி சிறைச்சாலையில் அடைத்து விடுவார்கள். அவ்வாறு வாழ்வாதாரத்தையே இழந்து தவிக்கின்ற இம்மக்களும் இன்றளவில் அதீத வட்டிக்கு ஏமாற்றப்பட்டு நுண்கடன் வலையில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

முன்னர் விவசாயம் செய்து, பின் வெளிநாடு சென்று, அதன் பின்னர் தாயகம் திரும்பிய பரீதா உம்மா கடன் வாங்கியது தனது சுகயீனமுற்றிருந்த குழந்தையை காப்பாற்றுவதற்கே ஆகும். அவர் மேலும் கூறுகையில் "முதலில் நாங்கள் கடன் வாங்கும்போது இதன் பாரதூரம் பற்றி அறிந்திருக்கவில்லை. கொஞ்ச காலம் செல்லும்போதுதான் இதன் அதீத வட்டியினை நாம் உணர்ந்தோம். அதிக கடன் சுமையில் நாம் திண்டாடிக் கொண்டிருக்கும் போது இனிமேல் கடன் கட்டத் தேவையில்லை என பிரதேச செயலாளர் காரியாலயத்திலிருந்து தகவல் வந்தது. அதன்பின் நாங்கள் பணம் கட்டவில்லை. பின் திடீரென மீண்டும் மீதி பணத்தை கட்டுமாறு கடிதம் வரத்தொடங்கியது. ஓரிரு மாதங்கள் தாமதமானால் கொழும்பிலிருந்தும் அழைப்புகள் வரும். உரியமுறையில் பணம் கட்டாவிட்டால் எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதாக அவர்கள் கூறுவார்கள். எம்மிடம் உள்ள அனைத்தையுமே நாங்கள் தற்போது இழந்துள்ளோம். இனிமேலும் இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை" என சிகிச்சை பலனின்றி இறந்து போன தனது குழந்தையின் புகைப்படத்தை கையில் வைத்த வண்ணம் பரீதா உம்மா கண்ணீருடன் கூறினார்.

**(பரீதா உம்மா)**



இவ்வாறு கடன் எடுத்த காரணங்களே அழிந்த நிலையில் கடன் இன்னும் முடியாதுள்ளது. இலகுவாக ஒரு தொகைப்பணம் கிடைக்கிறது. அதைவைத்து ஏதாவது செய்யலாம் என நினைத்து இந்த ஏழை மக்கள் விழுந்தது படுபாதாளத்தில்! இதற்குள் அவர்களைத் தள்ளியதில் அரசுக்குதான் பெரும் பொறுப்புண்டு. நிதி நிறுவனங்களின் வட்டிவீதங்கள் பற்றியும் நிதி நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு பற்றியும் அரசின் அலட்சியமே பிரதான காரணம் என பலரும் கூறிவரும் நிலையில், எல்லாப் பெண்களும் இணைந்து இதற்கு குரல் கொடுத்திருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது. அது பொறியில் அகப்பட்ட பெண்களை மீட்பதற்கு உதவவேண்டும்!.

**ஆயிரம் ரூபா சம்பளம் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலான தோட்டங்களில் இன்னும் இது தொடர்பான பிரச்சினைகள் இருக்கின்றன. தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே உரிய தீர்வை பெறமுடியும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார். 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

**செவ்வியின் முழு விபரம் வருமாறு,**



**கம்பனிகளின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே உரிய தீர்வை பெறமுடியும். மலையகத்தில் ஒரு சாரார் போராட்டம் முன்னெடுக்கையில் ஏனையோர் கம்பனிகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயற்படுகின்றனர்**

# சம்பளப் பிரச்சினை இன்னும் தீரவில்லை

**? கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மலையகத்தில் எவ்வாறு உள்ளன?**

கொரோனா சூழ்நிலை மலையகத்தை பொறுத்த வரையில் மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. கொரோனா நோயினால் பாதிக்கபட்டவர்களைவிட கொரோனா கட்டுப் பாடுகளான தனிமைப்படுத் தல் மூலம் வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்டவர்களே அதிகம்.

அதிகமானோருக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் போனது. கொழும்பில் வேலை செய்த இளைஞர்களும் கூட தொழில்வாய்ப்பை இழந்து சொந்த ஊர்களுக்கு வந்துள்ளனர். இவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து எதுவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

**? மலையகத்தில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முறையாக இடம்பெறுவதாக தெரியவில்லை. இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

தடுப்பூசிகளை அரசாங்கம் முறையாக கொள்வனவுசெய்யவில்லை. தேவையான அளவு தடுப்பூசிகளை முன்கூட்டியே கொள்வனவு செய்திருந்தால் அவற்றுக்கான தட்டுப்பாடு இருந்திருக்காது. மலையகத்தைப் பொறுத்த வரை அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படவில்லை. 60 வயதுக்கு மேற்பட்டோருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமே வழங்கப்பட்டது. அதிலும் முதல் தடவை தடுப்பூசி ஏற்றப்பட்டு ஆறு மாதங்களுக்கு பின்னரே இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டது. இவ்வாறான நிலைமைகளால் மலையக மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்புகள் இருக்கிறன.

**? நாட்டின் கொரோனா சூழ்நிலை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

நாட்டில் ஆரம்பத்தில் கொரோனா தொற்றுக்கு முன்னெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் போல இப்போது இல்லை. ஆரம்பத்தில் பொது முடக்கம் மற்றும் சுகாதார விதிமுறைகளும் மிகவும் இறுக்கமாக

**சம்பளப் பிரச்சினையில் கம்பனிகள் தோட்டங்களை கைவிடும் நிலை வருமாக இருந்தால் பெருந்தோட்டங்களுக்குள்ளும் சீனர்களின் ஆக்கிரமிப்பு இடம்பெறும்**

கடைபிடிக்கப்பட்டன. அதில் பின்னர் தளர்வு நிலை காணப்பட்டதால் தற்போது மூன்றாம் அலை வரைக்கும் வந்துவிட்டது. ஆரம்பத்தில் மரணவீதம் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்ட நிலையில், தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணித்துள்ளனர். நாளொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் மரணிக்கும் நிலை வந்துவிட்டது. அது மாத்திரமன்றி நாளொன்றுக்கு தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அது மாத்திரமின்றி ஒவ்வொரு புதுப்புது பெயர்களில் மிகவும் ஆபத்தான பல கொரோனா வைரஸ்கள் பரவி வருகின்றன. அந்த வகையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட டெல்ட்டா திரிபு வேகமாக பரவும் தன்மை கொண்டது என தெரிவிக்கப்படுகிறது. இது மிகவும் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

**? பெசில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்த பின்னர் ஏற்படப்போகும் அமைச்சரவை மாற்றத்தில் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை அமைச்சராக நியமிக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் எதிர்க்கட்சியிலிருந்து சிலருடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அறியக்கிடைத்துள்ளது. இதில் உங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றதா?**

மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை அமைச்சராக நியமிப்பது தொடர்பில் பேசப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. என்னுடன் இதுவரை பேசவில்லை.

**? அப்படிஅமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி தருவதாக இருந்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?**

மூழ்கிவிடும் என்று தெரிந்தும் அந்தப் படகில் செல்வதற்கு யாரும் விரும்புவதில்லை. அவ்வாறு பயணித்தால் இழப்பு எமக்கே. அதுபோலவே நாமும். அவ்வாறான பதவிகளை வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

**? மலையக அபிவிருத்திக்கான அதிகாரசபை இப்போது செயற்பாட்டு ரீதியாக நடைமுறையில் இல்லை. அது குறித்து உங்களது கருத்து என்ன?**

நல்லாட்சி அரசாங்கத்தில் மலையக அபிவிருத்திக்கான அதிகாரசபையை நாங்களே முன்மொழிந்து கொண்டுவந்தோம். ஆரம்பத்தில் அதன் மூலமாக பல்வேறு திட்டங்களை நாங்கள் நடைமுறைப்படுத்தியிருந்தோம். ஆனால் இப்போது ஆட்சி மாற்றத்துக்கு பிறகு அது செயற்பாட்டில் இல்லை. கிடப்பில் போடப்பட்டுள்ளது. அது தொடர்பில் தற்போது ஆட்சியிலிருக்கும் அரசியல்வாதிகளிடம் கேட்பதே சிறப்பாக இருக்குமென நான் நினைக்கிறேன்.

**? மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றில் அதிகமாக பேசப்படுவதில்லையே?**

மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் நாங்கள் குரல்கொடுத்து கொண்டு தான் இருக்கிறோம். நாம் ஆட்சியில் இருக்கும்போது பல்வேறு வேலைத் திட்டங்களை செய்திருக்கிறோம். 50 ஆயிரம் பேருக்கு ஒரு பிரதேச சபை என்ற வகையிலேயே பிரதேச சபைகள் பிரிக்கப்படுகின்றன. ஆனால் 5 இலட்சம் பேருக்கு 2 பிரதேச சபைகளே ஆரம்பத்தில் காணப்பட்டன. அதன் மூலம் மக்களுக்கு குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டது. எனவே மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாதிருந்தது. அதனை நாமே நாடாளுமன்றத்தில் பேசி கோரிக்கைகளை முன்வைத்தோம். அதன் பலனாகவே மலையகத்தில் பிரதேச சபைகள் பிரிக்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி மலையகத்தில் வீடமைப்பு திட்டங்களையும் நாம் மேற்கொண்டிருந்தோம்.

எனது தனிப்பட்ட தேவை காரணமாக என்னால் கடந்த மூன்று மாதங்களாக நாடாளுமன்றத்துக்கு வருகை தர முடியாதிருந்தமை உண்மை தான்.

ஆயினும் நாங்கள் மலையக மக்களுக்கான பிரச்சினைகள் தொடர்பில் குரல்கொடுக்காமல் இல்லை.

**? இராஜாங்க அமைச்சர் ஜீவனின் அண்மைக்கால செயற்பாடுகள் சில மக்கள் மத்தியில் விமர்சனத்துக்குள்ளாகின. இதுகுறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**நான் விமர்சிக்கும் அளவுக்கு ஜீவன் இன்னும் வளரவில்லை**

அவர் பெண்களை கொச்சைப்படுத்தி பேசியிருந்தார். அதனால் போராட்டங்களும் கூட முன்னெடுத்திருந்தனர். அண்மையில் கூட ஒரு தோட்டத்தில் இடம்பெற்ற பிரச்சினையில் மக்களிடம் பேசுகையில் வன்முறைகளை தூண்டும் வகையில் பேசியிருக்கிறார். பெண்களிடம் கையைப்பிடித்து இழுத்ததாக கூறுமாறு கூறியிருந்தார். அதன் பிறகு கோபத்தில் பேசிவிட்டதாக மன்னிப்பு கோரியிருந்ததும் ஊடகங்கள் வாயிலாக அறியக்கிடைத்திருந்தது. இவ்வாறு இருக்கையில் அவரை விமர்சித்து நான் பேச வேண்டிய தேவையில்லை. மக்களிடம் கேட்டால் இன்னும் தெளிவான பதிலை உங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகிறேன். நான் விமர்சிக்கும் அளவுக்கு அவர் இன்னும் வளரவில்லை.

**? ஆயிரம் ரூபா சம்பளம் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கிறதா? ஆனால் இன்னும் சம்பளப் பிரச்சினை தீர்ந்ததாக தெரியவில்லையே?**

ஆயிரம் ரூபா சம்பளம் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியிலும் பல்வேறு நிபந்தனைகளுடனுமே வழங்கப்பட்டிருந்தாலும் பல்வேறு தோட்டங்களிலும் இன்னும் இது தொடர்பான பிரச்சினைகள் இருக்கின்றன. இன்னும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். இதற்கான தீர்வுகளை மக்கள் அனைவரும் ஒற்றுமையாக சேர்ந்தால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

**கொரோனா நோயினால் பாதிக்கபட்டவர்களைவிட தனிமைப்படுத்தல் மூலம் வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்டவர்களே அதிகம்**

**? ஆயிரம் ரூபா சம்பள வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் தோட்ட கம்பனிகள் பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கின்ற கம்பனிகளுக்கு எதிராக யாரும் பேச முன்வரவில்லையே ஏன்?**

ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்ட பின்னர் கம்பனிகள் மக்களுக்கு பெரும் கெடுபிடிகளை விதித்திருந்தன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டிருந்தன. 18 நாள் வேலை கொடுத்த இடத்தில் 12 நாட்களாகக் கூட குறைத்திருந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்தும் இருந்தனர்.

ஆயினும் இன்னும் அவர்களுக்கு முறையான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கவில்லை. காரணம் என்னவெனில் ஒரு குறிப்பிட்ட பெருந்தோட்ட நிறுவனத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். ஒரு குறித்த நிறுவனத்தின் கீழ் 10 தோட்டங்கள் இருந்தாலும் அந்த பெருந்தோட்ட நிறுவனம் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு 08 தோட்டங்களில் தொழிலா ளர்கள் தொழில்புரிகின் றனர். ஏனைய இரண்டு பிரிவுகளில் அவ்வாறு செயற்படமுடியாதென கம்பனிகளுடன் முரண்படுகின்றனர். இவ்வாறு இருக்கையில் குறித்த நிறுவனம் ஏனைய தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் வேலை செய்யும் போது 02 தோட்டங்களுக்கு மாத்திரம் ஏன் செயற்பட முடியாதென கேள்வியெழுப்பும் லை ஏற்படுகிறது. ஒரு சாரார் போராட்டங்களை முன்னெடுக்கையில் ஏனையோர் தொழிலுக்குச் செல்கின்றனர். இவ்வாறு இருக்கையில் எவ்வாறு நாம் மலையக தொழிலாளர்கள் என கம்பனிகளுடன் பொதுவாக பேச்சுவார்த்தைக்கு செல்லமுடியும்? எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்கள் பெருந்தோட்ட தொழிலாளர்கள் என்ற வகையில் ஒற்றுமையாக செயற்பட்டால் மாத்திரமே உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**? கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் போகும் நிலையில் மலையக மக்களுக்கு அது எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்?**

உண்மையில் கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் போகும் நிலை தான் காணப்படுகிறது. இதனால் விளைவுகள் என்னவோ மக்களுக்கு தான். கம்பனிகளுக்கு எதிராக தொடர்ச்சியாக இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுப்பதாக இருந்தால் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை பொறுத்து கம்பனிகள் தோட்டங்களை கைவிடும் நிலை வருமாக இருந்தால் பெருந்தோட்டங்களுக்குள்ளும் சீனர்களின் ஆக்கிரமிப்பு இடம்பெறும். சீனர்கள் உள்நுழைவதற்கான வாய்ப்புகளை அரசாங்கமே அமைத்துக்கொடுக்கும். அது இன்னும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**? இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையக அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் தலைவர்கள் மக்களுக்கான பிரச்சினைகள் குறித்து பேசுவது குறைவாகவே இருக்கிறது. நாங்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் மலையக மக்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். 4000 வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தோம். தற்போதும் கூட தொழிலற்று கொழும்பு போன்ற பல்வேறு இடங்களில் தொழில்புரியும் நமது மலையக இளைஞர்களை நிலவுடைமையாளர்களாக்க வேண்டும் என பெருந்தோட்ட நிலங்களை பிரித்துக் கொடுப்பது தொடர்பில் பேசியிருந்தோம். அதற்கான பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்தோம். ஆனால் தற்போது ஆளுங்கட்சியில் இருக்கும் மலையக அரசியல்வாதிகள் மக்கள் பிரச்சினைகளை பேசுகிறார்களா என்பது கேள்விக்குறியே. மிகவும் அரிதாகவே இருக்கிறது. ஆட்சிக்கு வந்த மலையக அரசியல்வாதிகள் மலையகத்தவர்களுக்கான எவ்வித வேலைகளையும் முன்னெடுக்கவில்லை என்பதே உண்மை.

**? மலையக மக்களின் பிரச்சினைகள் அரசாங்கத்திடம் கொண்டு செல்லப்பட்டு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றனவா?**

மலையக மக்களுக்கு நாம் பல்வேறு வேலைத்திட்டங் களையும் நாம் கடந்த நல்லாட்சி காலத்தில் முன்னெடுத்திருந்தோம். சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுத்தோம்.

ஆயினும் மக்கள் கடந்த தேர்தலில் எம்மை தெரிவுசெய்யவில்லை. மக்களுக்காக குரல்கொடுத்த எமக்கு இது பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. ஆயினும் நாம் மக்களுக்காக குரல் கொடுப்போம். மக்களுக்காகவே செயற்படுகிறோம். ஆனால் ஆட்சிக்கு கொண்டு வந்த மலையக அரசியல்வாதிகள் மக்களுக்கு உண்மையாக இருக்கின்றனரா எனக் கேட்டால் இல்லை என்றே கூறவேண்டும்.

ம. சுசிகலா

# மியன்மாரும் மறுக்கப்படும் ஊடக சுதந்திரமும்

மியன்மார் தற்போது ஜனநாயகமற்ற முறையில் இராணுவ ஆட்சியினால் ஆளப்பட்டு வருகின்றது. ஜனநாயக தலைவர் ஆங் சான் சூகி கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார். இராணுவ ஆட்சிக்கு எதிராக அந்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் இராணுவத்தினரால் மக்கள் நாளாந்தம் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். அது மட்டுமல்லாமல், ஏராளமான ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் ஆர்வலர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மியன்மார் இராணுவம் பொதுமக்களை மாத்திரமன்றி, ஊடகவியலாளர்களை இலக்குவைத்து அடக்குமுறை கொள்கையை பின்பற்றி வருகின்றது.

மியன்மாரில் பத்திரிகை சுதந்திரம் என்பது பேச்சு சுதந்திரம், கருத்து வெளிப்பாடு, தகவல் அறியும் உரிமை மற்றும் குறிப்பாக வெகுஜன ஊடகங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது. மியன்மாரின் ஊடகங்கள் மியன்மாரின் இராணுவ சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மியன்மாரின் ஊடக சுதந்திரம் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. ரோஹிங்கிய மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களுக்கு எதிரான நடவடிக்கையானது மியன்மாரின் சட்ட ஆட்சி மற்றும் ஊடக சுதந்திரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதாக கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர் கிறிஸ்டியோ ப்ரீலண்ட் 2018ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார். இதேவேளை, ஊடகவியலாளர்களின் விடுதலையை வலியுறுத்தும் அனைத்துலக நாடுகளுடன் தாமும் குரல் கொடுப்பதாக அவர் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் இருவருக்கும் மியான்மார் நீதிமன்றம் 7 ஆண்டுகால சிறைத்தண்டனையை விதித்துள்ளது. காவல்துறை அதிகாரி கொடுத்த உத்தியோகபூர்வ ஆவணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் வா லோன் மற்றும் கியாவ் சோலு இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தேச நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கம் அவர்களுக்கு இருந்ததாகவும், தேசிய இரகசிய சட்டத்தை மீறியமை நிரூபிக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டியே அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது காவல்துறையினரால் அநியாயமாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்றும் தாங்கள் நிரபராதிகள் எனவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் இருவரும் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

மியன்மார் மக்கள் படுகொலை செய்தியை அவர்கள் வெளியே கொண்டுவந்தார்கள். அதற்காக தண்டிக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு இப்படி செய்திருக்கிறார்கள் என்று அவர்களுடைய வழக்கறிஞர் கூறியுள்ளார். இது தொடர்பாக கருத்து தெரிவித்த ரொய்ட்டர்ஸ் நிறுவனத்தின் ஆசிரியர், மியன்மாருக்கும் அதன் ஊடக சுதந்திரத்திற்கும் இது ஒரு மோசமான நாளாகும் என்று குறிப்பிட்டுள்ளார். ராக்கைன் மாநிலத்திற்கு செல்லும் ஊடகவியலாளர்களை இராணுவம் கடுமையாக கண்காணிப்பதால் அந்த பகுதியிலிருந்து நம்பகமான செய்திகளை பெறுவது கடினமாக உள்ளதாக அறியக் கிடைக்கிறது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து பத்திரிகையாளர்களையும் மியன்மாரின் இராணுவ ஆட்சிக்குழு உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவிக்கப்பட வேண்டும், மேலும் ஊடகங்களை துன்புறுத்துவதற்கும் அச்சுறுத்துவதற்கும் சட்டரீதியான நடைமுறைகளை உபயோகிப்பதை அரசு நிறுத்தவேண்டும் என்று பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான (CPJ) சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

''மியன்மாரின் இராணுவ ஆட்சி கிட்டத்தட்ட ஒரே இரவில் பத்திரிகையாளர்களை மோசமான நிலையில் அடைத்துவைத்துள்ளதை சர்வதேசமே எதிர்க்கின்ற நிலையை காணலாம். குறைந்தது 40 பத்திரிகை உறுப்பினர்கள் சிறைக்குள்ளே உள்ளனர்'' என்று சிபிஜேவின் தென்கிழக்காசியாவின் மூத்த பிரதிநிதி ஷான் கிறிஸ்பின் கூறினார்.

''பத்திரிகையாளர்களை சிறையில் அடைப்பது அப்பட்டமான மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கையாகும், இது மியன்மாரின் குடிமக்களையும், உலகளாவிய மக்களையும், இராணுவ ஆட்சிக்குழுவின் அடிக்கடி மிருகத்தனமான செயல்களைப் பற்றி இருட்டில் வைத்திருப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிபிஜேவால் அடையாளங்காணப்பட்ட கைதிகளில் இருவரைத் தவிர, மற்ற அனைவருமே உள்ளூர் விற்பனை நிலையங்களில் பணிபுரியும் உள்ளூர் ஊடகவியலாளர்களாகும். யாங்கோன், மாண்டலே, மைன்ட்கைனா, பாங்கி, பதீன், மெய்க், ப்யே, டாவே மற்றும் மியாங்மியா நகரங்களில் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்களை தடுத்துவைத்திருப்பதை சிபிஜே உறுதிப்படுத்தியுள்ளது. ஜப்பானிய பத்திரிகையாளர் யூகி கிடாசுமி மற்றும் உள்ளூர் செய்தி நிறுவனமான காமாயுத் மீடியாவின் ஆசிரியர் அமெரிக்கன் நாதன் மார்ச் 9 அன்று ஆட்சிக்கவிழ்ப்பு எதிர்ப்புப் போராட்டத்தை பதிவுசெய்தபோது கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டதிலிருந்து வழக்கறிஞர் அல்லது குடும்ப உறுப்பினர்களை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பர்மா ஜனநாயகக் குரல் தெரிவித்துள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் இரண்டு டி.வி.பி. நிருபர்களும் உள்ளனர் என்று செய்தி அமைப்பின் தலைமை ஆசிரியர் ஆயி சான் நைங் கூறுகிறார், அவர் சிபிஜேவுடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டார் என தெரிவித்துள்ளார்.

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை குறித்து சிபிஜே மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டது. எனினும், தகவல் அமைச்சு அதற்கு உடனடியாக பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

''இன்று மியன்மாரில் என்ன நடக்கிறது என்பது குறித்த உண்மையை அம்பலப்படுத்துவதற்கான போராட்டத்தின் முன்னணியில் பத்திரிகையாளர்கள் உள்ளனர்'' என்று அம்னஸ்டி இன்டர்நேஷனலின் துணை பிராந்திய ஆராய்ச்சி இயக்குநர் எமர்லின் கில் கூறினார்.

இதேவேளை, ''டேனி ஃபென்ஸ்டரின் கைது இராணுவத்தால் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதோடு மியன்மாரில் ஊடகங்கள் எவ்வாறு குறிவைக்கப்பட்டுள்ளன என்பதை தெளிவுபடுத்துகின்றன'' என்று எமர்லின் கில், அம்னஸ்டி இன்டர்நேஷனலின் துணை பிராந்திய டைரக்டர் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 24ஆம் திகதியன்று அமெரிக்க குடிமகன் டேனி ஃபென்ஸ்டர் ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட மூன்றாவது வெளிநாட்டு பத்திரிகையாளர் ஆவார். மலேஷியாவுக்கு செல்வதற்கு விமானத்திற்காக காத்திருந்தபோது, யாங்கோனின் மிங்கலார்டன் விமான நிலையத்தில் அவரை அதிகாரிகள் கைது செய்தனர். அவர் இன்சைன் சிறைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், மே 25வரை அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் உறுதியாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

''நாங்கள் சுயாதீன பத்திரிகையாளர்கள், வேலை செய்வதை நிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இப்போது இரண்டு மாதங்கள் ஆகின்றன. கடந்த பெப்ரவரி முதலாம் திகதிமுதல் நான் வேலையில்லாமல் இருக்கிறேன்'' என்று சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாங்கூனை தளமாகக்கொண்ட முன்னாள் தொலைக்காட்சி நிருபர் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்நிலையில் வேறொரு வேலையைத் தேடுவது கடினம். நான் மட்டுமல்ல, என்னைப்போன்ற பல நிருபர்கள் தற்போது தங்களால் முடிந்த எந்த வேலையாயினும் கிடைக்க வேண்டும் என முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறையிலுள்ள ஊடகவியலாளர்களில் பெரும்பாலோனோர் மியன்மாரின் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 505 (அ)ஐ மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.''

சுயாதீன பத்திரிகையாளர் ஒருவர் பின்வருமாறு கூறியிருந்தார்,

''நாங்கள் சுயாதீன பத்திரிகையாளர்கள். எனினும் வழமையாக கிடைக்கின்ற சம்பளம் இல்லை, எங்கள் அறிக்கைகளை வருமானத்திற்காக விற்கவேண்டியிருந்தது, ஆனால்m இப்போது நாங்கள் பெரிய சிக்கலில் இருக்கிறோம். எங்களிடம் கல்லூரி தகைமைகள் இருந்தாலும் எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை. நாங்கள் பத்திரிகைத்துறையில்தான் எங்கள் வாழ்க்கையைத் தொடங்கினோம், இப்போது பத்திரிகை வேலைகளும் இல்லை.''

''சில ஊடகவியலாளர்கள் உணவு மற்றும் வாடகைக்கு பணம் தேவை என்பதற்காக கெமராக்கள் மற்றும் பிற உபகரணங்களை விற்க முயன்றனர், மற்றவர்கள் தொழிலை கைவிட்டு ஒன்லைனில் உணவு விற்கத் தொடங்கியுள்ளனர். சில பெண் நிருபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆபரண தொழிற்சாலை தொழிலாளர்களாக வேலைக்கு இணைந்துள்ளனர். மியன்மாரை; சேர்ந்த பத்திரிகையாளர்கள் தங்களுக்கு எதிராக அடக்குமுறை வேலை இழப்புகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தங்கள் கடமையை செய்வதில் உறுதியாக இருக்கின்றார்கள். ஊடகவியலாளர்கள் என்றவகையில், அவர்கள் எவ்வளவு அடக்குமுறை இருந்தாலும் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காக நாங்கள் செயற்படுவோம்'' என்று பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

''நான் என் வாழ்நாள் முழுவதும் எழுதுவேன். செய்தித்தளங்கள் மீண்டும் திறக்கப்படும்போது, நாங்கள் மீண்டும் செய்திகளை எழுதுவோம். என் நண்பர்கள், அவர்கள் வேறு வேலைகளைத் தேடுகிறார்கள். என்றாலும், வாய்ப்பு கிடைத்தவுடன் எழுதப் போகிறார்கள்'' என்று சுயாதீன பத்திரிகையாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நீண்டகால இராணுவ ஆட்சியிலிருந்து மக்கள் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தும் இன்று மறுக்கப்பட்டுள்ளன. இது சர்வதேச சமூகத்தின் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருப்பதோடு ஊடக சமூகத்தின் கண்டனத்திற்கும் உள்ளாகியிருக்கின்றது. இதில் இராணுவ ஆட்சி தொடர்பான மாற்றம் ஏற்படாதவரை இந்த ஊடகங்களுக்கு சுதந்திரமான சூழல் உருவாகுமா என்பது கேள்விக்குறியாகும்.

''மியன்மாரில் இடம்பெறுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் குறித்து இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்களிடம் வினவியபோது, அவர்கள் கூறிய விடயங்கள் கீழே தொகுத்து தரப்படுகின்றன,



என்.எம் அமீன்

மியன்மாரில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டுள்ள தென்றே அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. மியன்மாரில் இப்போது இராணுவ ஆட்சி இடம்பெறுகின்றது. இராணுவ ஆட்சியில் ஆரம்பத்தில் ஊடகங்களுக்கு எவ்வித கெடுபிடிகளும் இடம்பெறாதபோதும் இப்போது அங்கு ஊடகங்கள் முழுமையாக சுதந்திரமான முறையில் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் இயக்கப்படுகின்ற வானொலியும், தொலைக்காட்சியுமே இயங்குகின்றன. இதைத் தவிர, CNN, BBC போன்ற செய்தி நிறுவனங்களை செய்மதியினூடாக பயன்படுத்துவதற்கு கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. wifi வசதிகள்கூட குறைவாகவே உள்ளது. சட்டவிரோதமான முறையில் (VPN)யை பயன்படுத்தியே மக்கள் முகநூல், செய்திகளை (BBC, CNN) அறிந்துகொள்கின்றனர். சிற்றலையூடாகவே மக்கள் செய்திகளை செவிமடுக்கின்றனர். யுத்த காலத்தில் இலங்கையில் இருந்த அதே நிலைமையை அங்கு காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்தின் பின்னர் ஜனநாயகம் மலர்ந்து ஓரளவு உருவாக்கப்பட்ட சுதந்திரமான ஊடக நடைமுறைகள் முற்றாக தற்போது மறுக்கப்பட்டுள்ளது. பிரச்சினையின் முதல் 15 நாட்கள் ஊடகங்களை இராணுவத்தினர் இலக்காக கொள்ளவில்லை. எனினும், இப்போது அநேக ஊடகங்கள் திறந்த அடிப்படையில் இயங்குவதில்லை. மாறாக இரகசியமான முறையில் இயங்கவும், சில ஊடகங்கள் நாட்டுக்கு வெளியே இருந்து இயங்க முற்படுகிறார்கள் என அறியக்கிடைக்கிறது.

இப்போது மியன்மாரின் ஊடக அமைச்சு இயங்குகின்ற ஊடக நிறுவனங்களுக்கு எச்சரிக்கை கடிதங்களை அனுப்பியிருக்கின்றனர். இந்தப் பின்னணியில் ஊடக நிறுவனங்கள் தாமாக முன்வந்து தங்களுடைய நிறுவனங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

Mynmar weekly, The voice Daily, Eleven daily and weekly, kundra weekly ஆகிய பத்திரிகை நிறுவனங்கள் எல்லாம் தற்போது மூடப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் மாத்திரமல்லாது அங்கே இருக்கின்ற கலகக்காரர்களாலும் ஊடகங்கள் இலக்குவைக்கப்பட்டுள்ளன. அவர்கள் இராணுவ ஆட்சியாளர்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளனர். இதனால் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் பெறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் அநேகமாக தலைமறைவாக இயங்க முற்படுகின்ற ஒரு நிலையை காண்கிறோம். இந்த நிலைமையில் முன்னேற்றம் எதுவும் இருந்ததாக கூற முடியாது. இராணுவத்தினர் தங்களுடைய ஆட்சியை பலப்படுத்துவதற்காக முற்படுகிறார்கள். சுதந்திரமில்லாத ஊடகமில்லாத ஒரு நாடாக இன்று மியான்மார் இருக்கின்றது.



தாஹா முஸம்மில்

ஸ்காண்டிநேவிய நாடுகளைத் தவிர, உலகில் ஏனைய நாடுகளில் ஊடக சுதந்திரத்தின் நிலைமை கூடக் குறைய மோசமாகவே உள்ளது. ஊடகவியலாளர்களின் நிலை வர வர மோசமாகிக்கொண்டே போவதை கண்டுகொண்டிருக்கிறோம்.

இன்றைய மியன்மார் நிலை நினைத்தும் பார்க்கமுடியாத அளவு பயங்கரமாக மாறியுள்ளது. கடந்த பெப்ரவரி முதலாம் திகதி அங்கு சதிப்புரட்சி ஒன்றின் மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி, இராணுவ ஆட்சிக்கு எதிராக ஜனநாயக ரீதியான தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த மக்கள் போராட்டங்களை அறிக்கையிட வேண்டியது ஊடகவியலாளர்களின் உத்தியோகத்துக்குரிய பொறுப்பாகும். இவ்வாறு அறிக்கையிட ஸ்தலத்துக்கு சென்ற ஊடகவியலாளர்களில் 47 பேர் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 23 பேர் தேசத்துரோகம் அல்லது சட்டம், ஒழுங்கை குலைக்கும் செயல்களில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுபோக ஆர்ப்பாட்டங்களை அறிக்கையிட்ட ஜப்பானிய ஊடகவியலாளர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு, பல மணித்தியால விசாரணைக்குப் பின் விடுவிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு நாட்டில் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அரசு சதிப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டு அங்கு இராணுவ ஆட்சி நிலைப்பெறுமானால் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம் போன்ற அநேக அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்டுவிடும் என்பது நிதர்சனமாக தெரிகிறது.

ஜனநாயகத்தை விரும்பும் எல்லோரும் இந்த ஒடுக்குமுறையைக் கண்டிக்க வேண்டும். ஆனால், இலங்கையைப்போன்ற மூன்றாம் உலக நாடுகளில் சதிப் புரட்சியின் ஆரம்ப நாட்களில் ஒருசில கண்டனக் குரல்கள் எழுந்தாலும், தாக்கம் ஏற்படுத்தும் விதத்தில் ஏதாவது இடம்பெற்றதா என்பது கேள்விக்குறியே.



ரங்கலன்சூரிய

மியன்மாரில் சாதாரணமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டால் அல்லது பாதையில் அகப்பட்டால் முதலில் அவரது ஸ்மார்ட் போன் கைப்பற்றப்பட்டு முகநூல் கணக்கு பரிசீலிக்கப்படுகிறது. முகநூலில் சிறிய அளவிலாவது ஊடகவியலாளராக அல்லது பொதுமக்களாக இராணுவ அரசிற்கு எதிராக பதிவுகள் இடப்பட்டிருந்தால் அல்லது வட்ஸ்அப் மூலம் கருத்துகள் பறிமாறப்பட்டிருந்தாலோ உடனடியாக கைதுசெய்யப்படுகிறார்கள். அந்தளவு மோசமாக ஊடகங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதனால் முழுவதுமாக ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் அதிகமான ஊடகவியலாளர்கள் மியன்மாரின் அயல்நாடான தாய்லாந்துக்குச் சென்று தாய்லாந்து – மியன்மார் எல்லையில் இருந்து ஊடக செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். அதிகமான ஊடக நிறுவனங்கள் தாய்லாந்தின் சேன் மாயின் நகரத்திலிருந்துதான் செயற்படுகின்றன.

இதுவரையிலும் ஊடகவியலாளர்கள் 40 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதில் 12 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஊடக நிறுவனங்கள் சிலவற்றின் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனால், இதுவரையும் ஊடகவியலாளர் எவரும் கொல்லப்பட்டதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆனாலும் எல்லா வகைகளிலும் ஊடகவியலாளர்களுக்கு தொந்தரவு செய்கிறார்கள். அந்தவகையில் மியன்மாரில் முழுவதுமாக ஊடக சுதந்திரம் இழக்கப்பட்டுள்ளது. இப்போது இராணுவ அரசுக்கு முறைகேடாக உரிமம் பெறப்பட்ட வானொலிகள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் மட்டுமே நடத்தப்படுகின்றன. அதுதவிர இராணுவத்தினரால் நடத்தப்படும் ஊடக சந்திப்புகளை ஊடகவியலாளர்கள் பகிஷ்கரிப்புசெய்யும் அளவிற்கு வந்துள்ளது.

அப்ரா அன்ஸார்



# தோல்விகளில் உலக சாதனை படைத்த இலங்கை!

# இன்று ஆறுதல் வெற்றியாவது கிடைக்குமா?




**ஏ. அகீல் சிஹாப்**

சர்வதேச கிரிக்கெட் உலகில் மூன்றுவிதமான போட்டிகள் நடைபெற்று வருகின்றன. டெஸ்ட் போட்டிகள் மூலமாகத்தான் உலகிற்கு கிரிக்கெட் அறிமுகமானது. பின்னர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து அணிக்கு 50 ஓவர்கள்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் அறிமுகமாகின. பின்னர் இறுதியாக அணிக்கு 20 ஓவர்கள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள் அறிமுகமாகி, தற்போது இந்த மூன்று போட்டிகளும் சர்வதேச உலகில் நடைபெற்று வருகின்றன.

ஒருநாள் போட்டிகள் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமானதை தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் அணியானது கடந்த 1975ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகிறது. 1996ஆம் ஆண்டு அர்ஜுன ரணதுங்க தலைமையில் ஐ.சி.சி. உலகக்கிண்ண சம்பியனாக தெரிவான இலங்கை அணி, அதன்பின்னர் 2007ஆம் ஆண்டு மஹேல ஜெயவர்தன தலைமையில் மற்றும் 2011ஆம் ஆண்டு குமார் சங்கக்கார தலைமையில் அடுத்தடுத்து இரண்டு உலகக்கிண்ணத் தொடர்களின் இறுதிப் போட்டிகளுக்கு முன்னேறி, ஏனைய அணிகளுக்கு சவால் விடுக்கக்கூடிய ஒரு பலமான அணியாக திகழ்ந்தது.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் பின்னர் இலங்கை அணியில் விளையாடிய முக்கிய வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, முத்தையா முரளிதரன், திலான் சமரவீர போன்ற முக்கிய வீரர்களின் ஓய்வைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் அணி வெற்றிகளுக்குப் பதிலாக தோல்விகளை சுவைத்துவருகின்ற அணியாக மாறிக்கொண்டு வருகிறது.

அதிலும் கடந்த 2, 3 வருடங்களாக இலங்கை அணி மிக மிக மோசமான தோல்விகளை சந்தித்துக்கொண்டு வருகிறது. இதுவரையில் ஒருநாள் சர்வதேச தொடர் தோல்வி காணாத அணிகளுடன் தொடர் தோல்விகளையும் தற்கால இலங்கை அணி சந்தித்து வருகின்றமை ரசிகர்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை அணி தற்போது இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுகிறது. முதல் தொடரான 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இலங்கை அணி 0-3 என்ற அடிப்படையில் முழுமையாக இழந்த நிலையில், அடுத்த தொடரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரையும் இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் இழந்துள்ளது. இதன்மூலம் இலங்கை அணி, இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இரு தொடர்களையும் இழந்திருக்கிறது.

**Overall figures**

| Team | Span | Mat | Won | Lost | Tied | NR | W/L |
|---|---|---|---|---|---|---|---|
| Sri Lanka | 1975-2021 | 860 | 390 | 428 | 5 | 37 | 0.911 |
| India | 1974-2021 | 993 | 516 | 427 | 9 | 41 | 1.208 |
| Pakistan | 1973-2021 | 933 | 490 | 414 | 9 | 20 | 1.183 |
| West Indies | 1973-2021 | 828 | 404 | 384 | 10 | 30 | 1.052 |
| Zimbabwe | 1983-2020 | 532 | 138 | 375 | 8 | 11 | 0.368 |
| New Zealand | 1973-2021 | 775 | 354 | 374 | 7 | 40 | 0.946 |
| England | 1971-2021 | 757 | 381 | 339 | 9 | 28 | 1.123 |
| Australia | 1971-2020 | 955 | 579 | 333 | 9 | 34 | 1.738 |
| Bangladesh | 1986-2021 | 385 | 133 | 245 | 0 | 7 | 0.542 |
| South Africa | 1991-2021 | 628 | 386 | 218 | 6 | 18 | 1.770 |
| Kenya | 1996-2014 | 154 | 42 | 107 | 0 | 5 | 0.392 |
| Ireland | 2006-2021 | 167 | 70 | 86 | 3 | 8 | 0.813 |
| Scotland | 1999-2021 | 117 | 43 | 67 | 1 | 6 | 0.641 |
| Afghanistan | 2009-2021 | 129 | 62 | 63 | 1 | 3 | 0.984 |
| Canada | 1979-2014 | 77 | 17 | 58 | 0 | 2 | 0.293 |
| Netherlands | 1996-2021 | 85 | 34 | 47 | 1 | 3 | 0.723 |
| U.A.E. | 1994-2021 | 61 | 18 | 43 | 0 | 0 | 0.418 |
| Bermuda | 2006-2009 | 35 | 7 | 28 | 0 | 0 | 0.250 |
| P.N.G. | 2014-2019 | 27 | 7 | 20 | 0 | 0 | 0.350 |
| Hong Kong | 2004-2018 | 26 | 9 | 16 | 0 | 1 | 0.562 |
| Namibia | 2003-2020 | 14 | 5 | 9 | 0 | 0 | 0.555 |
| U.S.A. | 2004-2020 | 15 | 6 | 9 | 0 | 0 | 0.666 |
| Nepal | 2018-2020 | 10 | 5 | 5 | 0 | 0 | 1.000 |
| Africa XI | 2005-2007 | 6 | 1 | 4 | 0 | 1 | 0.250 |
| East Africa | 1975-1975 | 3 | 0 | 3 | 0 | 0 | 0.000 |
| ICC World XI | 2005-2005 | 4 | 1 | 3 | 0 | 0 | 0.333 |
| Oman | 2019-2020 | 11 | 8 | 3 | 0 | 0 | 2.666 |
| Asia XI | 2005-2007 | 7 | 4 | 2 | 0 | 1 | 2.000 |

மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி இன்று பிரிஸ்டோலில் நடைபெறவுள்ள நிலையில், இந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்று ஆறுதல் வெற்றியாவது பெறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இவ்வாறானதொரு நிலையில், கடந்த வியாழக்கிழமை லண்டன், த ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

குறித்த போட்டியில் இலங்கை அணி தோல்வியை தழுவியதைத் தொடர்ந்து, ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மிக மோசமான சாதனைக்கு சொந்தக்காரராக இலங்கை அணி மாறியிருக்கிறது. அதாவது, ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் அதிக தோல்விகளைச் சந்தித்த அணியாக இந்திய அணியை பின்தள்ளி இலங்கை அணி முதலிடத்திற்கு முன்னேறியிருக்கிறது.

முன்னரெல்லாம் சாதனைகள் படைத்துவந்த இலங்கை அணி, தற்போது மோசமான சாதனையில் முதலிடம் பிடிக்கின்றமை ரசிகர்களிடத்தில் மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது. இலங்கை அணி 1975 – 2021ஆம் ஆண்டுவரையில் 860 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி 428 தோல்விகளை சந்தித்திருக்கிறது. 390 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் அதேவேளை, 5 போட்டிகள் சமநிலையிலும், 37 போட்டிகள் வெற்றிதோல்வியற்ற முடிவுகளாகவும் அமைந்திருக்கிறன.

இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் சர்வதேச தொடர் ஆரம்பமாகுவதற்கு முன்னர் 426 தோல்விகளுடன் முதலிடத்தில் இருந்த இலங்கை, முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் 427 தோல்விகளைச் சந்தித்து இந்திய அணியுடன் சமநிலையில் இருந்தது. இவ்வாறான நிலையில், இரண்டாவது போட்டியிலும் தோல்வியை தழுவியதைத் தொடர்ந்து இலங்கை அணி, இந்திய அணியை பின்தள்ளி 428 தோல்விகளுடன் முதலிடம் முன்னேறியிருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற அணிகள் அடுத்தடுத்த இடங்களில் இருந்தாலும் கூட, அந்த அணிகள் தற்காலத்தில் மிக பலமான அணிகளாக காணப்படுகின்றன. ஆனால், இலங்கை அணியின் நிலைமை மிக மோசமாக அமைந்திருக்கிறது. எதிர்வரும் போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவும் என்ற எதிர்பார்ப்புதான் இலங்கை ரசிகர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்தவகையில் இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலம் என்னவாகப்போகிறது என்பதை நாம் பொறுத்திருந்து அவதானம் செலுத்தலாம்.



## விம்பிள்டன் டென்னிஸ்

## அறிந்திராத சில சுவாரஸ்ய தகவல்கள்

டென்னிஸ் உலகில் ஒரு வருடத்திற்கு மொத்தமாக 4 கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துகொண்ட தொடர்கள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் இந்த ஆண்டின் 3ஆவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துகொண்ட தொடரான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் கடந்த 21ஆம் திகதிமுதல் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் தற்போது நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடர்பிலான சில சுவாரஸ்யமான தகவல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

உலகின் பழைமையான கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர், கடந்த 1877 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. ஆரம்பத்தில் ஆடவர் பிரிவில் மட்டுமே தொடர் நடத்தப்பட்டது. பின்னர் 1884 ஆம் ஆண்டு முதல் மகளிர் பிரிவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. புல்தரையில் நடத்தப்படும் ஒரே கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட டென்னிஸ் தொடர் இதுவாகும்.

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் போட்டிகள் நடைபெற்றும் மைதானத்திலுள்ள புற்கள் 8 மில்லிமீற்றர் உயரத்துக்கு பராமரிக்கப்பட்டும் வருகின்றன. ஏனைய டென்னிஸ் போட்டிகளிலெல்லாம், எந்த நிறத்தில் வேண்டுமானாலும் வீரர்களும் வீராங்கனைகளும் உடை அணியலாம். ஆனால், விம்பிள்டன் போட்டியைப் பொறுத்தவரை வெள்ளை நிறத்தில் மட்டும்தான் உடை அணியவேண்டும் என்ற விதி உள்ளது.

ஒவ்வொரு விம்பிள்டன் போட்டியிலும் 54,250 ஸ்லாசெங்கர் வகை பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. 7 புள்ளிகளுக்கு ஒருமுறை பந்துகள் மாற்றப்படுகின்றன. ஆரம்ப காலகட்டத்தில் வெள்ளை நிறப் பந்துகள்தான் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்நிலையில், காணொளியில் பந்துகள் தெளிவாகத் தெரியவேண்டும் என்பதற்காக கடந்த 1986ஆம் ஆண்டுமுதல் மஞ்சள் நிறப் பந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விளையாட்டுப் போட்டிகளிலேயே அதிகளவில் உணவு விற்பனையாவது விம்பிள்டன் போட்டிகளில்தான். ஒவ்வொரு ஆண்டும் விம்பிள்டன் போட்டிகளின்போது 2.34 இலட்சம் எண்ணிக்கையில் இரவு மற்றும் மதிய உணவுகள், 3.3 இலட்சம் கோப்பை தேநீர் மற்றும் கோப்பி, 10 ஆயிரம் லீற்றர் பால், 29 ஆயிரம் போத்தல் ஷாம்பெயின் ஆகியவை விற்பனை செய்யப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.







## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## ஐ.சி.சி. T20 உலகக்கிண்ணம் – 2021




சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகின்ற ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 7ஆவது தொடரானது கடந்த வருடம்




அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருந்த நிலையில், கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அது இந்த வருடம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. ஆனால், இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிமுதல் நவம்பர் மாதம் 14ஆம் திகதிவரை ஓமான் கிரிக்கெட் அகடமி மைதானம், ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானம், அபுதாபி ஷேக் ஷெயிட் மைதானம், ஷார்ஜா கிரிக்கெட் மைதானம் போன்ற 4 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் சுற்றுப்போட்டிகள் அனைத்தும் ஓமானில் நடைபெறவுள்ளன.

2021 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் மொத்தமாக 12 அணிகள் பங்கேற்கின்றன. ஏற்கனவே 8 அணிகள் நேரடியாக தொடரில் விளையாடுவதற்கு தகுதிபெற்றுள்ளன. ஏனைய 4 அணிகளையும் தெரிவுசெய்வதற்காக நடைபெறவுள்ள முதல் சுற்றில் 8 அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த முதல் சுற்றுப்போட்டியில் இடம்பிடித்துள்ள 8 அணிகளும் தலா இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

குழு 'ஏ' யில் இலங்கை, அயர்லாந்து, பப்புவா நியூகினியா மற்றும் ஓமான் ஆகிய அணிகளும், குழு 'பி' யில் பங்களாதேஷ், நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் நமீபியா ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. குழு 'ஏ' மற்றும் குழு 'பி' ஆகிய இரண்டு குழுக்களிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும். ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதிமுதல் முதல் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 'சுப்பர்' 12' சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகும்.

இரண்டாவது சுற்றில் 12 அணிகள் மோதுகின்றன. இதில் மொத்தமாக 30 போட்டிகள் நடைபெறவுள்ளன. குழுநிலை லீக் போட்டிகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னர் 2 அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. அடுத்த எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# இலக்கிய சங்கமம்

sangamamjeeva@gmail.com
ஜீவா சதாசிவம்

## ‘சங்க இலக்கியத்திற்கு புது வெளிச்சம் தந்தவர் கைலாசபதி’



தமிழ் அவை ஜேர்மனி 30.5.2021 அன்று நடத்திய இணையவழி பன்னாட்டு இலக்கியச் சந்திப்பு நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது .

இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் உலகின் பல நாடுகளிலிருந்து வந்து கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். இலங்கையிலிருந்து பேராசிரியர் மௌனகுரு மற்றும் இந்தியாவிலிருந்து கவிஞர் நா. முத்துநிலவன் ஆகியோர் அப்போது உரையாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

அமைப்பாளர் கௌசி அனைவரையும் வரவேற்றுத் தன்னுடைய முன்னுரையில் பேராசிரியர் க.கைலாசபதியைப் பற்றிய சிறிய வரலாற்றுப் பதிவை எடுத்துரைத்தார்.

பின் இந்தியாவிலிருந்து கலந்துகொண்ட எழுத்தாளர் கவிஞர் மு.கீதா, கவிஞர் நா.முத்துநிலவனை முன் அறிமுகம் செய்து வைத்தார். இந்தியாவிலிருந்து கலந்துகொண்ட கவிஞர் நா.முத்துநிலவன், ‘சங்க இலக்கியத்திற்கு புது வெளிச்சம் தந்த கைலாசபதி’ என்ற தலைப்பில் அற்புதமாக உரையாற்றினார். சங்க இலக்கியங்கள் வாய்மொழி பாடல்கள் என்ற கோட்பாட்டை கைலாசபதி நிறுவியமை பற்றியும், புதுக்கவிதை இலக்கியத்தை ஆரம்பத்தில் பேராசிரியர் க.கைலாசபதி ஏற்றுக் கொள்ளாமை பற்றியும், பிற்காலத்தில் ஏற்றுக் கொண்டமையையும், பாரதியைப் போற்றிய அளவு பாரதிதாசனைப் போற்றவில்லை என்பதையும் பல விளக்கங்களுடன் எடுத்துக் கூறியதுடன், பேராசிரியர் க. கைலாசபதி செய்த நவீன இலக்கியத்தின் ஆய்வுகள் வெளிவரவில்லை என்பதையும் எடுத்துரைத்தார்.

அதன்பின் உரையாற்றிய பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் க. கைலாசபதியின் வாழ்க்கையின் பிரதான கட்டங்கள், எழுத்துகள் மூலம் ஆய்வுகள், அவருக்கும் தனக்குமிருந்த உறவு, காலத்தின் பின்னணி என்ற நான்கு கட்டங்களாக பிரித்து ‘கைலாசபதியைப் புரிந்து கொள்ளல்’ என்ற தலைப்பில் தன்னுடைய உரையை மிகச் சிறப்பாக நடத்தினார்.



பேராசிரியர் கைலாசபதியின் மகள் திருமதி சுமித்ரா கலந்துகொண்டு பேராசிரியர் க.கைலாசபதியின் இளமைப் பருவத்து வாழ்க்கையையும், எவ்வாறான கஷ்டங்களை மலேசியாவில் அனுபவித்திருந்தார் என்பதையும், அவைதான் அவருடைய எழுத்துக்களுக்குக் காரணமாக இருந்தன என்பதையும் எடுத்துக் கூறிய பல விடயங்கள் அனைவரையும் கவர்ந்திருந்தன.

அத்துடன் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் கலந்துகொண்டு தம்முடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், பார்வையாளர்களின் கருத்துரைகளும் இடம்பெற்றன. பேராசிரியர் கைலாசபதியின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் கலந்துகொண்டு சிறப்பித்தமை நிகழ்ச்சியில் சிறப்பம்சமாக அமைந்திருந்தது. டென்மார்க்கிலிருந்து கலந்துகொண்ட எழுத்தாளரும், கவிஞருமாகிய திருமதி கலாநிதி ஜீவகுமாரன் நன்றியுரை கூற நிகழ்வு மிகச் சிறப்பாக முடிவுற்றது.

இந்நிகழ்வு முழுவதையும் Ilakkiya Maalai YouTube Channel மூலம் பார்க்கலாம்.

**சுவாதி**

## கவிக்கோ என்றொருவன்!



கவிக்கோ என்றொருவன்
புதுக்கவிதை வார்த்தான்
புதுமைக்கவி தந்து
பூச்சரம் கோர்த்தான்

யாப்பைக் கற்றவன்
புது யாக்கை நெய்தவன்
கவிப்போக்கை மாற்றி
கலகம் செய்தவன்

உருதுக்கும் தமிழுக்கும்
உணர்வாலே பாலம் கட்டிய
விருதுக் கவிஞனவன்
விடைபெற்ற நாளிதுவோ

உரையும் நடையும்
உடுத்தியவனோ
உயர்ந்த தமிழில்
கவிப்படை நடத்தியவனோ

மரபுப் பாலம் கடந்து வந்தான்
மனது ரசிக்க கவிதை தந்தான்
இரவு நேரப் பட்சிகள் போல்
இதயராகம் இன்னும் தந்தான்

பித்தன் என்ற பிம்பம் தந்து
கவிதைபாடிய வம்பனிவன்
நேர்த்தியான சொற்களாலே
நேயர் விருப்பம் தந்தவனிவன்

சொற்களை ஆளும்
அற்புதக் கலையை
நுட்பமாய் பெற்றவன்
கவி கட்டிடும் ஆளுமை
நட்பெனும் தோழமை
எங்கினிக் காண்பதுவோ

மண்ணறை உந்தன்
பொன்னறையாக
கண்ணயர் நீயும்
காவலன் கருணை
பாவலன் உனக்கு
பரிசாய்க் கிடைத்திட
பிரார்த்தனைகள்

**நாச்சியாதீவு பர்வீன்**
*(02.06.2017 அன்று மறைந்த கவிக்கோவின் நினைவாக)*

## 2020 ஆம் ஆண்டுக்கான கொடகே போட்டி முடிவுகள்

2020 ஆம் ஆண்டுக்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சிறந்த சிறுகதைத் தொகுதியாக பாலரஞ்சனி ஜெயபாலின் ‘நெத்திக்காசு’ எனும் தொகுப்பும், சிறந்த கவிதைத் தொகுப்பாக ஜன்ஸி கபூரின் ‘பிறப்பிட நிழலிலே’ எனும் தொகுப்பும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட நூல்களுக்கான பரிசளிப்பு விழா, கொவிட்-19 காரணமாக பொது விழாவாக நடத்த முடியாத நிலைமை இருப்பதால், நிகழ்வுகள் நடத்துவது தொடர்பான விடயங்கள் பின்னர் அறிக்கப்படும்.







## பேராசிரியர் கா.சிவத்தம்பி எனும் தமிழ்ப் பேராறு

மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 10ஆம் ஆண்டு நினைவுக் கருத்தரங்கம் மெய்நிகர் வடிவில் இடம் பெறவுள்ளது.

ஜூலை 6 முதல் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு 12 ஆம் திகதி வரை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை (இலங்கை நேரம்) நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கத் தொடரில் இலங்கை, இந்தியா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பல ஆளுமைகள் உரையாற்றவுள்ளனர்.





## ‘நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு’ தொகுப்பு நூல் வெளியீடும் நினைவுப் பகிர்வும்

மெய்நிகர் சங்கமம்

டொமினிக் ஜீவா பற்றிய ‘நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு’ தொகுப்பு நூல் வெளியீடும், நினைவுப் பகிர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு Zoom கலந்துரையாடலாக இடம்பெறவுள்ளது. இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி (பிரான்ஸ்) ஒழுங்கு செய்யும் இந்த நிகழ்வுக்கு தேவதாசன் தலைமை தாங்குகிறார்.

நினைவுப்பதிவுகளை டொமினிக் ஜீவாவின் மகன் திலீபன் டொமினிக், மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், கவிஞர் மேமன் கவி, இலங்கை எழுத்தாளர் சங்க செயலாளர் கமல் பெரேரா ஆகியோர் வழங்க, தொகுப்பு நூல் குறித்தான உரைகளை எழுத்தாளர்களான விஜி, மல்லியப்புசந்தி திலகர், சிராஜ் மஷ்ஹூர், ரங்கன் ஆகியோர் வழங்கவுள்ளனர். உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.




ஆர்வமுள்ள இலக்கிய ஆர்வலர்கள் . **Zoom : 830 2340 8850- Password : 842312** எனும் முகவரியினூடாக இணைந்து கொள்ள முடியும். இலக்கிய வழிவந்த அரசியல் சமூக ஆளுமையான டொமினிக் ஜீவா மறந்த ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையில், ஜூலை மாதம் 27ஆம் திகதி அவரது 94ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் வெளியீடான மேற்படி நூல் பாக்யா பதிப்பகத்தினூடாக வெளிவருகின்றது.

46 ஆண்டுகளுக்கு மேலாக 400 இதழ்களுக்கு ‘மல்லிகை’யை இடைவிடாது வெளியிட்டவரும், ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை மல்லிகைப் பந்தல் பதிப்பகத்தினூடாக பதிப்பித்தும் உள்ள டொமினிக் ஜீவா பிறந்தது முதல் வாழும் காலத்திலும் எதிர்கொண்ட சவால்கள் அதிகம். அந்த சவால்களை முறியடித்து அதனை தனக்கு எவ்வாறு சாதகமாக பயன்படுத்தி இலக்கிய உலகில் பயணித்தார் என்பது பற்றியும், ஒரு மனிதன் எப்படியெல்லாம் சவால்களை எதிர்கொண்டு பயணிக்க வேண்டும் என்பதனையும் படம் பிடித்தாற்போல் இந்நூல் காட்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ராம் ஜீ**

## இடர்கால இலக்கியங்கள்

20

நோய்த் தொற்றும், அது தொடர்பான மரணங்களும் அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்த இடர்காலத்தில் மனிதர்கள் இயல்பாக வாழ எத்தனிப்பது தெரிகிறது. வழமையைவிட இந்த முடக்க காலத்தில் அதிக இலக்கிய முயற்சிகள் நடைபெறுவதாகத் தோன்றுகிறது. இப்பத்தியை எழுதுகின்ற சமயத்தில், அகில இலங்கைக் கம்பன் கழகமும், அவுஸ்திரேலியாவிலுள்ள கம்பன் கழகமும் இணைந்து மாதாந்த இயலரங்கத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பதாக அறிந்தோம். அவர்கள் அறிவிப்பின்படி கடந்த சனிக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 3.30 மணிக்கு அது நடைபெற்றிருக்க வேண்டும்.

அந்த இயலரங்கத்தில் பேசுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயம் “திருவாசகம் எனும் தேன்”ஆகும். திருவாசகத்தைப் படித்துச் சுவைத்தவர்கள் பேசுகிறார்கள் என அறிந்தோம். தற்சமயம் திருவாசகம் என்றவுடன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையே ஞாபகத்துக்கு வரும். அங்கே கிரானைட் கற்களில் திருவாசகத்தைப் பல மொழிகளில் மொழியாக்கம் செய்து பதித்திருக்கிறார்கள். அவை எமக்குத் திருவாகசத்தின் மகிமையைச் சொல்லுவதாக அமைந்திருக்கின்றன. திருவாசகத்தைத் தேனாகச் சுவைத்த பலரின் மொழிபெயர்ப்புகளாக அவை மிளிர்கின்றன. திருவாசகம் ஒரு சமய நூல் என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு, நல்ல தமிழ்ப் படைப்பு எனப் படிப்போமானால் அவற்றுள் தமிழ் முழுமை பெற்றிருப்பதைக் காணலாம். தமிழ் செழுமை பெற்றிருப்பதை திருவாசகத்திலேயேதான் கண்டு களிக்கலாம்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் தலைமையில், ‘திருவாசகம் ஒரு பக்திப் பனுவல்’ என்றவாறு திருமதி பாலம் இலக்சுமணனும், ‘திருவாசகம் ஒரு அறிவியல் நூல்’ என்றவாறு பொற்கிழி கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரமும், ‘திருவாசகம் ஒரு கவிதை இலக்கியம்’ என்றவாறு பேராசிரியர் அ.சண்முகதாஸும் தமது கருத்துகளை முன்வைக்கப் போவதாக அறிந்தோம். நீங்கள் இந்தப் பத்தியைப் படிக்கின்றபோது இணையவழி நேரலையில் அந்நிகழ்வு நடைபெற்றிருக்கும். அவர்களின் முன்னறிவிப்பைப் பார்த்த பலர் இந்த இடர்காலத்தே நடைபெறும் ஒரு நல்ல தமிழ் இலக்கிய முயற்சி இதுவெனப் பாராட்டினர்.

அடுத்ததாக இடர்காலத்து வெளியீடுகளாக வெளிவரவிருக்கும் மூன்று தொகுதிப் பெருநூல்கள் பற்றிய பதிவு இடம்பெறுகிறது. மகாகவி உருத்திர மூர்த்தியதியின் 50 ஆண்டு நினைவாக, அவரது கவிதைகள், காவியங்கள், நாடகங்கள் என்பன மூன்று தொகுதிப் பெருநூல்களாக பேராசிரியர் நுஃமானால் தொகுக்கப்பட்டு, ஜீவநதியின் 186,187,188 ஆவது வெளியீடுகளாக வெளிவரவுள்ளன.

முகநூல் ஓட்டத்தின் இடைநடுவே மகாகவி பற்றிய ஒரு சிறு பதிவைக் கண்டேன். அப்படியே அதனைப் பிரதி எடுத்துவிட்டேன். அதனை இந்தப் பதிவோடு இணைக்கும்போதுதான் அதனை எழுதியவர் பெயரைப் பிரதி பண்ணாதது என் நினைவுக்கு எட்டியது. மீண்டும் முகநூலுக்குள் புகுந்து தேடினேன். கிடைக்கவில்லை. அவர் எழுதிய பதிவு தொடர்கிறது.

1978 ஓகஸ்ட் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் புத்தகக் கடையில் தொங்கிக் கொண்டிருந்த ‘மல்லிகை’ இதழை வழமை போன்று வாங்கிக் கொண்டு வீடு செல்லும்போதே, பஸ்ஸில் இருந்தபடி வாசிக்கத் தொடங்கிவிட்டேன். ‘மகாகவியின் வாழ்க்கை நோக்கு’ என்ற தலைப்பில் எம்.ஏ.நுஃமான் எழுதி வெளிவந்த கட்டுரையை - அது பாரதி பற்றிய கட்டுரையாக இருக்கும் என்ற எண்ணத்துடன் - வாசிக்கத் தொடங்கினேன். அப்போது எம்.ஏ.நுஃமான் என்ற பெயர் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது. அதுவும் ‘மல்லிகை’ இதழில் அவர் அவ்வப்போது எழுதிய இலக்கியக் கட்டுரைகள் மூலமாகவே. அவர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக அப்போது இருந்தார் என்பதும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், அவரது எழுத்துகளில் ஒரு ஈர்ப்பு இருந்ததால் அந்த இதழிலிருந்து இந்தக் கட்டுரையையே முதலில் வாசிக்கத் தொடங்கினேன். அப்போதுதான் இந்த மகாகவி, பாரதியார் அல்ல என்பது எனக்குப் புரிந்தது. அந்தக் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டிருந்த கவிதைகள், எனக்கு மகாகவியைப் படிக்க வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தின.

ஆனால், இந்தக் கவிதை என்னை முழுமையாக பிடித்து உலுக்கி, எனக்காகவே எழுதப்பட்ட ஒன்றுபோல் என் மனதில் பதிந்துவிட்டது. மீண்டும், மீண்டும் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக்கொண்டேன். கலை, இலக்கியம் சார்ந்து இயங்குதல் என்பதற்கு ஒரு நோக்கமும், தெரிவும் இருக்க வேண்டும் என்பதை என் மனதில் பதியவைத்த முதலாவது கவிதை அது. ஏற்கனவே ஒரு சில காலங்களாக இடைக்கிடையென்றாலும் ‘மல்லிகை’ வாசகனாக நான் இருந்ததால், கிட்டத்தட்ட அப்படியான ஒரு கருத்துப் பற்றிய மெல்லிய புரிதல் இருந்தபோதிலும், அதை உறுதியாக மனதில் பதியவைத்தது இந்தக் கவிதை வரிகளே. இதுவே எனக்கு மகாகவியைப் பற்றியும், அவரது படைப்புக்களைப் பற்றியும் தேடுவதற்கான உந்துதலைத் தந்தது.

நான் மகாகவியை அறிந்துகொண்ட இந்தக் கட்டுரையை வாசித்த போது அவர் இறந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. அவரது நூல்களை எமது ஊர் வாசிகசாலையில் தேடியபோது எனக்குக் கிடைத்தது அவரது ‘வள்ளியும் குறும்பாவும்’ மட்டுமே. பின்னர் ‘வீடும் வெளியும்’ கிடைத்தது. ‘ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்’ என்ற, அவரது மறைவுக்குப் பின் நூலுருப் பெற்றிருந்த பிரதியை நண்பர் குலசிங்கம் அண்ணரிடமிருந்து பெற்று வாசித்ததாக நினைவு. இன்றுடன் அவர் மறைந்து 50 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

கலை, இலக்கியம் சார்ந்து எனது பார்வையை உருவாக்கிக் கொள்ள காரணமாக அமைந்த அவரது கவிதை வரிகள் இவை:

இன்னவை தான் கவியெழுத ஏற்றபொருள் என்றுபிறர்
சொன்னவற்றை நீர்திருப்பிச் சொல்லாதீர்
சோலை கடல் மின்னல் முகில் தென்றலினை மறவுங்கள்
மானிடத்தில் மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்!

- என்றென்றைக்கும் பொருந்துகின்ற அற்புதமான வரிகள்!

**கணபதி சர்வானந்தா**

# நாம் கலையை வளர்த்தால் கலை நம்மை வளர்க்கும்



**சக்தீஸ்வர்யா கணேஷன்**

## இளம் கலைஞர்களுடன் ஓர் அனுபவப் பகிர்வு

**பத்து வயதில் குருகுலவாசம் செய்து அயராத கடின உழைப்பால் 2011ஆம் ஆண்டு தனது 11ஆவது வயதில் இந்திய அணிசேர் கலைஞர்களோடு அரங்கேற்றம் செய்து தன் திறமைக்கு அங்கீகாரத்தைப் பெற்றவர். ACCA கற்கைநெறியை மேற்கொண்டு கணக்கியல்துறையில் ஈடுபடும் இவர், பல்துறை வித்தகியாக விளங்குபவர். ஹற்றனை சொந்த இடமாகக்கொண்டாலும் கொழும்பில் வளர்ந்த இவரது வாழ்வில் எதிர்கொண்ட சவால்களை தகர்த்தெறிய நாட்டியமே துணை நின்றது என உறுதியாக நம்பிடும் இளங்கலைஞர். தன் நடனப்பள்ளியான அபிநயஷேத்ராவினூடாக 300இற்கும் மேற்பட்ட நடன நிகழ்வுகளை இலங்கையில் மட்டுமல்லாது, இந்தியாவிலும் வழங்கியுள்ளார். அரங்கேற்றம் கண்டு பத்து ஆண்டுகளாகியும் நடனத்துறையில் மிக்க ஆர்வத்துடன் பயணித்துக்கொண்டிருக்கும் சக்தீஸ்வர்யா கணேஷனுடன் உரையாடிய போது...**

**நாட்டியம் பயின்றதால் கிடைத்த பேறு?**

நமது வாழ்வில் எல்லாவகையிலும் நன்மைகளை மட்டுமே தரவல்ல உன்னதமான கலை பரதநாட்டியம். நாட்டியம் பயிலக் கிடைத்ததையே நான் ஒரு வரமாகக் கருதுகின்றேன். பரதநாட்டியம் பயில்வதால் நமது மனம் தூய்மையடைகிறது. மனத்தூய்மை மன அமைதிக்கு வழிவகுக்கிறது. வாழ்வில் நமக்குத் தேவையான மிகவும் முக்கியமான பண்புகளை இத்துறைக்குள் வந்தபின்னரே என்னால் கற்றுக்கொள்ள முடிந்தது. அதுமட்டுமல்லாது, மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்ச்சியை வழங்கி எம்மை சுறுசுறுப்பாக இயங்கவைப்பதோடு ஊன்றி கவனிக்கும் திறனையும் வழங்குகிறது.

**? கற்றல் அனுபவம்?**

எந்தவொரு கலையையும் சரியான முறையில், இறைவனுக்கே சமர்ப்பணம் என்ற எண்ணத்தோடு, பயபக்தியுடன் கற்கும்போது அந்தக் கலையை நாம் நேசிக்க ஆரம்பித்துவிடுவோம் என்பதைவிட அந்தக் கலையே நம்மை நேசிக்க ஆரம்பித்துவிடும்.

என் குரு கலாசூரி திருமதி திவ்யா சுஜேனின் ஆசியும், அன்புமே என்னை இவ்வளவு தூரம் பயணிக்க காரணமாக அமைந்தது. சிறுவயது என்பதால் எனக்கு சில நுணுக்கங்களை புரிந்து கொள்ளும் பக்குவம் அப்போது இருக்கவில்லை. எனினும், மிகப் பொறுமையுடன் என்னுடைய குரு ஒவ்வொரு விடயத்தையும் எடுத்துரைத்து என்னை அழகாக கையாண்டார். அத்துடன், அரங்கேற்றம் எனக்கு வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. ஒவ்வொரு நாள் பயிற்சியும் எனக்கு ஒவ்வொரு வாழ்க்கைப் பாடத்தை கற்பித்தது. எங்கள் அபிநயஷேத்ரா நடனப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவிகளிடமிருந்தும் எனக்குக் கிடைத்த அன்பும், அவர்களோடு ஒன்றாக இணைந்து பங்கேற்ற நிகழ்வுகளில் நான் கற்றுக்கொண்ட பல நற்பண்புகளும் இன்றும் என்னோடு தொடர்ந்துகொண்டே வருகிறது. என் பயிற்சிக் காலம் ஒரு வசந்த காலமாகும்.

**? அரங்கேற்றத்தினால் ஏற்பட்ட மாற்றம்?**

முதன்முதலில் என்னுடைய தாயார் எழுதிய பாடலுக்கே நடனம் ஆடினேன். அரங்கேற்றத்தின் பின் எனக்கென ஓர் அடையாளம் கிடைக்கப்பெற்றது. அப்பொழுது நான் பாடசாலை செல்லும் காலம். மேடை நிகழ்ச்சிகளிலோ அல்லது நடனப் போட்டி களிலோ கலந்துகொள்ளும் ஆர்வம் இருந்தும் என்னை பலர் நிராகரித்தார்கள். ஆனால், அரங் கேற்றத்தின் பின் நிராகரித்தவர்களே என்னைத் தேடி வரும்படியானது. என்னால் வெற்றிபெற முடியும் என என்னை நம்பி போட்டிகளுக்கு அனுப்புவார்கள். என் மேல் ஒரு தனி நம்பிக்கை உருவானது. அபிநயஷேத்ராவில் நாட்டியம் தவிர, நமது தனித்த திறமைகளை இனங்கண்டு வெளிக் கொணர எப் பொழுதும் எம் குரு உறுதுணையாக இருப்பார். ஆத லால், பாட்டு நிகழ் வுகளை தொகுத்து வழங்கல், ஒருங்கிணைத்தல், நாட்டியம் கற்பித் தல், நட்டுவாங்கம் எனப் பல விடயங் களில் ஈடுபட்டேன். இத்தனை புகழை யும் என் குருவின் பாதங்களில் சமர்ப்பிக் கிறேன்.



**இந்தியாவில் ஆற்றுகை புரிந்தது எப்படி சாத்தியமானது?**

அது முழுக்க முழுக்க என் குருவின் ஆசியும் அவர் என் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் அன்புமே காரணமாகும். இந்தியா வில் அதுவும் ஆடல் தெய்வத்தின் நாளான சிவராத்திரி அன்று அவருடைய சந்நிதியில ஆற்றுகை புரியும் வாய்ப்பு என்பது மிகவும் பெரிய பாக்கியம். இந்த வாய்ப்பு எத்தனை பேருக்குக் கிடைக்கும் என்பது தெரியவில்லை. என் குரு மூலமாக எனக்குக் கிடைத்ததை எண்ணி இன்றும் மனதார மகிழ்ச் சியடைகிறேன். தில்லை நடராஜ பெருமானின் மூலஸ்தானத்தின் எதிரே அமைந்திருந்த ஒரு சிறிய மேடை யில் குருவின் குரு பேராசிரியர் சி.வி.சந்திரசேகர் ஐயா தனது ஆடல் சமர்ப்பணத்தை வழங்கினார்கள்.

அவர் ஆடல் புரிகையில் எனக்கும் இந்த வாய்ப்பு கிடைக்காத என்ற எண்ணம். அப்போது அவருக்கு கிடைத்த வாய்ப்பை என் குருவிற்கும் அளித்தார். பின்னர் என் குருவின் வேண்டுகோளுக் கிணங்க எனக்கும் அந்த அரிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. என் வாழ்வில் மறக்கவே முடியாத மெய்சிலிர்க்க வைத்த தருணம் அதுவேயாகும். மயிலாடுதுறை மயூர நாட்டியாஞ்சலி திருவிடை மருதூர் மருதா நாட்டி யாஞ்சலியில் தனி நடனமும் வழங்கினேன்.

**? நாட்டியம் பயில்ப வர்களுக்கு உங்களுடைய அனுபவத்தால் கூற விரும்புவது?**

முற்காலங்களில் கலைகள் பயில்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப் பட்டது. தற்போது கலை களைப் பயில்வது குறைந்துபோனது மட்டுமில்லாமல், பயிலும் மாணவர்களும் ஒரு பொழுது போக்காகவே பயின்று வருகிறார் கள். பாடசாலை படிப்புக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எவரும் கலைகளுக்கு கொடுப் பதில்லை. பெற்றோர்களும் பாட சாலைப் படிப்பே முக்கியம் எனக் கூறி பிள்ளைகளை வளர்த்து வருகிறார்கள். அருகிவரும் கலை களை வளர்க்கும் பொறுப்பு நம்முடையதேயாகும்.

நாட்டியக் கலையானது இறைவன் திருவடிகளை சென்றடையும் நேர்வழிப் பாதையாகும். விட்டு விடாதீர்கள். நாம் கலையை வளர்த்தால் கலை நம்மை வளர்க்கும். எந்நேரத்திலும் உங் களை கைவிடாமல் எப்பொழுதும் இறுகப் பற்றிக்கொள்ளும்.

என்னை ஈன்று எனக்குத் தேவையான அனைத்தையும் நான் கேட்கும் முன்பே கொடுத்து என்னை வளர்த்தது மட்டுமல்லாமல், நான் வரமாய்க் கருதும் நாட்டி யக் கலையை அறி முகப்படுத்தி நான் பெரிதும் மதிக் கும் என் குருவையும் அறிமுகப் படுத்தித் தந்த என் பெற்றோருக்கு முதற்கண் நன்றி கூறி தலை வணங்குகிறேன். இத்துறைக்காக என்னை அர்ப் பணித்து இவ் வளவு தூரம் பயணிக்கக் காரணமான என் குரு கலாசூரி திருமதி திவ்யா சுஜேனுக்கு என் வாழ்நாள் முழுதும் நன்றி கூற கடமைப்பட் டுள்ளேன்.



என்னுடைய அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களை என் குரு இந்தியாவிலிருந்து வரவழைத்தார். அதேபோல் குருவின் கருணையால் ராஜ் குமார் பாரதி ஐயா போன்ற மகான்களின் அன்பு கிட்டியது. இன்னும் எண் ணற்ற இந்தியக் கலைஞர் களோடு இணைந்து நடன மாடியுள்ளேன். அவர்கள் அனைவருக்கும் நிறைந்த நன்றிகள்.

> ‘மேடை நிகழ்ச்சிகளிலோ அல்லது நடனப் போட்டிகளிலோ கலந்துகொள்ளும் ஆர்வம் இருந்தும் என்னை பலர் நிராகரித்தார்கள். ஆனால், எனது அரங்கேற்றத்தின் பின் நிராகரித்தவர்களே என்னைத் தேடி வரும்படியானது. என்னால் வெற்றிபெற முடியுமென என்னை நம்பி போட்டிகளுக்கு அனுப்புவார்கள். என் மேல் ஒரு தனி நம்பிக்கை உருவானது’

எங்கள் அபிநயஷேத்ரா பாடசாலையில் குருகுலக் கல்வி முறையில் பயின்று அரங்கேற்றம் செய்வது தான் வழக்கம். குருகுலக் கல்வி பற்றி கேள்விப்பட்டி ருப்போம். ஆனால், அனுப வித்திருக்க மாட்டோம். எனக்கு அதனை அனுபவிக்கும் பாக்கியமும் கிடைத்தது. அதுவே என்னை பயபக்தியோடும், ஒழுக்கத்தோடும் கற்க ஏதுவாக இருந்தது. என் வீட்டைவிட்டு என் குருவோடு இருக்கும் வேளைகளில் எனக்கு இன்னொரு தாய் போல் என்னைக் கவனித்துக்கொண்ட என் குருவின் தாயார் திருமதி புஷ்பராணி சிவநேசனை என்றும் என் வாழ்வில் மறக்கமாட்டேன். என்னுடனே இருந்து எனக்கு அன்பைத் தந்துதவிய அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவ மாணவியருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**-ராம் ஜீவா**

## ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில்

## மறைந்த சீ.பீ.எம்.காசிம் – மு.பஷீர் கிச்சிலான் அமதுர் ரஹீம் நினைவுகள்







இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் (06.07.2021) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்புச் செய்தோர் வரிசையில் காலஞ்சென்ற மூத்த கலைஞர்களான சீ.பீ.எம்.காசிம், மு.பஷீர், கிச்சிலான் அமதுர் ரஹீம் ஆகியோரின் நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன .

இவர்களின் நினைவுகளை மீட்டிப்பார்க்க மூத்த கலைஞர் கே.எம்.ஏ.மொஹிதீன், எழுத்தாளரும், பத்திரிகையாளருமான கலைவாதி கலீல் ஆகியோர் நிகழ்ச்சியில் அதிதிகளாக கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக் கிறார்.

# காத்திரமான கவிநயம் தந்த ஸ்ரீ கல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை

பூத்துக் குலுங்கும் புத்தளம் மாவட்டம் புதுமைகள் பலவற்றை பரிணமித்த மாவட்டமாகும். கலை, இலக்கியத்துறையில் வறுமை நிலையில் முன்னம் பின்னமைவைக் கண்டாலும் சமகால ஓட்டத்தில் புனைவு இலக்கியப் பரப்பில் அகலக்கால் பதித்துவரும் மாவட்டமாக முகிழ்ந்து நிற்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் தமிழரின் கலை, இலக்கிய ஆக்கப்படைப்பின் பரப்பில் தனக்கென்று முத்திரை பதித்தவர்களில் - முன்னணி எழுத்துருவாக்கத்துக்கு கட்டியம் கூறிநிற்பவர்களில் ஒருவர் சைமன் காசிச்செட்டி. அன்னாரின் படைப்புகள் தமிழரின் இருப்பை - அதன் பெருமையை இன்றும் விதந்துரைத்துப் பேசப்படுவதென்றால் - இவரின் படைப்புத்துறை இன்னும் பேசப்படுவதென்றால் அதன் தாற்பரிய சிறப்பை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது என்றே கூறலாம். இம்மாவட்டத்திலுள்ள முந்தல் கருங்காலிச்சோலை என்னுமிடத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் வதிவிடமாகவும் வாழும் இரா.அழகிரிசாமி பல்துறை ஆற்றல் கொண்டவரராக மிளிர்கின்றார்.

தனது வதிவிடத்தில் கிராமசேவை உத்தியோகத் தராக கடமைபுரிந்து ஓய்வுநிலை பெற்றுள்ளார். சிறந்ததோர் இரு மொழி அறிவிப்பாளர். ஆலய உற்சவங்களில் இருமொழியிலும் அறிவிக்கும் திறம் கொண்ட அழகிரிசாமி பொதுச்சேவையில் தன்னை அடையாளப்படுத்தி ஆன்மிகத்துறையிலும் மிக ஈடுபாடுகொண்டு உழைத்து வருகின்ற ஒருவராவார்.

முந்தல் வாழ் ஆரம்ப கால மக்கள் 1957ஆம் ஆண்டளவில் கருங்காலிச் சோலை என்ற கிராமத்தில் குடியேற்றப்பட்டார்கள். கோவிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாமென்ற வாக்கிற்கேற்ப ஸ்ரீ முருகனுக்கு சிறுகோயில் கட்டி வழிபட்டு வந்தனர்.

முருகனின் அருளால் வளர்ச்சியடைந்த இவ்வாலயத்திற்கு வருகைதந்த அருள்மிகு கிருபானந்தவாரியார் தனது அருள்வாக்கால் இவ்வாலயத்துக்கு ஸ்ரீ கலியாண முருகன் திருச்சேவை என்று பெயர் சூட்டி இவ்வாலயத்தை அடையாளப்படுத்தினார்.

அச்சமயம் இவ்வாலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக அலங்கரித்தவர் இரா.அழகிரிசாமி.

இவ்வாலயத்தில் தன்னை ஈடுபடுத்தி ஆலய வளர்ச்சியில் ஈடுபட்டுவரும் அழகிரிசாமி பேச்சாற்றலுடன் கலை, இலக்கியத்துறையிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார் என்பதற்கு சான்றாக அவர் இயற்றி வெளிவந்துள்ள ஸ்ரீ கல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை அன்னாரின் கவியாற்றலுக்கு சான்று பகர்கின்றது.

அழகிரிசாமியின் இப்பாமாலையின் பாக்களை




நுகரும்போது தனித்துவ அடையாளத்தின் நெறிமுறை பண்புத்தன்மை இழையோடி நிற்கின்றது. ஆன்மிகத்துறையில் அவரின் ஈடுபாடும் இசைவாக்கமும், கவிபுனை பின் திறமையும் ஆத்மார்த்தமாக துளிர் விடுவதைக் காணலாம். எதிர்காலத்தில் இன்னும் பலஆத்மீக சக்தி கொண்டவராக திகழ்கின்றார்.

ஆசிரியர் வழமைபோன்ற இதில் தன் பெற்றோரை மலரடி பணிந்து தன்னை வாழவைக்கும் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ கல்யாண முருகனுகசு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார். இவ்வாலய பிரதம சிவாச்சாரி சிவஸ்ரீ தர்மசீலன் சர்மாவும் இலங்கை சிவன் மானிட மேம்பாட்டு நிறுவன அமைப்பாளர் சுவாமி இரா.கலியுகவரதன் தமது ஆசிச் செய்தியில்,

சைவர் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்றிருக்க வேண்டும். எமது திட்டங்களில் ஒன்று சமயதீட்சை வழங்குவதே. 2006ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை பல பாகங்களிலும் எமது நிறுவனம் நடத்தியுள்ளது.

ஓர் அழகான குளக்கரை அருகில் எழிலுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் முருகனின் சிறப்பை அறிந்து மகிழ்ந்தேன்.

இவ்வாலயமானது கடந்த 40 வருடகாலத்தை 2021.02.06 அன்று பூர்த்தியடைகின்றது. இதன் மகிமை - பெருமை உணர்ந்த ஆலய ஸ்தாபகத் தலைவர் சிவத்திரு இரா.அழகிரிசாமி இயற்றி பாடிய ஸ்ரீ கல்யாண முருகன் திருவூஞ்சல் பாமாலை வெளிவருகின்றது.

சமயமரபு முறைமைகளுக்கும் கிரியைகள், சடங்கு சம்பிரதாயத்துக்கும் முன்னுதாரணமாக உழைக்கும் இவர், 28 பக்கங்களுடன் ஐந்து பஜனைப் பாடல்களையும் பண்ணோடு பாடக்கூடிய பல திருமுறைப் பாடல்களையும் 101 ஸ்ரீ கல்யாண முருகன் நாம வழிபாடு உள்ளடக்கி இந்த ஸ்ரீ கல்யாண முருகன் திருவூஞ்சல் பாமாலை நூலை தனது கன்னி முயற்சியார் வெளிட்டுள்ளார்.

இந்நூல் கண்ணைக் கவரும் வண்ண வடிவமைப் புடன் வள்ளிதெய்வானையுடன் அழகு ஸ்ரீ முருகன் காட்சிதரும் அழகுக் கோலத்துடன் ஸ்ரீ கந்தகோட்டம் கருங்காலிச்சோலை முந்தல் வெளியிட்டுள்ளது.

**உடப்பூர் வீரசொக்கன்**



# கழிவறையை சுத்தப்படுத்தும் பூண்டு

உலகிலேயே பலருக்கும் மிகவும் பிடித்த இடம் என்றால், அது அவர்களின் வீடாகத்தான் இருக்கும். எங்கு சென்றாலும் கிடைக்காத சந்தோஷம், அவர்களது வீட்டில் கிடைக்கும். அப்படிப்பட்ட வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள அனைவருமே விரும்புவோம். வீட்டிலேயே மிகவும் அசுத்தமான மற்றும் கிருமிகள் நிறைந்த இடம் என்றால் அது கழிவறைதான். அந்தக் கழிவறையை சுத்தமாக வைத்துக்கொள்ள நாம் பல பொருட்களை வாங்கிப் பயன்படுத்துவோம். ஆனால், நம் வீட்டு சமையலறையிலுள்ள ஒரு பொருள் கழிவறையில் மாயங்களை ஏற்படுத்தும் திறன் கொண்டுள்ளது. அதுதான் பூண்டு.

பூண்டு சமையலைத் தவிர பல பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, நாட்டு வைத்தியத்தில், சளி, ஜலதோஷம் மற்றும் பிற சுவாசப் பிரச்சினைகளுக்கு எதிராகப் போராட பூண்டு பயன்படுத்தப்படுகிறது. தோட்டத்தில் பூண்டு நீரைத் தெளித்தால், அது பூக்களைப் பூக்க வைக்க உதவுகிறது. இப்படிப்பட்ட பூண்டு, கழிவறையில் ஒரு பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இப்போது ஒரு பல் பூண்டு கொண்டு கழிவறையை எப்படி சுத்தம் செய்வதென்பதைக் காண்போம்.

**சுத்தப்படுத்தும் அற்புத பொருள்**

பல்வேறு ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ள பூண்டு ஒரு அற்புதமான சுத்தப்படுத்தும் பொருளும் கூட. பூண்டிலுள்ள அல்லிசின் என்னும் பொருள் தான் பூண்டிற்கு தனித்துவமான நறுமணத்தை வழங்குகிறது. மேலும், இந்தப் பொருள்தான் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை அண்ட விடாமல் தடுக்கிறது.

**பூண்டை எப்படி சுத்தம் செய்ய பயன்படுத்துவது?**

உங்களால் விலையுயர்ந்த கழிவறையை சுத்தம்செய்ய உதவும் பொருட்களை வாங்கி பயன்படுத்த முடியவில்லையா? என்ன செய்தாலும் உங்கள் வீட்டுக் கழிவறை சீக்கிரம் அசுத்தமாகிறதா? அப்படியானால் கழிவறையை சுத்தம்செய்ய பூண்டு பல்லை இரு வழிகளில் பயன்படுத்தலாம். இந்த இரு வழிகளுமே மிகவும் எளிமையானவை.

இரவு உறங்கும் முன் ஒரு பல் பூண்டை நன்கு தட்டி கழிவறையில் போட்டு, இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் எழுந்ததும் நீரை ஊற்றி ஒருமுறை தேய்த்து கழுவினால், கழிவறையிலுள்ள துர்நாற்றம் நீங்குவதோடு, கிருமிகளும் அழிந்துவிடும்.

இரண்டாவது வழி பூண்டு ஊற வைத்த நீர். இந்த நீரைத் தயாரிப்பதற்கு, ஒரு கப் நீர் மற்றும் ஒன்று அல்லது இரண்டு பல் பூண்டு இருந்தால் போதும். பின் நீரை பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து, நீரைக் கொதிக்கவைக்க வேண்டும். நீரானது நன்கு கொதிக்க ஆரம்பித்ததும், அதில் பூண்டுகளை பொடியாக நறுக்கிப் போட்டு நன்கு கொதிக்கும் போது அடுப்பை அணைத்து, 15 நிமிடம் மூடி வைக்க வேண்டும். அதன் பின் அந்நீரை வடிகட்டி, அதை இரவு தூங்கும் முன் கழிவறையில் ஊற்றி இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் தேய்த்துக் கழுவவேண்டும்.

கழிவறை சுத்தமாக துர்நாற்றமின்றியும், கிருமிகள் இல்லாமலும், கறை ஏதும் இல்லாமலும் இருக்க வேண்டுமானால், மேலே கொடுக்கப்பட்டுள்ள வழிகளை வாரத்திற்கு இருமுறை மேற்கொள்ளுங்கள். இதனால் கழிவறையில் ஒரு நல்ல மாற்றத்தைக் காண்பீர்கள்.





# இறால் மஞ்சூரியன்

**தேவையான பொருட்கள் :**

இறால் - கால் கிலோ
சில்லி பிளேக்ஸ் - சிறிதளவு
வெங்காயத்தாள் - தேவையானளவு
பெ.வெங்காயம் - 1 (நறுக்கவும்)
குடைமிளகாய் - 1 (நறுக்கவும்)
பூண்டு - 5 பல்
மிளகாய் சோஸ் - 1 டீஸ்பூன்
தக்காளி சோஸ் - 2 டீஸ்பூன்
சோயா சோஸ் - 1 டீஸ்பூன்
மிளகுத்தூள் - அரை டீஸ்பூன்
உப்பு - தேவையானளவு

**செய்முறை:**

இறாலைக் கழுவி சுத்தம் செய்து மிளகுத்தூள், உப்பு சேர்த்து சிறிது நேரம் ஊறவைக்கவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் இறாலைப் போட்டு பொரித்தெடுத்துக் கொள்ளவும்.

பின்னர் வெங்காயத்தைக் கொட்டி தனியாக வதக்கவும்.

அடுத்து பூண்டு சேர்த்து வதக்கவும்.

அதனுடன் சோயா சோஸ், மிளகாய் சோஸ், தக்காளி சோஸ், சில்லி பிளேக்ஸ், உப்பு போன்றவற்றைக் கலந்து பச்சை வாசம் நீங்கும்வரை வதக்கவும்.

அதன் பிறகு குடைமிளகாய், வெங்காயத்தாள் சேர்த்து இலேசாக வதக்கி, இறாலைக் கொட்டி கிளறி இறக்கவும்.

ருசியான இறால் மஞ்சூரியன் ரெடி.



# காரிகை களம்

# தமிழர் பண்பாடுகளில்




இயற்கையோடு சேர்ந்த வாழ்வுதான் நம்ம தமிழர் பண்பாடு. ஒருவகையில் உண்மைதான். நம்மைச் சுற்றியிருக்கும் பசுமைகள் இன்னும் பசுமையாக நிலைத்திருப்பது போலவே நாம் வாழ்ந்தோம்.

அது நமக்கு நிறைய விடயங்களைக் கற்றுக்கொடுத்தது. அதற்கு நாமும் நன்றியோடு இருந்தோம். அந்த நன்றிக்குப் பரிசாக கிடைத்ததுதான் நம் முன்னோர்களின் ஆரோக்கியம்.

வாழை இலை நாம் நினைத்தாலும் நம்மிடமிருந்து விலக்க முடியாத ஒன்றாகிவிட்டது.

என்னதான் எவர்சில்வர், பீங்கான் தட்டுகள், பேப்பர் பிளேட்டுகள் வந்து கடந்துபோய் பிளாஸ்டிக் இலைகள் என வித்தியாசமாக முயற்சி செய்தாலும் அனைத்தையும் வாழை இலைகள் முறியடித்து விடுகிறன்றன.

பொது நிகழ்ச்சி, வீட்டு விழாக்கள், உணவகம் என எங்கும் இலைகள்மயம்!

**வாழை இலை சிறப்பு**

சைவமோ அசைவமோ, எதுவாக இருந்தாலும் இலைபோட்டு உண்டால் அது எவ்வளவு பெரிய செரிமானக் கோளாறையும் சரிசெய்துவிடும்.

**ஏன் தண்ணீர் தெளிக்கிறோம்?**

தோப்பிலிருந்து எடுத்து வரப்படும் இலைகளில் பூச்சி, மண் அழுக்குகள் இருக்கும். அதனை சுத்தம் செய்வதற்காகவே உணவினை இலைகளில் பரிமாறுவதற்கு முன்னதாக தண்ணீர் தெளித்து சுத்தம் செய்கிறோம்.

**முதலில் இலையை எப்படிப் போடுவது?**

குறுகின பக்கம் இடது கைக்கு வர வேண்டும். சோற்றைத்தானே நிறைய வைக்கச் சொல்லுவோம்? அதற்குத்தான் இந்த அமைப்பு!

அகன்ற பக்கம் வலது கைக்கு வசதி. சோறு வகையெல்லாம் இங்கேதான் வைக்கவேண்டும். இலையின் மேல் பக்கம் கறி வகைகள். இடப்பக்கம், அப்பளம்.



**இலையை எந்தப் பக்கம் மடிப்பது?**

இலையை உட்பக்கமாக மடித்தால் உறவு நீடிக்கும். வெளிப்பக்கமாக மடித்தால், உறவு முறியும் என்று சொல்வது பழையகால நம்பிக்கை. பந்திகளில் எதிரெதிர்ப் பக்கமாக அமர்ந்திருப்போம். வெளிப்பக்கமாக மடிக்கும்போது நாம் சாப்பிட்ட எச்சில் அடுத்தவரின் இலையில் பட்டுவிடக் கூடாதென்ற சுகாதாரத்தைச் சொல்லும் பொதுவெளி நாகரிகம் தான் அது!



# விரல்களுக்கு அழகு தரும் மோதிரங்கள்

அன்றாட வாழ்வில் ஆண்களும், பெண்களும் அணிந்து மகிழும் ஆபரணங்கள் அனைத்துக்கும் பொருத்தமான பெயர்கள் உள்ளன. அதன் பின்னால் அதற்கான வரலாறும் இருக்கும். அந்த வகையில் அனைவரும் அணியும் மோதிரங்களுக்கும் பெயர்கள் உள்ளன.

**ஆர்மர் மோதிரம்:** போர்க் கவசம் போன்ற தோற்றமளிப்பதால் அதற்கு ஆர்மர் மோதிரம் என்று பெயர். இவ்வகை மோதிரங்களை நடுவிரலில் அணிவது வழக்கம். பிசினஸ் மீட்டிங்கில் கலந்துகொள்ளும் தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர் இவ்வகை மோதிரங்களை அணிந்து சென்றால் தன்னம்பிக்கையுடன் செயற்படுவார்கள்.

**தம்ப் ரிங் (கட்டை விரல் மோதிரம்):** கட்டை விரலில் மட்டும் அணிவதற்கேற்ப தடிமனாக இவ்வகை மோதிரம் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு விருந்துகள், விழாக்கள் மற்றும் பார்ட்டி ஆகியவற்றுக்கு அணிந்து செல்ல இந்த மோதிரம் ஏற்றதாக சொல்லப்படுகிறது.

**கொக்டெய்ல் மோதிரம் :** அனைவருக்கும் பரிச்சயமான இவ்வகை மோதிரத்தின் பெயர் பற்றி பலரும் அறிந்திருக்க மாட்டோம். நடுவில் பெரிய இரத்தினக்கல் பதிக்கப்பட்டு அதை சுற்றிலும் சிறிய இரத்திரனக்கற்கள் இடம்பெற்றிருக்கும். இவற்றில் வைரம் மற்றும் பவளம் ஆகியவை பதிக்கப்படுவதே வழக்கம். அணிபவர்களுக்கு கிராண்ட் லுக் அளிக்கும் மோதிரவகை இது.

**மோர்னிங் ரிங்:** வெளிநாடுகளில் அதிகமாக உபயோகிக்கப்படும் இவ்வகை மோதிரங்கள் இறந்தவர்கள் நினைவாக அணியப்படுபவை. அதில் இறந்தவரின் பெயர், அல்லது இறந்த திகதி பொறிக்கப்பட்டிருக்கும்.

**கிளாஸ் ரிங்:** இவ்வகை மோதிரங்கள் 1999ஆம் ஆண்டு முதல் இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகின்றன. தடிமனாகவும், மத்தியில் சிறிய கல் பொருத்தப்பட்டும் தயாரிக்கப் படுகின்றன. அனைவரும் அணிந்து கொள்ள இவை ஏற்றவை.

**பஸில் மோதிரம்:** குழப்பமான வடிவமைப்பு கொண்டது என்பதால் பஸில் மோதிரம் என்று அழைக்கப் படுகிறது. இதை அணிந்திருப்பர்களின் குணாதிசயங்களை மற்றவர்கள் எளிதாக அறிந்து கொள்ள இயலாது என்ற நம்பிக்கை பலருக்கும் உண்டு.

**பியூரிட்டி மோதிரம்:** அன்றாட வாழ்வில் அனைவரும் பயன்படுத்தும் மோதிர வகை இது. மெல்லிய அளவில் ஒரே சிறிய இரத்தினக்கல் பொருத்தப்பட்டிருக்கும். எளிமையின் அடையாளமாக இந்த மோதிரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கசக்கும் பாகற்காயில்...

கசக்கும் காய் என்றாலும் பாகற்காயை சமையலில் சேர்த்துக் கொள்வதிலிருந்தே இதன் முக்கியத்துவம் புரியும். குறைந்த ஆற்றல் வழங்குபவை பாகற்காய்கள். 100 கிராம் பாகற்காயில் 17 கலோரி ஆற்றலே உடலுக்குக் கிடைக்கிறது.

பாகற்காயின் விதைகள் எளிதில் ஜீரணமாகும் நார்ப் பொருட்கள், தாது உப்புகள், விற்றமின்கள், நோய் எதிர்ப்புப் பொருட்களைக் கொண்டுள்ளன.



★‘பாலிபெப்டைடு-பி எனப்படும் குறிப்பிடத்தக்க சத்துப்பொருள் பாகற்காயில் காணப்படுகிறது. இதனை தாவரங்களின் ‘இன்சுலின்’ என்று கருதுகிறார்கள்.

★சிறந்த நோய் எதிர்ப்புப் பொருளான விற்றமின்-சி, பாகற்காயில் அதிகமுள்ளது. 100 கிராம் விதையில் 84 மில்லிகிராம் விற்றமின்-சி உள்ளது. இயற்கை நோய் எதிர்ப்புப் பொருளான இது, தீங்கு விளைவிக்கும் பிரீ-ரேடிக்கல்களை விரட்டியடிக்கும்.

★பீட்டா கரோட்டின், ஆல்பா கரோட்டின், லுடின், ஸி-சாந்தின் போன்ற புளோவனாய்டுகள் உள்ளன. அத்துடன் விற்றமின்-ஏ அதிகளவில் உள்ளது. இவை புற்றுநோயை உருவாக்கும் பிரீ-ரேடிக்கல்களை விரட்டுவதோடு, வயது மூப்படைதல் மற்றும் வியாதிகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கும்.

★ஜீரண சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் பாகற்காய்க்கு உண்டு. மலச்சிக்கல் மற்றும் அஜீரணத்தை போக்கும்.

★விற்றமின்-பி 3, விற்றமின்-பி 5, விற்றமின்-பி 6 போன்ற அத்தியாவசிய விற்றமின்களும், இரும்பு, துத்தநாகம், பொட்டாசியம், மங்கனீசு மற்றும் மக்னீசியம் போன்ற முக்கிய தாதுக்களும் பாகற்காயிலிருந்து உடலுக்கு கிடைக்கின்றன.

# இதுதான் வாழ்க்கை



செக்கச்சிவந்து நகரும் செக்கன்கள்
நிற்காமல் ஓடும் நிமிடங்கள்
மறையாமல் மறுக்கும் மணித்தியாலங்கள்
நாமத்தையே மாற்றும் நாட்கள்
மர்மமாய் மறையும் மாதங்கள்
வரவேற்கக் காத்திருக்கும் வருடங்கள்
இதனோடு எண்ணப்பட்ட மூச்சுகளுடனும்
எழுதப்பட்ட விதிகளுடனும் வாழும் மனிதன்

இதற்கிடையில் நாம் நொறுங்கி
காற்றோடு காற்றாகி விடுவோம்
என்று தெரிந்தும், எம்மை ஏமாற்றி மகிழ
தைரியமுள்ள பலர் எம் முன்னிலையில்

எனினும் உங்களின் அடைவுடன்
அவர்களைக் கொல்லுங்கள்
உறுதி பூணுவோம்..!

என்னை ஏமாற்றியவர்களை
என்னை ஏமாளியாக்கியவர்களை
பசுந்தோல் போர்த்திய புலியைப் போல்
என்னிடம் வேஷமிட்ட
ஜீவகாருண்யமற்ற ஜீவன்களை

என் இலட்சியப் பாதையைக் கண்டு
ஈரைந்து பேரை வைத்து சிரித்தவர்களை
நான் செய்த வேலையை
நீ செய்யவில்லை என்று கூறிய
தெருநாயை விட நன்றிகெட்ட
நாக்கு கொண்ட மானங்கெட்ட மனிதர்களையும்

நான் கொலை செய்வேன்
என்னுடைய அடைவைக் கொண்டு
உறுதி பூணுவோம்..!

இளம் பயணி
றஜா முஹம்மத் அப்துல் றசாக்

# எப்போது உனைப் பார்ப்பேன்



ஒருதடவை பார்ப்பேனோ உன்
முகத்தை மறுஜென்மம்வரை காப்பேன்
அந்நினைவை மடல் மூடி
துயில் கொள்ளும்
உன் அழகை
விழி மூடாது ரசித்திடுவேன்
முப்பொழுதும்

உன்னழகைக் கண்டவர்கள்
அத்தனையும் மறந்தவராய்
புத்தியிலே எத்தனையோ
சித்திரமாய் கனவு கண்டு
நித்திரையே இல்லாமல்
செத்து செத்து பிழைக்கின்றனரோ..!

சிரம் தாழ்த்தி வணங்கிடுவார்
தேவரும் சினம் கொண்டு போரிடுவார்
பகைவரும் பொருள்
கொண்டு வந்திடுவார்
மன்னரும் மதிமயங்கி
புலம்பிடுவார்
புலவரும்
வெறிகொண்டு தேடிடுவார்

வார்த்தைகள் இல்லையடி
வர்ணனை செய்வதற்கே
வானமே இவ்வுலகில் நிகராகும்
உன் அழகை அளப்பதற்கு
தேன்கூட கசப்பென்று கூறவைக்கும்
உன் உதட்டால் சிதறும் முத்தங்கள்

கலங்கரை விளக்கமாய்
வாழ்வினிலே ஒளியேற்றும்
உன் விழி பார்வைதனை
தினம் பார்த்து உயிர்வாழ
என்னவளே எப்போது நீ
வருவாய் என்முன்னே

வன்னித் தமிழ் மறவன்
கிளிநொச்சி

# சின்ன நன்மையேனும் சீர்படச் செய்திடுவோம்

ஈமானில் தூய்மை கண்டு
தொழுகையை நிலைநிறுத்தி
கலிமாவை உரைத்து நாமும்
கல்புகளை கழுவி நிதம்
காசினியில் வாழ்ந்திடுவோம்
கவலைகள் மறந்து போகும்

சின்ன நன்மையேனும்
சீர்படச் செய்திடுவோம்
வல்ல அல்லாஹ் எமக்கு
வரம் தரக் காத்திருக்கான்

வாழ்வில் வறுமை ஒழிய
வந்த கொரோனா தொலைந்து
போகும்

நிறுவன ரீதியாய் ஸகாத்
நிரந்தரமாய் கொடுத்திடனும்
நிலையற்ற ஏழை வாழ்வு
இதனால் செழித்திட வேண்டும்
கையேந்தி காலம் தள்ளும்
கெட்டநிலை மாறவேண்டும்

நோய்க்கு மருந்து பலவுண்டு
உண்ணா நோன்பு அதற்குச் சிறப்பு
நமதிறைவன் கூலி தரும்
நல்ல சுவனமும் உண்டு
நற்கருமம் இதுவன்றோ
தனிசுவர்க்கம் கிடைக்குமாமே

அன்று பிறந்த பாலகனாய்
உயிர் மீண்டுவரும் ஹஜ்
சக்தியது குறைவதற்குள்
சடுதியாக செய்யவேண்டும்
பணமுந்தான் விருத்தி பெறும்
படைத்தவன் எமைக் காப்பான்

எஸ்.சிராஜுதீன்
தோப்பூர்



# அலையின் முதுகில் குந்தியவர்



கடலை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்
தொடுவானம் கற்பனையாகியது
கடல் அடிவாரத்தில் மீன்களின்
ஆட்சியாளர்கள் வருகை
மனம் சுழியோடத் தொடங்கியது
அவரது மனத்திற்குப் பின்னால்
கடல்வாழ் இதர உயிரினங்கள்
ஆழம் வரை நீந்தத் தொடங்கின
நீரைக் கிழித்து மேலே உயர்ந்தவர்
அவரின் கற்பனையில் மிதந்த
தொடுவானம் நான்கு புறமும் தெரிந்தது
சிறு அலையின் முதுகில் குந்தியவரை
ஒரு பெரும் அலை தூக்கி வீசியது கரையில்
அவர் நனைந்திருக்கவில்லை..!

டீன் கபூர்

# தொலைந்துபோன நிம்மதி

தொலைந்துபோன நிம்மதிக்காய்
ஏங்கித் தவிக்கிறது
என் இதயம் - நாட்டுநடப்புகளும்
மனிதப் பண்புகளும்
இனியொரு நாளும்
கண்டுகொள்ள முடியாத
ஒன்றாகப் போய்விடுமோ
என்ற அச்சம்தான்
மேலோங்கி நிற்கிறது

ஆணைக் குழுக்கள் என்றும்
தெரிவுக் குழுக்கள் என்றும்
உயர் நீதிமன்றுகளும்
பிழையெனக் கண்டவைகள்
மகா சனங்கள் கண்டவைகள்
கேட்டவைகள் எல்லாமே
கண்முன்னே பிழையான

தீர்ப்புகளாய் களம் மாறும்
அற்புதங்கள் அரங்கேறும்
தளமாக மாறிவரும்
புதினங்கள் பார்க்கின்றோம்

ஊரறிய உலகறிய
நாடறிய நாமறிய
பட்டப் பகலினிலும்
கலவரங்கள் கடையுடைப்பு
கொலை கொள்ளை
புரிந்தவர்கள்
தியாகிகளாய் சித்திரிக்கும்
நிலமாக மாறிவரும்
எம் தேசம் காண்கின்றோம்

ஏயாறே சத்தார்
மருதமுனை






# உயிரே உனக்காக



இதயம் சுமந்தவாறு உன்னை மட்டும்
நினைத்து கண்ணியம் காக்கும் என் இரு
விழிகள் கடமை உணர்வில் உறுதியாய்
நின்று கொண்டிருக்கின்றன

ஒரு நிமிடம் காண மறுத்தால் ஒரு யுகம்
காண மறுத்த வலியினை உரியவருக்கு
சொல்ல முடியாத நிலையில் இரு மனமும்
திறந்து பேசினாலும் பல உண்மைகள்
மனதிலேயே புதைந்து விடுகின்றன


அன்பின் ஆரவாரமாய் புரிதலுள்ள
காதலில் ஒவ்வொரு நொடியும்
புன்னகையை மட்டுமே எதிர்பார்க்கிறேன்
உன் உதடுகளில் மனதின் ஆயிரம்
கவலைகள் இருந்தாலும் அவள் நோக்கம்
அறியாமலேயே அவள் மண் விழி
பார்வையில் மயங்கியே அவள்
பின்னே சென்றேன்

என் கண்கள் பார்த்து உள்ளத்தில் பதிந்த
உன் பூ முகத்தைப் பார்த்து கண்களோ
சிமிட்ட மறுத்ததடி இதயமோ உன்னை
நிஜமான நாட்களாய் எண்ணி வாழ்வு நகருதடி

அன்பே மீண்டும் மீண்டும் உன்னை
புன்னகைக்கவே சொல்லுகிறேன்
நம் உயிரில் கலந்த அன்பால் நிறைந்த
இனிமையான நாட்களை எண்ணி

ஹாசின்
அக்குறணை

# நீயென் எதிரே



ஒன்றில் மு.மேத்தா கவிதைகளுக்கு
முத்தமிட்டு கொண்டிருந்திருப்பேன்

இல்லையேல் கண்ணதாசன் வரிகளுக்குள்
காணாமல் போயிருந்திருப்பேன்

ஒன்றில் இளையராஜா இசைக்குள்
இசைந்து போயிருந்திருப்பேன்

இல்லையேல் ரஹ்மான்
இசையால் ரட்சிக்கப்பட்டிருப்பேன்

ஒன்றில் நைல் நதி
விளைவுகளில் நீந்திக்
கொண்டிருந்திருப்பேன்

இல்லையேல் நயாகரா
வீழ்ச்சியில் குதித்துக்
கொண்டிருந்திருப்பேன்

ஒன்றில் பூக்களை
அழகென கட்டுரை எழுதிக்
கொண்டிருந்திருப்பேன்

இல்லையேல் கனிகளே
சுவையென கவிதை வடித்துக்
கொண்டிருந்திருப்பேன்

ஒன்றில் பனித்
துளியைப் பார்த்து
பரவசம் அடைந்திருப்பேன்

இல்லையேல் மழைத்
துளியைப் பார்த்து மனம் உறைந்திருப்பேன்

ஒன்றில் தாஜ்மகாலை
காண விமானம் ஏறியிருப்பேன்

இல்லையேல் மோனாலிசாவை
வாங்குவதற்காக விலை பேசியிருப்பேன்

புதிரே நீயென் எதிரே எல்லாமாக
தோன்றாமல் இருந்திருந்தால்..!

குலேந்திரன்
மயிலந்தனை

# இளஞ்சிவப்பு நிற ஹிலியர் ஏரி



ஹிலியர் ஏரி (Lake Hillier) என்பது தென்மேற்கு அவுஸ்திரேலிய கடற்கரைக்கு அப்பாலுள்ள தீவுகளில் காணப்படும் உப்பு ஏரியாகும். இது அதனுடைய மென்சிவப்பு நிறத்தினால் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏரியையும் தென்முனைப் பெருங்கடலையும் நீண்ட, மெல்லிய கடற்கரை பிரிக்கிறது.

கிலியர் ஏரி (முன்னர் ஏரி ஸ்பென்சர் என்று அழைக்கப்பட்டது) மேற்கு அவுஸ்திரேலியாவின் கோல்ட்ஃபீல்ட்ஸ்-எஸ்பெரன்ஸ் பகுதியிலுள்ள ஒரு உப்பு ஏரியாகும். வரலாற்று ரீதியாக ஏரியின் நீர் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தபோதிலும், 2017ஆம் ஆண்டு நிலைவரப்படி அது பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இளஞ்சிவப்பு நிறத்தில் இல்லை. கிலியர் ஏரியின் இளஞ்சிவப்பு நிறத்திற்கு உப்பு செறிவு மிக முக்கியமானது. இது எஸ்பெரன்ஸ் நகரிலிருந்து மேற்கே 3 கிலோமீற்றர் (2 மைல்) தொலைவில் அமைந்துள்ளது.

ஓர் ஏரி ஏன் இளஞ்சிவப்பு நிறமாக மாறும் என்பதற்கான இயக்கவியல் மிகவும் சிக்கலானது. வெளிப்புற மாற்றங்கள் மற்றும் வானிலை ஆகியவை ஏரியின் நிறத்தை பாதிக்கும். மனித செயற்பாடுகளால் உமிழ்நீர் மாற்றங்களால் எஸ்பெரன்ஸ் கிலியர் ஏரி அதன் இளஞ்சிவப்பு நிறத்தை இழந்துள்ளது.

ஏரி நீர் கடல் நீரைவிட உப்புத்தன்மை அளவை எட்டியவுடன், வெப்பநிலை போதுமான அளவு அதிகமாக இருக்கும் மற்றும் போதுமான ஒளி நிலைமைகள் வழங்கப்பட்டால், ஒல்கா சிவப்பு நிறமி பீட்டா கரோட்டின் குவிக்கத் தொடங்குகிறது. இளஞ்சிவப்பு ஹாலோபாக்டீரியம் ஏரியின் அடிப்பகுதியிலுள்ள உப்பு மேலோட்டத்தில் வளர்கிறது.



தென் கடற்கரை நெடுஞ்சாலை மற்றும் ஒரு ரயில் பாதை ஆகியவை ஏரிக்கு நீரின் ஓட்டத்தை மாற்றியமைத்தன என்று நம்பப்படுகிறது, அதனால்தான் (2017 நிலைவரப்படி) இது இனி இளஞ்சிவப்பு நிறத்தில் தோன்றாது.

1848ஆம் ஆண்டில், ஆய்வாளர் ஜோன் செப்டிமஸ் ரோ, அல்பானியில் வசிக்கும் சேர் ரிச்சர்ட் ஸ்பென்சரின் பெயரால் நீர்வழி ஏரிக்கு ஸ்பென்சர் என்று பெயரிட்டார். அவர் மேற்கு அவுஸ்திரேலியாவின் காலனியை ஆரம்பத்தில் உருவாக்க பங்களித்தார். அருகிலுள்ள லேக் வார்டன், சேர் ரிச்சர்ட் ஸ்பென்சரின் மனைவி லேடி ஆன் வார்டன் ஸ்பென்சரின் பெயரிடப்பட்டதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த ஏரி கடந்த காலங்களில் ஒரு தனித்துவமான இளஞ்சிவப்பு நிறத்தைக் காட்டியது. 1966ஆம் ஆண்டு சி.ஆர்.டபிள்யூ.எஸ். பேட்டர்சன் புவியியல் பெயர்கள் குழுவிடம் ஒரு கோரிக்கையை சமர்ப்பித்தபோது, குறித்த ஏரிக்கு ஸ்பென்சர் என அதிகாரபூர்வமாக பெயரிடப்பட்டது.

கிலியர் ஏரியைப் பார்க்க எஸ்பெரன்ஸ் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இளஞ்சிவப்பு ஏரியின் நிறமாற்றத்தால் ஏமாற்றமடைந்துள்ளனர். இதனால் ஏரியின் பெயரையும் நகரத்தையும் ஸ்பென்சர் ஏரிக்கு மாற்றுவதற்கும் அல்லது உப்புத்தன்மையை மாற்றுவதற்கான வழியைக் கண்டுபிடிப்பதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த ஏரி கடலின் ஆழமான நீலத்துடன் முரண்படுகிறது. இந்தத் தீவு மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

கோடை காலத்தில் ஆவியாவதிலிருந்து நீர்மட்டம் குறைவதோடு, இணைந்து உப்புச்செறிவு அதிகரிப்பது நாடு முழுவதுமுள்ள ஏரிகளில் காணக்கூடிய இளஞ்சிவப்பு நிறத்தின் தோற்றத்தைத் தூண்டுகிறது.

## நிறம் மாறும் ஊர்வலம்

# பச்சோந்திக் குன்று





உலுரு (Uluru) அல்லது ஆயர்சு பாறை (Ayers Rock) என பச்சோந்திக் குன்று அதிகார பூர்வமாக அழைக்கப்படுகிறது. இது அவுஸ்திரேலியாவின் சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். அவுஸ்திரேலியாவின் மத்திய பகுதியில், வட ஆட்புல ஆட்சிப் பகுதியின் தெற்கே அமைந்துள்ள ஒரு பெரும் மணற்கல் பாறையே இது. அலிசு ஸ்ப்றிங்சு நகரிலிருந்து தென்மேற்கே 450 கி.மீ. (280 மைல்) தூரத்தில் உள்ளது. யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியக் களங்கள் பட்டியலில் இப்பாறை இடம்பெற்றுள்ளது.

இடத்திற்கேற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தியைபோல் தட்பவெப்ப நிலைக்கேற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் குன்று இது. இதனால் இது பச்சோந்திக் குன்று என்றும் அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் வாழும் அனங்கு இன பழங்குடிகளுக்கு உலுரு ஒரு புனிதமான இடமாகக் கொள்ளப்படுகிறது. முழுவதும் மணற்பாறைகள் மற்றும் சிறு சிறு கற்களால் உருவான பாறைகளாலானது இக்குன்று. முட்டை வடிவம் கொண்ட இப்பாறையின் அடிவாரத்திலுள்ள குகைகளில் மிகப் பழைமையான பழைய ஓவியங்களும் செதுக்கப்பட்ட சில உருவங்களும் உள்ளன.

ஏயர்சு குன்று உலகிலேயே தனிக் குன்றாக இருக்கும் மிகப்பெரிய பாறைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இது 338 மீற்றர் உயரமும் அடிப்பாகத்தில் 10 கி.மீ. அகலமும் கொண்டது.

பச்சோந்திக் குன்று 1873இல் டபிள்யு.ஜி.கோஸி என்ற ஒரு ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது ஹென்றி ஏயர்சு என்பவர் அவுஸ்திரேலியாவின் பிரதமராக இருந்ததால் அவர் பெயரால் இந்தக் குன்று ஏயர்ஸ் பாறை என அழைக்கப்பட்டது. உண்மையில் இந்தப் பாறை சிவப்பு நிறம் கொண்டதாகும். சூரிய உதயத்தின்போதும், மறைவின்போதும் இதன் நிறம் மாறுகிறது. சூரியன் உதிக்கும்போது அதன் கிரணங்கள் இதில் பட்டு ஊதா மற்றும் அடர்ந்த சிவப்பு நிறத்தில் தக தக என எரிவதுபோல் தோற்றமளிக்கும். இதேபோல், சூரியன் மறையும்போது ஊதா நிறம் இதில் படிந்திருப்பதைப் பார்க்கலாம். காலையிலிருந்து மாலைவரை சூரியனின் வெப்பநிலை மாற மாற இதன் நிறங்களும் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு, ஊதா என மாறிக்கொண்டே இருக்கும்.



இந்தப் பாறைக்கு அருகில் மவுன்ட் ஓல்கா தேசியப் பூங்காவை அவுஸ்திரேலிய அரசு அமைத்துள்ளது. இந்தப் பாறையையும், பூங்காவில் உள்ள கங்காரு, பன்டிகூட்ஸ் போன்ற பல அரிய விலங்குகளையும் காண உலகெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் வருகின்றனர்.



# சீனா உருவாக்கியுள்ள செயற்கை சூரியன்



நமது பள்ளிப் பருவகாலத்தில் ஸ்கெட்ச் பென்சில்களில் வெள்ளை நிறத்தையும் வைத்திருப்போம். அந்த வெள்ளை நிற பென்சில் எதற்காக என்று அதை உருவாக்கியவர்களுக்கும் தெரியாது நமக்கும் தெரியாது.

ஏறக்குறைய அதே கதைதான் சீனாவால் உருவாக்கப்பட்டுள்ள செயற்கை சூரியனின் பயன்பாடும். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்கு மேலான வளர்ச்சியை எட்டிவிட்டதாக காட்டுவதற்கு உருவாக்கப்பட்டதாக இருக்கலாம்.

அணுக்கரு இணைவு முறையில்தான் சீன தேசிய அணுசக்தி கழகத்தால் Experimental Advanced Superconducting Tokamak (EAST) என்ற பெயரில் செயற்கை சூரியன் உருவாக்கப்பட்டது. அணுக்கரு இணைவு. செயல்முறையில் இரு சிறு அணுக்கள் ஒரே அணுவாக இணைக்கப்படும். இதிலிருந்து வெளிப்படும் ஆற்றலானது அணுக்கரு பிளவின்போது வெளிப்படும் ஆற்றலைவிட 100 மடங்கு அதிகமாக இருக்கும். இந்த முறையில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அணுக் கதிர்வீச்சு எதுவும் வெளிப்படாது. சூரியன் இயங்குவது இந்த முறையில்தான். ஒவ்வொரு நொடியும் 620 மில்லியன் மெட்ரிக் தொன் அளவு ஹைட்ரஜனை இணைத்து 606 மில்லியன் மெட்ரிக் தொன் அளவு ஹீலியத்தையும் தேவையான வெப்பத்தையும் வெளியேற்றிக்கொண்டி ருக்கிறது.

20 விநாடிகளுக்கு, “செயற்கை சூரியன்” 288 மில்லியன் டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலையை அடைந்தது என்று சீன அரச ஆதரவு ஊடகமான குளோபல் ரைம்ஸ் செய்தி வெளியிட்டது. இது சூரியனைவிட பத்து மடங்கு வெப்பமாக உள்ளது.


கடந்த ஜூன் 4ஆம் திகதி சீனாவின் குளோபல் ரைம்ஸ் செயற்கை சூரியனின் பயன்பாடு என்று பின்வரும் கருத்தை வெளியிட்டது.

சோதனை உலைகளின் முக்கிய குறிக்கோள், சூரியனைப்போன்ற அணு இணைவை உருவாக்குவதும், கடலிலிருந்து டியூட்டீரியத்தைப் பயன்படுத்தி நிலையான தூய்மையான ஆற்றலை வழங்குவதுமாகும்

இதில் டியூட்ரியம் என்றால் என்ன?

ஜியாமென் பல்கலைக்கழகத்தின் எரிசக்தி பொருளாதார ஆராய்ச்சிக்கான சீன மையத்தின் இயக்குனர் லின் போக்வியாங் செயற்கை சூரியன் பற்றி கூறுகையில், ‘‘ஓர் உலை அதன் சோதனை நிலைகளிலிருந்து வெளிவர பல தசாப்தங்களாகும்.”

முன்னதாக 2020ஆம் ஆண்டில், தென்கொரியாவின் Korea Superconducting



Tokamak Advanced Research (KSTAR) உலை 100 மில்லியன் டிகிரி செல்சியஸுக்கு மேல் பிளாஸ்மா வெப்பநிலையை 20 விநாடிகளுக்கு தக்கவைத்து சாதித்தது. எனவே, சீனாவின் முயற்சி இரண்டாவதுதான்.

ஏற்கனவே மாவோ சீனாவை ஆண்ட காலத்தில் தானிய விளைச்சல் பற்றாக்குறைக்கு காரணம் அவற்றை சாப்பிடும் குருவிகள்தான் என்று சொல்லி முட்டாள்தனமான முறையில் கோடிக்கணக்கான பறவைகளையும் குருவிகளையும் அழித்தார்கள். அதன் விளைவாய் செயற்கை பஞ்சம் ஏற்பட்டு ஐந்து கோடிக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இது செயற்கையான மனித இனப்படுகொலை. பின்னர்தான் தெரிந்தது தானியங்களை சாப்பிடும் சிறு பூச்சிகளை சாப்பிட்டு அந்தக் குருவிகள் சீன விவசாயத்துறைக்கு பெரும் நன்மைதான் செய்தன என்று.

அதிலிருந்து சீனா இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்தி பாடம் கற்கவில்லை என்றே தோன்றுகிறது. இரவு இரவாக இருக்கும்வரைதான் இயற்கை இயற்கையாக இருக்கும்.




**எந்த நேரமும் சமூக வலைத்தளங்களில் வலம் வருபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ச.நவனீதரன் - பெல்மடுல்ல*




இல்லத்தில் நடக்கும் பிரச்சினைகளை இணையத்தில் கொட்டாதீர்கள்.
இது வீடில்லை, வீதி என்பதை மறக்காதீர்.

உறவுகள் காயப்படுத்தினால் வீட்டோடு போகும் - ஆனால், இணையத்தில் காயப்படுத்தினால் நாட்டு செய்தியாக மாறும்.

**தேமல் இல்லாமல் போவதற்கு ஏதாவது மருந்து சொல்ல முடியுமா?**

*கருணாகரன் ஜெயந்தன் - தலவாக்கலை*

வெள்ளைபூண்டை வெற்றிலை சேர்த்து நன்கு அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமாகும்.

**கஷ்ட காலங்களில் உறவுகள் கை கொடுக்குமா...?**

*சிவநேசன் கவிந்தன் - இங்கிரிய*

கஷ்டத்தை பார்த்து நாம் கரம்கொடுத்த எந்தவொரு உறவும் நாம கஷ்டப்படும்போது திரும்பிக்கூட பார்க்காது.

**தமிழராக பிறந்து தமிழ் பேச மறுக்கும் சிலரைப் பற்றி என்ன நினைக்கிறிர்கள்?**

*கிருஷ்ணகாந்த் கிருபாஷினி - கொட்டகலை*

தடுக்கி விழுந்தால் மட்டும் - அ, ஆ.

சிரிக்கும்போது மட்டும் - இ, ஈ.

சூடு பட்டால் மட்டும் - உ, ஊ.

அதட்டும்போது மட்டும் - எ, ஏ.

ஐயத்தின்போது மட்டும் - ஐ

ஆச்சரியத்தின்போது மட்டும் - ஒ, ஓ.

வக்கனையின்போது மட்டும் - ஔ

விக்கலின்போது மட்டும் - ஃ

என்று தமிழ் பேசி மற்ற நேரங்களில் வேற்றுமொழி பேசும் தமிழரிடம் மறக்காமல் சொல்லுங்கள் உங்கள் மொழி தமிழ் மொழியென்று.

**அப்துல் கலாமின் வரிகளில் குறும்பனுக்கு பிடித்தது?**

*வி. துலக்ஷிகா - குண்டசாலை*



எத்தனையோ வரிகளை சொல்லலாம். ஆனாலும் நான் ஒன்றை சொல்கிறேன். அதிகாலை நீ நினைத்த நேரத்தில் எழுந்துவிட்டாலே போதும்,
தோல்விகள் உன்னைவிட்டு ஒதுங்கிக்கொள்ளும்.

**உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது?**

*எப்.எம்.ரிஷானா - தல்துவ*


வொஷிங்டன் D.C. (அமெரிக்கா)

**இதை மட்டும் மறக்காதீர்கள்**

- ★ பெண் குழந்தைகள் யாருடைய மடியிலும் அமரக்கூடாது என்று சொல்லிக்கொடுங்கள்.
- ★ 2 அல்லது 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பிற மனிதர்கள் முன் உடை மாற்ற அனுமதிக்காதீர்கள்.
- ★ குழந்தைகளிடம் இது உன்னுடைய கணவன் என்றோ இது உன் மனைவியாக வரப்போகின்றவர் என்றோ பேசாதீர்கள்.
- ★ குழந்தைகள் விளையாடும்போது உங்களது பார்வை அவர்கள் மீது இருக்கட்டும். அவர்கள் என்ன விளையாடுகிறார்கள் என்பதிலும் கருத்தாக இருங்கள்.
- ★ ஒருபோதும் உங்களுடைய துணையின்றி அலைபேசியில் எதையும் அவர்களை கண்டுகளிக்க அனுமதிக்காதீர்கள்.
- ★ உங்கள் குழந்தையால் சரியாக பொருந்தியிருக்க முடியாத நபரை ஒருபோதும் சந்திக்க அனுமதிக்காதீர்கள். அல்லது குழந்தையை அவரிடம் செல்வதற்கு அனுமதிக்காதீர்கள்.




**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**




தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

# கணவர்கள் விற்பனைக்கு உண்டு



அமெரிக்காவில் ஓர் ஊரில், கணவர்கள் விற்கப்படும் கடை திறக்கப்பட்டது. அந்தக் கடை வாசலில் கடேயின் விதிமுறைகளின் பலகை இருந்தது. அதில் எழுதியிருந்தது...

1. கடைக்கு ஒரு தடவைதான் வரலாம்.
2. கடையில் மொத்தம் 6 தளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தளத்திலும் இருக்கின்ற ஆண்களோட தகுதிகள் மேல போகப்போக அதிகமாகிக்கொண்டே போகும்.
3. ஒரு தளத்திலிருந்து மேலே சென்றுவிட்டால் மறுபடியும் கீழே வர முடியாது. அப்படியே வெளியேதான் போகவேண்டும்.

### இதுதான் அந்த விதிமுறைகள்

இதையெல்லாம் படித்து பார்த்துவிட்டு, ஓர் இளம்பெண் கணவர் வாங்க கடைக்கு வந்தார்.
“கணவர் வாங்குவதென்பது காய்கறி வாங்குவது போன்ற காரியமல்லவே என்று நினைத்துக்கொண்டு கடையின் உள்ளே நுழைந்தார்.
முதல் தளம் அறிக்கை பலகையில்,
இந்தத் தளத்தில் இருக்கும் கணவர்கள்
“வேலை உள்ளவர்கள்,
கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்”.
இது என்ன ஒரு அடிப்படை தகுதி என்று எண்ணிக்கொண்டு மேலே செல்கிறார்.
இரண்டாம் தளம் அறிக்கை பலகையில்,
“இந்தத் தளத்தில் இருக்கும் கணவர்கள்
வேலை உள்ளவர்கள்,
கடவுள் நம்பிக்கை உளளவர்கள்”
மேலும்,
“குழந்தைகள் மேல் அன்பு செலுத்துபவர்கள்”
இதுவும் என்ன ஓர் அடிப்படைத் தகுதி என்று எண்ணிக்கொண்டு மேலே செல்கிறார்.
மூன்றாம் தளம் அறிக்கை பலகையில்.
“இந்தத் தளத்தில் இருக்கும் கணவர்கள்
வேலை உள்ளவர்கள்,
கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்,
குழந்தைகள் மேல் அன்பு செலுத்துபவர்கள்”
மற்றும்
“வசீகரமானவர்கள்”
அந்த இளம்பெண் “வசீகரமானவர்கள்” என்பதை பார்த்ததும், “ஆஹா.. மூன்றாவது தளத்திலேயே இவ்வளவு தகுதிகள் இருந்தால், மேலே போகப்போக இன்னும் என்ன எல்லாம் இருக்குமோ” என்று நினைத்துக்கொண்டு மேலே செல்ல முடிவெடுத்தார்.
நாலாவது தளம் அறிக்கை பலகையில்,
“இந்தத் தளத்தில் இருக்கும் கணவர்கள் வேலை உள்ளவர்கள்,
கடவுள் நம்பிக்கை உளளவர்கள்,
குழந்தைகள் மேல் அன்பு செலுத்துபவர்கள், வசீகரமானவர்கள்”
மற்றும் “வீட்டு வேலைகளில் மனைவிக்கு
உதவிசெய்யும் விருப்பம் உளளவர்கள்.”
இதை விட வேறு என்ன வேண்டும். நல்ல குடும்பம் அமைக்கலாமே...?
கடவுளே... மேல என்ன இருக்கு என்று தெரிந்தே ஆகணும்.
அப்படி என்று முடிவு செய்துவிட்டு, அடுத்த தளத்திற்கு சென்றார்.
ஐந்தாவது தளம் அறிக்கை பலகையில்,
“இந்தத் தளத்தில் இருக்கும் கணவர்கள், வேலை உள்ளவர்கள், கடவுள் நம்பிக்கை உளளவர்கள், குழந்தைகள் மேல் அன்பு செலுத்துபவர்கள், வசீகரமானவர்கள், வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவிசெய்யும் விருப்பம் உளளவர்கள்”
மற்றும்
“மிகவும் ‘ரொமாண்டிக்’ ஆனவர்கள்”
அவ்வளவுதான். அந்தப் பெண்ணால் தாங்க முடியவில்லை.
சரி இங்கேயே யாரையாவது தெரிவுசெய்யலாம் என்று நினைத்தாலும் இன்னொரு தளம் பாக்கி இருக்கின்றதே.
அங்கே என்ன எப்படிப்பட்ட கணவர்கள் இருப்பார்கள் என்பதை பார்க்காமல் எப்படி முடிவு செய்வது....???
சரி மேலே சென்று பார்த்துவிடலாமே என்று முடிவு செய்துவிட்டு ஆறாவது தளத்திற்கு செல்கிறார்.
ஆறாவது தளம் அறிக்கை பலகையில்,
“இந்தத் தளத்தில் கணவர்கள் யாரும் இல்லை. வெளியே செல்லும் வழி மட்டுமே உள்ளது. இந்த தளத்தை அமைத்ததற்கு காரணம்,
பெண்களை திருப்திப்படுத்தவே முடியாது என்பதை நிரூபிக்கத்தான், எங்கள் கடைக்கு வந்தமைக்கு நன்றி,
கீழே படிகளில் இறங்கவும்”.
என்று எழுதியிருந்தது.

# கலைவாணரின் சாமர்த்தியம்



ஒரு தடவை ஒருத்தர் கலைவாணர் கிட்டே வந்து,
“ஐயா... என் குழந்தை செத்துப்போச்சு!”ன்னு சொல்லி அழுதார். உடனே இவரு அவருக்கு நூறு ரூபா பணம் கொடுத்து “இந்தாங்க... அடக்கம் செய்யுங்க”ன்னு சொல்லி அனுப்பிவைச்சார்.

ஒரு வருசம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். கலைவாணர் மறந்திருப்பார்ங்கற நினைப்பிலே “அண்ணே... என் குழந்தை இறந்து போச்சண்ணே”ன்னார்.

இவரு மறுபடியும் நூறு ரூபா கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பினார்.

ஏழெட்டு மாசம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். அவரு வாயைத் திறக்கறதுக்கு முன்னாடியே இவரு நூறு ரூபாவை அவரு கையில வைத்து.


“போன ரெண்டு தடவைதான் குழந்தை செத்துப்போச்சு

இந்தத் தடவையாவது சாகாமக் காப்பாத்திடுங்க”ன்னார்.

அதுக்கப்பறம் அந்த ஆள் வர்றதே இல்லையாம்.

அவளை நினைத்து கவிதை எழுதி அவளிடம் கொடுத்தேன்.
வாங்கி படித்துவிட்டு கேட்டா பாரு ஒரு கேள்வி
“அண்ணா நீங்க யாரையாவது லவ் பண்றீங்களா ?
நான் அப்படியே சாக் ஆகிட்டன்.





சொன்னேன்..!
நீயெல்லாம் அக்கா தங்கச்சி கூட பொறக்கலையானு கேக்குறா..!
கொழுந்தியாவ பாக்க அம்புட்டு ஆசையானு கேட்டேன்.
ஒரு பொண்ணப்பார்த்து உன்ன புடுச்சிருக்குனு



நமக்கு வர மனைவி வெள்ளையா இருக்கனும்கிறது முக்கியமில்லை.
கடைசிவரைக்கும் தொல்லையா இருக்கக்கூடாது. அதுதான் முக்கியம்.

“உங்க வீட்ல யாரோட கை ஓங்கி இருக்கும்? உன் கையா? உன் மனைவி கையா?”
“என் மனைவி கை எப்பவும் ஓங்கி இருக்கும். என் தலை வீங்கி இருக்கும்.”










# குறும்பா தவிப்பு



குறும்பா
நடு இரவில் கவிதை
வந்து ஊறும்
நயமுடனே சத்தங்
கொண்டு ஏறும்
கொடுமைகளை
நினைக்க மனம்
கொதித் தெழுந்து
எரிமலையாய்
சுடுங் கவிதை பீறி
வந்து சீறும்!

ஒலுவில் எஸ். ஜலால்டீன்.

# கணவர்களுக்கான அட்வைஸ்!



**பொண்டாட்டி**
**சுவற்றில் எறியும் பந்து மாதிரி**
**எவ்வளவு வேகமாக எறியுறோமோ**
**அவ்வளவு வேகமாக திரும்பி**
**வந்து நம்மை தாக்கும்...**
**ஆகவே!**
**சகல கணவன்மார்களுக்கும்**
**தெரிவிப்பது என்னவென்றால்**
**பொண்டாட்டி திட்டும்போது**
**வர்ற கோபத்தை அடக்க**
**பழகிக்கொள்ளுங்கள்...**
**இல்லாவிடில்**
**அந்தக் கோபம்**
**தீஞ்சு போன தோசையாகவும்**
**உப்பில்லாத சாம்பாராகவும்**
**திரும்பி வந்து நம்மை தாக்கும்...**

**சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.**

தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91,
விஜேராம மாவத்தை,
கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி:
thamilandharbar@yahoo.com








காரைக்கவி

# சீத்துவக்கேடு 142

நாங்கள் விளக்கு விளக்கிறது எண்டில்லை, கோயில் கூட்டுறது, கழுவுறது, வீதியை கூட்டித் துப்புரவாக்கிறது, பூந்தோட்டத்துக்கு தண்ணி விடுறது, பூ பிடுங்கிறது, சாமி காவுறது எண்டு கோயிலிலை செய்யக்கூடிய வேலையள் எல்லாம் சந்தோசமா செய்வம். அதில ஒரு திருப்தி இருந்தது.

எங்கட பிள்ளையார் கோயிலிலை திருப்பணி வேலை நடக்கிற நேரங்களில எல்லாம் சிற்பிமாரோட - மேசன்மாரோட - ஆசாரிமாரோட இரும்பு வேலை செய்யிறவை பெயின்ட் அடிக்கிறவை எண்டு எல்லாரோடையும் எடுபிடியள் மாதிரி நிண்டு செய்யக்கூடிய தொட்டாட்டு வேலையள் எல்லாம் செயதிருக்கிறம்.

நாங்கள் உப்பிடி வேலை செய்யேக்கை கோயில் ஐயர் அவல், கடலை, புக்கை, வடை, மோதகம் எண்டு ஒவ்வொருநாளும் ஒவ்வொருவிதமா எல்லாம் வைச்சுத் தருவார்.

கோயில் மணியகாரனும் வேலை செய்யிற பெடியளுக்கு உதுகள் எல்லாம் வைச்சு குடுக்க வேணும் எண்டு ஐயரிட்டை சொல்லுவார்.

எங்கட ஆச்சி, ஒருத்தன் வாழ்க்கையில முன்னேறவேணும் எண்டால் அவனுக்கு அருள், தெருள், பொருள் எண்ட மூண்டும் வேணும் எண்டு சொல்லுவா.

அருள் எண்டது கடவுளிட்டை இருந்து வந்தா அது திருவருள். எங்கடை வாத்திமாரிட்டை இருந்து வந்தா அது குருவருள். ஒரு மனுசனுக்கு இந்த ரெண்டும் வேணும் எண்டுவா. அருள் ஒழுங்காக் கிடைச்சா தெருள் எண்ட அறிவு கிடைக்கும் எண்டா.

உதைக் கேட்டுப்போட்டு அறிவு எண்ட உடன கற்ற அறிவு, பெற்ற அறிவு, உற்ற அறிவு எண்டு மூண்டு எண்டு பெரியவை சொல்லுகினம் எண்டு சொன்ன அப்பு,

புத்தகங்களைப் படிச்சு வாற அறிவு கற்ற அறிவு எண்டுவினம். உலகத்தைப் பாத்து அனுபவிச்சு வாற அறிவை பெற்ற அறிவு எண்டு சொல்லுவினம்.

அதமாதிரி உந்த கற்ற அறிவு, பெற்ற அறிவு ரெண்டையும் பாவிச்சு சிந்திச்சு ஆஞ்சு வாற அறிவுதான் பகுத்தறிவு எண்டு சொல்லுற. இல்லாட்டில் ஆறாம் அறிவு எண்டு சொல்லுற உற்ற அறிவு எண்ட அப்பு ஒரு மனுஷனுக்கு உந்த மூண்டு அறிவும் வேணும் எண்டுவார்.

சிலருக்கு புத்தக அறிவு மட்டும் இருக்கும் உலக அறிவு இருக்காது. சிலருக்கு உலக அறிவு இருக்கும். புத்தக அறிவு இருக்காது.

சிலருக்கு உந்த ரெண்டு அறிவும் இருக்கும். ஆனால், முக்கியமா இருக்கவேண்டிய பகுத்தறிவு இருக்காது. உப்பிடியான ஆக்களுக்கும் மிருகங்களுக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது எண்டார் அப்பு.

உதில குருவருளும் திருவருளும் இல்லை எண்டால் எந்த அறிவு எண்டாலும் கிடைக்காது எண்ட ஆச்சி, வாத்திமாரை மதிக்க வேணும். அப்பதான் அவையின்ரை அருள் கிடைக்கும் எண்டா.

உடன அப்பு, வாத்திமாரும் பெடி பெட்டை மதிக்கிற மாதிரி இருக்கவேணும். ஆனால், கன பேர் அப்பிடி இல்லை கண்டியோ எண்டுவார்.

உங்க எத்தினை வாத்திமார் பெடியளை விட்டு சுருட்டு, சிகரெட்டு எண்டு வாங்குவிப்பினம். ஏன் கள்ளுகூட வாங்குவிக்கினம் எல்லே.

ஏன் கனக்கப் போவான். சில வாத்திமார் வளந்த பெடியளோட ஒண்டா இருந்து குடிக்கிறது, புகைக்கிறது எண்டும் எல்லே நடக்குது. பிறகு என்னண்டு பெடியள் மதிப்பாங்கள் எண்டார்.

உங்க சில பள்ளிக்கூடங்களிலை ஸ்டாப் ரூம் பக்கம் போவே ஏலாது. ஒரே சுருட்டு நாத்தமும் சிகரெட் நாத்தமும் வயித்தக் குமட்டிக் கொண்டு வரும் எண்ட அப்பு, ஏன் உங்க சில வாத்திமார் வெறியிலை வந்தும் எல்லே பாடம் எடுத்தவை.

அதமாதிரி பள்ளிக்கூடத்தால நேர வீட்டை போகாம கள்ளுக் கொட்டிலுக்குப் போய் ஒழுங்கை வழியை விழுந்தும் எல்லே கிடந்தவங்கள் எண்ட அப்பு, பெடியள் பெட்டையள் மதிக்க வேணும் எண்டால் வாத்திமாருக்கு முதலிலை டிசிப்பிலின் முக்கியம் எண்டு ஒரு பெரிய பிரசங்கமே நடத்தி முடிச்சார்.

உடன ஆச்சி, சரி சரி உப்பிடி ரெண்டொருத்தர்தான் இருந்தவை. மற்றப்படி மற்றவை எல்லாம் வலு ஒழுக்கமாத்தான் இருந்தவை.

அவையைப் பாத்தா கை எடுத்துக் கும்பிடவேணும்போல இருக்கும். ஏன் காலிலை விழுந்து கும்பிடவேணும்போல இருக்கும் எண்டா.


அவை தங்களிட்டை நம்பி வந்த பிள்ளையளை தங்கட சொந்தப் பிள்ளைபோலத்தான் பாவிக்கிறவை. ஏன் சிலர் தங்கட சொந்தப் பிள்ளையளை விடவே கூடக் கவனம் எடுப்பினம்.

பெடி பெட்டைக்கு ஒழுங்காப் பாடம் எடுக்கிறது மட்டும் இல்லை, அவையின்ரை ஒழுக்கத்திலையும் கவனமா இருப்பினம்.

அவையின்ரை நல்லது கெட்டதுகளிலை எல்லாம் வலு கவனமா இருப்பினம் எண்டா ஆச்சி.

**(தொடரும் )**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம்**
**ஜோதிட திலகம் சிவஸ்ரீ**
**வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

### மேட ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் இருக்காது. பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைய வாய்ப்புள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். முக்கிய முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். மற்றவர்களுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். குடும்பத்தில் கலகலப்பும் உற்சாகமுமான சூழ்நிலை காணப்படும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 2, 4

### ரிஷப ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருந்தாலும் செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். குடும்பத்தைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டிலேயே தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் கிடைக்கும் என்பதால் பிரச்சினை இருக்காது. வார முற்பகுதியில் வீட்டில் பராமரிப்புப் பணிகள் ஏற்படும் என்பதால் உடல் அசதி உண்டாகும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 1, 2
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 1, 6

### மிதுனராசி அன்பர்களே!

எதிலும் சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம். புதிய முயற்சிகளை கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். நண்பர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அதிருப்தியை ஏற்படுத்தும். பொறுமை அவசியம். வாரப் பிற்பகுதியில் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு போதிய அளவு பண வசதி கிடைப்பதால் மனநிறைவு உண்டாகும். கணவருடன் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் சற்று பொறுமையாக இருப்பது அவசியம்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 1, 5

### கடகராசி அன்பர்களே!

பொருளாதார வசதி சுமாராகத்தான் இருக்கும். அதே நேரம் செலவுகளும் குறைவாகவே இருக்கும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இழுபறியான நிலையே காணப்படும். தடைப்பட்டுவந்த சுப நிகழ்ச் சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். முக்கியமான முடிவுகள் எடுக்கும்போது குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவது நல்லது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சிரமம் இருக்காது. புகுந்த வீட்டு உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். என்றாலும் சாதுர்யமாகச் சமாளித்துவிடுவீர்கள்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 2, 7

### சிம்ம ராசி அன்பர்களே!

வார முற்பகுதியில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். பணவரவுக்குக் குறைவிருக்காது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பெரியளவில் பாதிப்பு இருக்காது. வழக்குகளில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 29, 30
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 4, 6
சந்திராஷ்டம நாள்கள்: ஜூலை 1, 2, 3

### கன்னிராசி அன்பர்களே!

தேவையான பணம் இருப்பதால் செலவுகளை சமாளிப்பதில் பிரச்சினை இருக்காது. கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. வார முற்பகுதியில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது அவசியம். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு உற்சாகம் தரும் சம்பவங்கள் நடைபெறும். பிறந்த வீட்டிலிருந்து எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். புகுந்த வீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 29, 30
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 2, 7
சந்திராஷ்டம நாள்: ஜூலை 4

### துலாராசி அன்பர்களே!

பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை கனிந்துவரும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். வாரப் பிற்பகுதியில் தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திடீர் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் ஆதாயம் கிடைக்கும். அக்கம்பக்கத்தில் இருக்கும் தோழிகள் உதவிகரமாக இருப்பார்கள்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 1, 2, 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 6, 9

### விருச்சிக ராசி அன்பர்களே!

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு சொந்தம் கொண்டாடி வருவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருக்கவும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த கசப்பு உணர்வுகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 3, 5

### தனுசு ராசி அன்பர்களே!

திடீர்ச் செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டி வரும். சிலருக்கு சிறியளவில் மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிறர் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளைகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் அதிகரித்தாலும் போதிய பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். கணவரின் முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்து அவரை உற்சாகப்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 7
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 2, 6

### மகர ராசி அன்பர்களே!

ஓரளவுக்கு அனுகூலப் பலன்கள் ஏற்படும் வாரம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். கடன்கள் விடயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பிள்ளைகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்கள் மூலம் கேட்கும் தகவல் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தாய்வழி உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சிரமம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய நேரிடும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 12
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 3, 9

### கும்ப ராசி அன்பர்களே!

திட்டமிட்டுச் செலவு செய்யவேண்டிய வாரம் இது. அவசியத் தேவை என்றாலும்கூட கடன் வாங்குவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கும். பேச்சினால் பிரச்சினைகள் வரக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 4
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 2, 5

### மீன ராசி அன்பர்களே!

வருமானத்தைப் பொறுத்தவரை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் ஆதாயம் ஏற்பட்டாலும், சில பிரச்சினைகளும் ஏற்படும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வழக்குகளில் பொறுமை அவசியம். தந்தையுடன் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புள்ளதால், சற்று பொறுமையாக இருப்பது நல்லது. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இழுபறியான நிலையே காணப்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகளால் சற்று சிரமப்படவேண்டியிருக்கும். அக்கம்பக்கத்தில் இருக்கும் பெண்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

அதிர்ஷ்டம் தரும் நாட்கள்: ஜூலை 28
அதிர்ஷ்டம் தரும் எண்கள்: 1, 7



தமிழன் தொடர்கதை



# மகள் தூங்குகிறாள்

## அத்தியாயம் -29

ஆனாலும், ரொமேசிகா நிசாந்தவை நினைத்துத் தவித்துக் கொண்டிருந்த போதிலும், அவள் செய்து கொடுத்த சத்தியம் மற்றும் தனது சூழல் காரணமாக நிசாந்தவை தவிர்த்துக் கொண்டாள்.

அவளின் அந்த திடீர் மாற்றத்தைக் கண்ட நிசாந்த மிகுந்த மனவேதனைப்பட்டதுடன், நிறையவே மனமும் உடைந்தும் போனான்.

''ரொமேசிகா... உனக்கு என்ன ஆச்சுது?

எதுக்கு நீ இப்படி என்னோட பேசாமலிருக்கே?

என்மேலே ஏதாவது கோபமா?

இல்லாட்டி நான் ஏதாவது தவறுகள் செய்தேனா?

எதுவாயிருந்தாலும் பரவாயில்லை. என்னிடம் சொல்லு ரொமேசிகா..!

அதை என்கிட்டே தயங்காமல் சொல்லு.

அது எதுவா வேண்டுமானாலும் இருந்திட்டுப் போகட்டும்.

எதுவாகவும் இருக்கட்டும். எப்படியிருந்தாலும் பரவாயில்லை ரொமேசிகா..!

அதை என்கிட்டே சொல்லு..!

ஆனால், இப்படி மௌனமாக இருக்காதே..!

அது என்னை அணுவணுவாகக் கொல்லுது ரொமேசிகா..!''

என்று எவ்வளவுதான் நிசாந்த கெஞ்சிய போதிலும், மன்றாடிய போதிலும் அவை அனைத்திற்கும் ரொமேசிகாவின் பதில் மௌனமாகவேதான் இருந்தது.

இதனால் நிசாந்த ரெம்பவுமே மனம் நொந்து போனான். ரொமேசிகாவை உயிரை விட அதிகமாக நேசித்த நிசாந்த விரக்தியின் உச்சக்கட்டத்திற்கே சென்று விட்டான்.

அதிலும் என்ன கொடுமையென்றால் ரொமேசிகாவின் திடீர் மாற்றத்திற்கான காரணமும் தெரியாமல், அவளோடு எதுவுமே கதைக்கவும் முடியாமல், என்ன செய்வதென்று ஒன்றும் தெரியாமல், தன் தொழிலையும் கூட ஒழுங்காக செய்யவும் முடியாமல், ஒரு பைத்தியக்காரனைப்போல் ஆகிவிட்டான் நிசாந்த.

ரொமேசிகா நிசாந்தவின் நிலைமையை அறிந்து மிகவும் வேதனைப்பட்ட போதிலும், அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

தான் அம்மாவிடம் செய்து கொடுத்த உறுதியான சத்தியத்தை மீறி அவளால் எதுவுமே செய்யவும் முடியவில்லை. அவனோடு பேசவும் முடியாமல், ஏன் அவனைப் பற்றி நினைக்கவும் கூட முடியாமல் மிகவும் மனவேதனைக்குள் தள்ளப்பட்டாள் ரொமேசிகா.

இதனால் ரொமேசிகாவும் கூட மனதளவில் அதிகமாக பாதிக்கப்பட்டாலும், அது தனது உயர்தரப் பரீட்சையில் தாக்கம் செலுத்திவிடும் என்கின்ற அச்சத்தில் இயன்ற அளவுக்கும் நிசாந்தவின் நினைவை விட்டுத் தவிர்த்தே வந்தாள்.

''இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது பரீட்சைக்கு. இவ்வளவு காலம் பொறுத்தாச்சு. இன்னொரு மாதம் பொறுக்க முடியாதா..?

சரி, அதுவரைக்கும் ஒருவாறு தாக்குப் பிடிப்போம்..!''

என்று தனது மனதிற்குள் சொல்லிக்கொண்ட ரொமேசிகா அதன்மூலம் தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

எப்படியோ பல போராட்டங்களின் மத்தியில் ஒருசில நாட்கள் சென்றன. ரொமேசிகாவின் பரீட்சைக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. அதனால் அவள் மிகவும் மும்முரமாக படிப்பில் கவனம் செலுத்தினாள்.

ஆனால், இன்னொரு பக்கத்தில் நிசாந்த, ரொமேசிகாவின் பிரிவினால் வெறுப்புணர்ச்சியின் உச்சக்கட்டத்திற்குச் சென்றிருந்தான்.

ஒரு கட்டத்தில் அதற்குமேல் கொஞ்சமும் பொறுக்க முடியாத நிலைக்கு அவன் தள்ளப்பட்டான். சாவு வந்தாலும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அவன் மனநிலைமை மாறியிருந்தது.

அந்த நாள் இரவு நிசாந்த உருண்டு, புரண்டு படுத்தாலும் அவனுக்கு உறக்கம் வர மறுத்தது. எப்படியும் ஒரு முடிவெடுத்தாக வேண்டும் என்கின்ற ஒரு உறுதியான நிலைக்கு வந்தான்.

இதேவேளை, எப்படியான முடிவெடுப்பது என்று சிந்தித்தான்.

''அவள் இல்லாமல் இனிமேல் என்னால் வாழ முடியாது.

ஒன்று, அவளுடன் சேர வேண்டும். இல்லையேல், மண்ணில் சாய வேண்டும்.

அதனால் தீர்க்கமான ஒரு முடிவினை நான் இன்றைக்கு எடுக்க வேண்டும்''

என்று தன்னுடைய மனதுக்குள் நிசாந்த புலம்பிக் கொண்டிருந்தான்.

கடைசியில் அவனது சிந்தனைக்கு நல்லதொரு முடிவும் கிடைத்தது.

அவனைப் பொறுத்தவரைக்கும் அது நல்ல முடிவாக இருக்கலாம்.

ஆனால், அது நல்ல முடிவா? அல்லது நரக முடிவா? என்பது இறுதியில்தான் தெரியும்.

ஆனாலும், ஒருவாறாக ஒரு இறுதி முடிவுக்கு வந்தான் நிசாந்த. அந்த முடிவை நிறைவேற்றிக் கொள்ள அவனுக்கு வாய்ப்பாக அமைந்தது. ஆம்..! எதிர்வரும் சனிக்கிழமை ரொமேசிகாவின் பிறந்தநாளாகும் என்பதால், தனது முடிவுக்கு அந்த நாளையே நிசாந்த தெரிவுசெய்திருந்தான் என்பது ரொமேசிகாவுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

''இன்னும் ஓரிரு நாட்களில் எனது இலட்சியமான பரீட்சை முடிந்துவிடும்.

அதற்கப்புறமாக என்னுடைய நிசாந்தவுடன் பேசிக் கொள்ளலாமே... அவன் என்னை தப்பாக நினைத்தானோ தெரியவில்லை.

இல்லையில்லை... அவன் அப்படியெல்லாம் நினைக்க வாய்ப்பில்லை.

அவன் என்னைப் பற்றி நன்கு புரிந்து வைத்திருக்கிறான்.

அதனால் பரீட்சை முடியும்வரை எனக்காக என் நிசாந்த காத்திருப்பான்''

என்ற தன்னுடைய நம்பிக்கையான எண்ணத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியிலிருந்தாள் ரொமேசிகா.

''எனது அம்மா, அப்பாவின் தியாகத்திற்கு பயனும் கிடைக்கப்போகிறது.

நான் அம்மாவிடம் செய்து கொடுத்த சத்தியத்திற்குக் கால எல்லையும் முடியப்போகிறது''

என்று மனதிற்குள் நிம்மதி கொண்டாள் ரொமேசிகா.

''நிசாந்த..! இன்னும் கொஞ்ச நாளைக்கு பொறுத்துக் கொள்.

உன்னைத் தேடிவந்து உன்னை அப்படியே கட்டிப்பிடித்து..! ச்சீ..! போடா..!''

என்று மனதிற்குள் பரீட்சை முடிந்து நடக்கப் போகும் நிகழ்வுக்காக இப்போதே தன்னுடைய மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள் ரொமேசிகா. நிசாந்த எடுத்திருக்கும் அந்த முடிவினை சற்றும் அறிந்துகொள்ளாமலேயே..!

அன்று சனிக்கிழமை என்பதாலும், பாடசாலை விடுமுறை என்பதாலும், ரொமேசிகாவும், அவளது தங்கையும் பாடசாலைக்குப் போகவில்லை.

ஆனாலும், அன்று தன்னுடைய பிறந்தநாள் என்பதையும் கூட மறந்துவிட்டு திங்கட்கிழமை எழுதப்போகும் அவளது இலட்சியங்களை நிறைவேற்ற வரப்போகும் பரீட்சைக்காக படித்துக் கொண்டிருந்தாள் ரொமேசிகா.

''ரொமேசிகா... என்ன புள்ள, நீ இன்னும் சாப்பிடயில்லையா..?

சாப்பாட்டை வைச்சிக்கிட்டு எவ்வளவு நேரமாய்தான் நானும் உனக்காக காத்துக்கிட்டிருக்கேன்''

என்று ரொமேசிகாவின் அம்மா அவளை அழைத்தபோதுதான் தான் இன்னும் சாப்பிடவில்லை என்பதும் கூட அவளுக்கு ஞாபகம் வந்தது.

''சரிம்மா...! கொஞ்சம் நில்லும்மா...

இன்னும் அஞ்சு நிமிடத்துல வந்திடுறேன் அம்மா... இன்னும் கொஞ்சம் மிகுதியிருக்கும்மா. அதை முடிச்சிட்டு வந்திடுறேன்'' என்றாள் ரொமேசிகா.

**தொடரும்...**

---

தமிழன் சிறுகதை

- ஸாலிஹ் அஸீம்



# சந்தேகம்

அதனை நினைத்துப் பார்க்கையில் அவனுக்கு வெறுப்பாயிருந்தது. எப்படிப் படுத்தாலும் உறக்கம் வராமல் தொல்லைப்படுத்தியது.

''எப்படி நம்புவது? நம்பாமலுமிருப்பது?

கல்யாணம் முடிந்து ஆறு மாதங்களில் சந்தேகப்பட்டால், உண்மையிலேயே அது நடந்திருந்தால் என்ன செய்வது?'' இப்படியெல்லாம் அவனின் மனம் ஆதங்கப்பட்டது.

நடந்து முடிந்த சம்பவத்தினை நினைவு நாற்காலியில் வைத்து அசைபோட்டான். அவன் ஒரு தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக வேலை பார்க்கிறான்.

அன்றைக்கும் வழமைபோல் வீட்டுக்கு வந்தான். வந்தவன் பாதணிகளை வாசற்படியில் கழற்றிவிட்டு உள்ளே செல்ல முற்பட்டபோதுதான் வழமைக்கு மாறாக வீட்டுக்குள்ளிருந்து 12 வயது மதிக்கத்தக்க ஒரு சின்னப்பையன் வெளியே ஓடினான்.

''யாரு இந்தப் பையன்?'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே உள்ளே போனான். அங்கே மனைவியின் கையில் ஒரு கடிதமிருப்பதையும், அவள் அக்கடிதத்தை தான் வருவதைக் கூட அறியாமல் மெய்மறந்து வாசித்துக் கொண்டிருப்பதையும் கண்டான். அதைக் கண்டவன்,

''ம்..! என்ன இது? நான் வந்ததையும் கவனிக்காமல் இவ்வளவு ஆர்வமாக வாசித்துக் கொண்டிருக்காளே..!

அப்படி என்னதான் அதுல இருக்குதுனு தெரியலயே'' என்று மனதிற்குள் நினைத்தவன்

''என்ன ஆர்வமாய் வாசிச்சிட்டிருக்கிறீங்க?'' என்றான்.

அவன் சொல்வதைக் கேட்டு சுய நினைவுக்கு வந்தவள்,

''ச்சே..! அப்படியெல்லாம் ஒன்னுமில்லைங்க. வேணுமுன்னா இந்தாங்கோ... படித்துப் பாருங்களேன்'' என்றபடி கையிலிருந்த கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

''ம்..! சரி தாங்க'' என்றபடி அதனை வாங்கி படிக்கத் தொடங்கினான்.

'என் இதய அறையில் உயிர் நாடியாக உலாவிக் கொண்டிருக்கும் இதயராணி லதாவுக்கு உயிர்க்காதலன் பிரதீப் எழுதுவது.

நாம் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் கசப்போடுதான் கழியும் கண்ணே..! கடைசியில் நீ அவனோடுதான் வாழ வேண்டிவரும். எனவே, பொறுத்தது போதும். துணிந்தெழு..! துணையாய் நானிருக்கிறேன். அச்சம் தேவையில்லை. மிச்ச சுவாசம் இருக்கும் வரைக்கும் வாழ்வதும், வீழ்வதும் நாமாகயிருக்கட்டும். மனதை கல்லறைக்குள் பூட்டி வாழ முடியாது. அன்பே..! துணிவோம். முயல்வோம். நலமாய் வாழ்வோம்.

நாளை நள்ளிரவு 12 மணிக்கு ஓட்டோவுடன் இளந்தை மரத்தடிக்கு வருவேன். அங்கே நீ நம்பிக்கையோடு ஆயத்தமாயிரு. இருவரும் சேர்ந்து எங்காவது போய் சந்தோஷமாய் வாழ்வோம்.

இப்படிக்கு உன் இதயத்தில் வாழும் இதயம் அன்புக் காதலன் பிரதீப்'

என்று அக்கடிதம் முடிந்திருந்தது.

அதனை வாசித்து முடித்த அவனால் யோசிக்கவே முடியவில்லை.

''அழுத்தமாக லதா என்றிருக்கிறதே..! அப்படியிருந்தும் சாதாரணமாகப் போகிறாளே..? யாரிவன் பிரதீப்..? என்னோட வாழ்க்கையில விளையாடுகிறானே... இவளை ஓடிப் போவோமுனு தைரியமாய் கூப்பிடுறானே...

இவளும் கொஞ்சமும் பயமில்லாமல் கடிதத்தையும் என்கிட்டயே தைரியமாக தந்திட்டு சாதாரணமாய் போறாளே...'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். பிறகு

''யாரிந்த பிரதீப்?'' என்றான்.

''யாருன்னு தெரிஞ்சிருந்தா அவனை சும்மா விட்டிருப்பேனா..? ரெண்டு கன்னமும் வீங்க நல்லா கொடுத்திருப்பேனே'' என்றாள்.

''அப்படின்னா அந்தக் கடிதத்தை தந்திட்டுப் போன பையங்கிட்டே கேட்டிருக்கலாமே யாருனு'' என்றான்.

''கேட்டிருப்பேங்க. ஆனா, அதனை பிரித்துப் பார்க்கும் முன்னாடியே அப்பையன் இந்த இடத்தை விட்டுப் போயிட்டானே...'' என்றாள்.

ஆனாலும், அவன் மனதிற்குள் சந்தேகப் பூச்சி குடையத் தொடங்கியது.

''எவ்வளவு உரிமையோடு லதான்னு எழுதியிருக்கான்..! இதுல உண்மையிருக்குமா?'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

''அவள் சொல்வது உண்மையாகவேயிருந்தால் எதற்கு கடிதத்தைக் கிழித்து வீசாமல் பத்திரப்படுத்தி வச்சிருக்காள்?'' என அவனது மனம் குழம்பியது.

''ரீ.....ங்'' என்ற கடிகார மணியின் சத்தம் கேட்டும் தாமதமாக உறங்கியதால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

''ஏங்க..! எழும்புங்கோ. நேரமாச்சுது வேலைக்குப் போகனுமே...'' என்றபடி மனைவி அவனை எழுப்பினாள்.

மிகுந்த சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தான். அவளைக் கண்டதும் கடிதம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

''என்ன இவள்..! அதைப்பற்றியே அலட்டிக் கொள்ளவில்லையே... ஒன்னும் நடக்காதது மாதிரி சாதாரணமாகவே இருக்கிறாளே..!'' என்று நினைத்துக் கொண்டவன் முகம் கழுவப் போனான்.

''இந்தாங்க...'' என்று காலைக் கோப்பியைக் கொடுக்க அதை வேண்டாவெறுப்பாகவே குடித்தான்.

''என்னங்க... நேற்றிலிருந்து பார்த்துகிட்டிருக்கேன். ஒரு மாதிரியாதான் இருக்கீங்க. என்னாச்சுது உங்களுக்கு?'' என்றாள்.

''ஒன்னுமில்லையே... ஒபீஸ் கணக்குல சின்ன தவறு நடந்துப் போச்சு. அது சரியா, பிழையானு தெரியவில்லை. அதுதான் மனசுக்கு ஒரே குழப்பமாயிருக்கு'' என்றான்.

''கணக்குல பிழையிருந்தால் அதைப் பார்த்து திருத்திக் கொள்ளனும். அதை விட்டுட்டு மனசைப் போட்டு குழப்பக்கூடாது. கடைசியிலே இருக்கிற நிம்மதியும் இல்லாமல் போயிடும்'' என்றாள்.

''நிம்மதியில்லாம போனதே உன்னாலதான். இதற்குள்ளே அறிவுரை வேறு'' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

''சரி... நான் வேலைக்குப் போயிட்டு வாரேன்'' என்றபடி விடைபெற்றவனிடமிருந்து சந்தேகம் விடைபெற்றிருக்கவில்லை.

அன்று சனிக்கிழமையென்றாலும் பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்ஸுக்காக நிறைய பேர் காத்துக் கொண்டிருந்தனர். சில நிமிடங்கள் எதிர்பார்ப்பில் கரைந்தோட அங்கே குறித்த பஸ் வந்தது. உடனே எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு அதில் ஏறினர். அவனும் ஏறினான். அவனுக்குமொரு இருக்கை கிடைத்து பஸ் புறப்பட்டது.

பஸ் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு வயோதிபர் இடையில் ஏறிக்கொண்டார். அதனைக் கண்டவன் அவனின் இருக்கையை அந்த வயோதிபருக்குக் கொடுத்து விட்டான்.

கொஞ்சம் தூரம் பஸ் சென்று கொண்டிருக்க, ஒரு பெண் தனது குழந்தையுடன் பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். ஆனால், யாருமே அப்பெண்ணுக்கு இருக்கையைக் கொடுக்கவில்லை. அதனால் அவனுக்கு அங்கிருப்பவர்கள் மேல் கோபம், கோபமாக வந்தது.

''சின்னப் பிள்ளையை வைத்துக் கொண்டு நிற்கிறாள். ஒருத்தனுக்கும் அனுதாபம் வரவில்லையா?'' என்று மனதிற்குள் ஏசினான்.

அங்கே ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். வாட்டசாட்டமான நல்ல ஆரோக்கியமான உடலமைப்பைக் கொண்டவன். அதைப் பார்த்தவன்

''இவன் இருக்கையை கொடுக்கலாமே...'' என்று நினைத்துக் கொண்டு அவனை மனதிற்குள் திட்டித் தீர்த்துக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் அப்பெண்ணிடமிருந்து பிள்ளையை அந்த இளைஞன் வாங்கிக்கொண்டான்.

பிள்ளையை வாங்கியதைவிட அவ்விடத்தைக் கொடுத்தாலாவது தாயும், பிள்ளையும் உட்கார்ந்திருப்பாங்களே என்று ஆதங்கப்பட்டான்.

அந்த இளைஞன் இறங்கவேண்டிய இடம் வந்தது. அவன் இறங்கிக்கொள்ள ஆயத்தமானான். உடனே அப்பெண்ணிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு கீழே குனிந்து எதையோ கையிலெடுத்தான். பின்னர்தான் எடுத்தது ஊனறுகோலென்றும், அவன் ஊனமுற்றவனென்றும் தெரிந்தது.

''ஐயய்யோ... வீணாய் அவனைத் திட்டித் தீர்த்து விட்டோமே... அதற்குக் காரணம் வீணே நான் அவன் மேல் பட்ட சந்தேகம்தானே..!

நாம் ஒன்னு நெனைக்கறோம். வேறொன்று நடக்குது. அதனால நாம எப்படி மனம் சொல்றதை வச்சி சந்தேகம் கொள்வது? அதுமாதிரிதானே லதாவோட கடிதமுமிருக்கும். அதனால் இனிமேல அவமேல சந்தேகப்படக் கூடாது. என்ன நடந்தாலும் பரவாயில்லை. நடக்கிறது நடக்கட்டும்''

என்று தனது மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டான். வழமைபோலவே அவனைக் கண்ட மனைவி முக மகிழ்ச்சியோடு

''என்னங்க... விஷயம் தெரியுமா?

நேற்று ஒரு கடிதம் காட்டினேனில்ல... அது யாருடையதுனு கண்டுபிடிச்சிட்டேன். அது பக்கத்து வீட்டு மாமியோட மகள் லதாவுக்கு அவனோட காதலன் எழுதியது. பையன் வந்து யார்கிட்டையோ லதா வீடுனு கேட்க என்னைத்தான் கேட்கிறான்னு நெனைச்சு இதை காட்டிக் கொடுத்திருக்காங்க. அந்த லதாதான் நானென்று நெனைச்சி என்கிட்ட கொடுத்திட்டுக் போயிருக்கான்'' என்றாள்.

அதைக் கேட்டவனுக்கு தன் மேலேயே கோபம் வந்தது.

''ச்சே..! இப்படி ஒளிவுமறைவில்லாதவளை சந்தேகப்பட்டுட்டேனே... நல்லவேளை நான் சந்தேகப்பட்டது அவளுக்குத் தெரியாது'' என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

''அதை யாரு எழுதினதுனு கண்டு பிடிக்கத்தாங்க அந்தக் கடிதத்தை கிழிக்காமல் பத்திரமா வச்சிருந்தேன். அதுமாதிரி கண்டு பிடிச்சாச்சி. மற்றவங்களாயிருந்திருந்தால் எவ்வளவு சந்தேகப்படுவாங்க.

நீங்க கொஞ்சமும் சந்தேகமே படலையே...

நீங்க எனக்குப் புருஷனா கெடைக்க கொடுத்து வச்சிருக்கனும்'' என்று அவள் தன் மன ஆதங்கத்தை வெளியே கொட்ட, அதனைக் கேட்ட அவன் முகத்தில் நிறையவே அசடு வழிந்தது.

**முற்றும்**

# பாதையை மாற்றிய காஜல் அகர்வால்



தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பவர் காஜல் அகர்வால். தனது நீண்டகால காதலர் கவுதம் கிட்ச்லுவை திருமணம் செய்துகொண்ட பிறகு கதை தெரிவில் வித்தியாசம் காட்டி வருகிறார். கணவர், வேண்டாம் என்று ஒரு வார்த்தை சொன்னால் நடிப்புக்கு முழுக்கு போட்டுவிடுவேன் என்று காஜல் சமீபத்தில் தெரிவித்தார்.

காஜல் அகர்வால் தமிழ், தெலுங்கு தவிர்த்து இந்தி படங்களிலும் நடித்தார். ஆனால், கொலிவுட், டொலிவுட்டை போன்று அவரால் பொலிவுட்டில் முன்னணி நடிகையாக முடியவில்லை. இந்நிலையில், கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள ஒரு பொலிவுட் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். உமா என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கும் அந்தப் படத்தின் அனைத்து காட்சிகளும் மேற்கு வங்கம், கொல்கட்டாவில் படமாக்கப்படவிருக்கிறது.

உமா படத்திற்காக காஜலுக்கு ரூ. 2 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளது. காஜல் முதல் முறையாக ரூ. 2 கோடி சம்பளம் வாங்குகிறார். முன்னதாக கங்கனா ரனாவத் நடிப்பில் வெளியான குயின் இந்தி படத்தின் தமிழ் ரீமேக்கான பாரீஸ் பாரீஸ் படத்தில் காஜல் நடித்தார். அவரை மையமாக வைத்து எடுக்கப்பட்ட அந்த படம் இன்னும் ரிலீசாகவில்லை. இதையடுத்தே அவர் ஹீரோயினை மையமாக வைத்து எடுக்கப்படும் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்தார். பாரீஸ் பாரீஸ் படத்தை அடுத்து தன்னை தேடிவந்த 6 பட வாய்ப்புகளை ஏற்க மறுத்தார். அவை அனைத்துமே ஹீரோயினை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படங்கள்.

காஜல் தற்போது சிரஞ்சீவியுடன் சேர்ந்து ஆச்சார்யா தெலுங்கு படத்தில் நடித்து வருகிறார். மேலும் நாகர்ஜுனா ஜோடியாக ஒரு படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் ஜோடியாக நடித்துவந்த இந்தியன் 2 பட வேலை பாதியில் நிற்கிறது. இந்தியன் 2 படப்பிடிப்பு மீண்டும் எப்பொழுது துவங்கும் என்று தெரியவில்லை. இந்நிலையில், பாதையை மாற்றி கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் படங்களிலும் நடிக்க தொடங்கியிருக்கிறார்.

# கமல் கைவசம் உள்ள படங்கள்



நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் கடைசியாக வெளிவந்த படம் 'விஸ்வரூபம் 2'. இப்படம் கடந்த 2018ஆம் ஆண்டு வெளியானது. அதன்பிறகு அவர் அரசியலில் கவனம் செலுத்தியதால் படங்கள் வரவில்லை. தற்போது அவர் அடுத்தடுத்து 6 படங்களில் நடிக்க தயாராகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கமல்ஹாசன் ஏற்கனவே நடித்துவந்த 'இந்தியன் 2' படம் வழக்கில் சிக்கியுள்ளது. விரைவில் இதன் படப்பிடிப்பு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'விக்ரம்' படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகி உள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பும் விரைவில் தொடங்க இருக்கிறது.

மலையாளத்தில் வெற்றிபெற்ற 'திரிஷயம் 2' ஆம் பாகத்தை தமிழில் 'பாபநாசம் 2' என்ற பெயரில் ரீமேக் செய்து நடிக்கவும் கமல்ஹாசன் திட்டமிட்டுள்ளார். இதில் கமல்ஹாசன் ஜோடியாக நடிக்க நதியாவிடம் பேசி வருவதாக கூறப்படுகிறது.

அதேபோல் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்திலும் கமல் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது 'துப்பாக்கி' படத்தின் 2ஆம் பாகமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும் வெற்றிமாறன் இயக்கத்திலும் கமல்ஹாசன் நடிக்க இருப்பதாகவும், இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடப்பதாகவும் புதிய தகவல் பரவி வருகிறது.

இதுதவிர, 'தலைவன் இருக்கின்றான்' படத்தையும் கமல் இயக்கி நடிக்க திட்டமிட்டு வருகிறாராம். விரைவில் இந்தப் படங்கள் குறித்த அறிவிப்புகள் அடுத்தடுத்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# விஜய்தான் என்னுடைய காதல் : ராஷ்மிகா



தமிழ்ச் சினிமா ரசிகர்களிடம் 'சுல்தான்' படத்தின் மூலம் பிரபலமானவர் ராஷ்மிகா மந்தனா. ஆனால், இவர் ஏற்கனவே தெலுங்கு படங்களின் மூலம் பிரபலமானார். அதுவும் 'கீதா கோவிந்தம்' திரைப்படத்தின் மூலம் தெலுங்கு தாண்டி தமிழ் ரசிகர்களிடமும் மிகவும் பிரபலமடைந்து ஒரு கட்டத்திற்கு பிறகு ராஷ்மிகா எப்போது தமிழ் சினிமாவில் நடிப்பாரென அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். இவரது நடிப்பில் வெளியான 'சுல்தான்' திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றாலும் ரசிகர்கள் ராஷ்மிகா நடிப்பை கொண்டாடினர்.

இந்நிலையில், ராஷ்மிகா தனது சமூக வலைத்தள பக்கத்தில் ரசிகர்களின் கேள்விக்குப் பதிலளித்து வந்தார். அப்போது, விஜய்யுடன் எப்போது நடிப்பீர்கள்? என்று ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, மிக விரைவில் என்று பதிலளித்துள்ளார். மற்றொரு ரசிகர், தளபதியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லுங்கள்? என்று கேட்டதற்கு "விஜய் என்னுடைய காதல்" என்று பதிலளித்துள்ளார்.

# குழந்தைகளுக்காக கொரோனா விடுதி அமைக்கும் நடிகை



ரஜினிகாந்துடன் 'காலா' படத்தில் நடித்து பிரபலமானவர் ஹியூமா குரேஷி. இவர் தற்போது 'வலிமை' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

இந்தியிலும் முன்னணி நடிகையாக இருக்கும் ஹியூமா குரேஷி, தொண்டு நிறுவனம் தொடங்கி கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் மூலம் உதவிகள் வழங்கி வருகிறார்.

இந்நிலையில், கொரோனா 3 ஆவது அலையை எதிர்கொள்ள குழந்தை களுக்கான தனி வார்டு ஒன்றை உருவாக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து ஹியூமா குரேஷி கூறும்போது: "எனது தொண்டு நிறுவன அமைப்பு மூலம் இதுவரை 100இற்கும் மேற்பட்ட ஒக்சிஜன் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. கொரோனாவுக்கு எதிரான யுத்தம் இன்னும் முடியவில்லை.

கொரோனா 3ஆவது அலை குழந்தைகளை அதிகம் பாதிக்கும் என்று கூறப்படுகிறது. எனவே, அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும். இரண்டாவது அலையைபோல் நிலைமை மோசமாவதுவரை பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. டில்லியில் குழந்தைகளுக்காக 30 படுக்கைகள்கொண்ட கொரோனா வார்டை உருவாக்கி வருகிறோம்" - என்றார்.

# தொகுப்பாளராக களமிறங்கும் நடிகர் அர்ஜுன்?



நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் என பன்முகத் திறமைகொண்டவராக விளங்கும் அர்ஜுன், விரைவில் தொகுப்பாளராக களமிறங்கவுள்ளாராம்.

சர்வதேச அளவில் மிகவும் பிரபலமான 'சர்வைவர்' நிகழ்ச்சி விரைவில் தமிழில் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிகழ்ச்சியின் விதிப்படி, ஆளில்லாத தனித்தீவில் போட்டியா ளர்களை தங்கவைத்து, அவர்களுக்கு விதவிதமான டாஸ்க்குகள் கொடுக்கப்படும். அவை அனைத்தையும் வெற்றிகரமாக கடந்து இறுதிவரை தாக்குப்பிடிக்கும் போட்டியாளரே வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். இதில் வெற்றிபெறுபவருக்கு பெருந்தொகை பரிசாக வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்க சிம்பு, சிவகார்த்திகேயன் ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்ட நிலையில், தற்போது ஆக்ஷன் கிங் அர்ஜுனிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இது சாகச நிகழ்ச்சி என்பதால், அவர் இதற்கு பொருத்தமாக இருப்பார் எனக்கருதி அவரை ஒப்பந்தம் செய்ய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் முயற்சித்துவருவதாக கூறப்படுகிறது. இது உறுதியானால் அவர் தொகுத்து வழங்கும் முதல் நிகழ்ச்சியாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனியர் ஹீரோக்களுடன் ஜோடி போடும் சோனாக்ஷி



பிரபல பொலிவூட் நடிகை சோனாக்ஷி சின்ஹா. இவர் தமிழில் ரஜினியுடன் இணைந்து 'லிங்கா' படத்தில் நடித்திருந்தார். தற்போது நாகார்ஜுனாவுக்கு ஜோடியாக நடிப்பதன் மூலம் தெலுங்கில் என்ட்ரி கொடுக்கவிருக்கிறார். தெலுங்கில் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் நாகார்ஜுனா இரட்டை வேடங்களில் நடித்து வெளியாகி ஹிட்டான படம் சோக்காடே சின்னி நாயனா.

இந்நிலையில், இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்திற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் நாகார்ஜுனாவுக்கு ஜோடியாக நடிப்பதன் மூலம் பொலிவூட் நடிகை சோனாக்ஷி தெலுங்கு திரையுலகில் கதாநாயகியாக அடியெடுத்து வைக்க இருக்கிறார். சோனாக்ஷி சின்ஹாவை சிரஞ்சீவிக்கு ஜோடியாக நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடக்கிறது.

சிரஞ்சீவி தற்போது கொரடலா சிவா இயக்கத்தில் 'ஆச்சார்யா' படத்தில் நடித்து வருகிறார். அந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்கிறார். 'ஆச்சார்யா' படத்தை முடித்ததும் மோகன்ராஜா இயக்கத்தில் 'லூசிபர்' தெலுங்கு ரீமேக்கில் நடிப்பார் சிரஞ்சீவி என்று கூறப்பட்டது. ஆனால், அந்த படப்பிடிப்பை ஆரம்பிக்க தாமதமாகியிருக்கிறது. இந்நிலையில், நாட்களை வீணடிக்காமல் வேறு ஒரு படத்தில் நடிக்க முடிவு செய்திருக்கிறார் சிரஞ்சீவி. பாபி இயக்கத்தில், மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் நடிக்கிறார் சிரஞ்சீவி.

அந்தப் படத்தில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக நடிக்குமாறு பொலிவூட் நடிகை சோனாக்ஷி சின்ஹாவிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அவரும் சம்மதம் தெரிவித்துவிட்டாராம். ரஜினி, நாகார்ஜுனாவை தொடர்ந்து மீண்டும் ஒரு சீனியர் ஹீரோவுடன் ஜோடியாக நடிக்கிறார். தெலுங்கு திரையுலகில் சீனியர் ஹீரோக்களுக்கு ஜோடியாக நடிக்க இளம் நடிகைகள் தயங்குகிறார்கள். சீனியர்களுடன் ஜோடி சேர்ந்தால் இளம் ஹீரோக்கள் ஒதுக்கிவிடுவதால அந்த தயக்கம். ஆனால், சோனாக்ஷி துணிச்சலாக இந்த முடிவை எடுத்துள்ளார்.

# நவம்பர் 4இல் வெளியாகும் அண்ணாத்த

சிவா இயக்கத்தில் ரஜினிகாந்த், நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், குஷ்பு, மீனா, ஜெகபதிபாபு, யோகி பாபு என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துவரும் படம் அண்ணாத்த. குடும்ப சென்டிமென்ட் நிறைந்த கொமர்ஷியல் படமாக தயாராகி வருகிறது. கொரோனா, ரஜினியின் உடல்நல பாதிப்பு என தடைப்பட்டு தடைப்பட்டு நடந்துவந்த இதன் படப்பிடிப்பு சமீபத்தில் முடிந்தது. இப்பட பணிகளை முடித்துக் கொடுத்துவிட்டு அமெரிக்கா சென்றுள்ளார் ரஜினி. ஜூலை இரண்டாவது வாரம் சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என படக்குழு முன்னரே அறிவித்தது. தற்போது அதை மீண்டும் உறுதிசெய்துள்ளனர். அதாவது நவ. 4இல் படம் திரைக்கு வருவதாக ஒரு போஸ்டரை வெளியிட்டு அறிவித்துள்ளனர். அந்த போஸ்டரில் ரஜினி திரும்பியிருப்பது போன்று உள்ளது.

கொரோனா இரண்டாவது அலை காரணமாக தமிழகத்தில் மூடப்பட்ட திரையரங்குகள் இம்மாதம் மத்தியில் அல்லது அடுத்த மாதம் 50 சதவீதம் இருக்கைகளுடன் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7